

கல்கி
LKI 7.11.1965
35
காசு

உங்களுடைய கேசம் ஆரோக்யமாகவும்
பளபளப்புடனும் விளங்கும்


பிரில்க்ரீம்

தடவி நேர்த்தியாக தலையை வாரிக்கொண்டால்!



பிரில்க்ரீம் மட்டுமே

- அதிக எண்ணெய்ப்பற்று இல்லாமலும், தாறுமாறாக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
- மிகவும் சிக்கனமானது—ஒருமுறை தடவி வாரிக்கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
- உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக்கூடிய, ஆரோக்யமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, நேர்த்தியான கலவை வாய்ந்தது.
- உங்களுடைய கேசத்தின் இயற்கையான வண்ணத்தைப் பாதுகாக்கிறது.



எனவே இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!

உலக முழுவதிலும் லக்ஷகணக்கான நேர்த்தியான மனிதர்கள் இதையே உபயோகிக்கிறார்கள்

B/P/1/P/1/65 TM

கல்கி

பொருளடக்கம்




நீ,
நல்லவனுயிரு.
அப்போது
என்னைப்போலவே
நீயும்
ஏகாங்கியாகிவிடுவாய்.

— மார்க் ட்வெயின்

விசுவாவசு ஐப்பசி 22 - நவம்பர் 7

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


ஐயோ! வர வரக் கஷ்டமாகிக் கொண்டு வருகிறதே!
சுகர்ணர்
ராணுவம்
கம்யூனிஸ்ட் கட்சி
PK



மலர் 25 | இதழ் 15

பாதுகாப்புச் சபையின் கடமை

ஐ. நா. பாதுகாப்புச் சபை தற்போது செய்ய வேண்டியது என்ன என்பதைப் பிரதமர் ஸ்ரீ லால் பஹாதுர் சாஸ்திரி அவர்கள் அக்டோபர் 24-ந் தேதி யன்று வெகு தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பாகிஸ்தான் ஊடுருவல்காரர்களை அனுப்பி வைத்துத் தனது ஆக்கிரமிப்புத் திட்டத்தை உருவாக்கத் தொடங்கியதிலிருந்துதான் இன்றைய இந்தியா — பாகிஸ்தான் சர்ச்சையும் சண்டையும் எழுந்துள்ளன. எனவே இப்போது உலக அரங்கம் செய்ய வேண்டியதெல்லாம் சமீபத்திய போரை நிறுத்திப் பாகிஸ்தான் படைகள் ஆக்கிரமித்த பகுதியிலிருந்து பின்வாங்கிக் கொள்ளுமாறு செய்வதே யாகும். இப் பொறுப்பை உணர்ந்து ஐ. நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய போர்நிறுத்தத் தீர்மானத்தை இந்தியா பூரணமாக வரவேற்றுச் செயல்படுத்தி வருகிறது. எனினும் பாகிஸ்தான் மீண்டும் மீண்டும் சுமார் அறுநூறு முறைக்கு மேல் போர்நிறுத்தக் கோட்டைக் கடந்து வந்து துராக்கிரகம் செய்துள்ளது. இதனைத் தடுத்து, உலக அரங்கின் போர் நிறுத்தத் தீர்மானத்தை அந் நாடு மதிக்குமாறு செய்வதே இப்போது பாதுகாப்புச் சபையின் கடமை. இதைத்தான் பிரதமர் சென்ற 24-ந் தேதி யன்று எடுத்தியம்பி யிருக்கிறார்.

உடனடியாகச் செய்ய வேண்டியதை மறந்து, காச்மீரப் பிரச்னையை உலக அரங்கில் இழுத்துப் போட்டு, தற்போது பாகிஸ்தான் நடத்தியுள்ள ஆக்கிரமிப்பை மூடி மறைக்கப் பார்ப்பது சிறிதும் அழகல்ல. ஸ்ரீ லால்பஹாதுர் அவர்கள் விதித்துள்ள வரம்புக்கு அதிகமாகச் சென்றால், பாதுகாப்புச் சபை பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புக்கு ஊக்கம் அளிப்பதற்கு ஒப்பாகும் என்று ராஜாஜி கருதுகிறார். காச்மீரில் வாக்கு எடுப்பதைப் பற்றிப் பாகிஸ்தானுக்கு என்ன உரிமை? ஒன்றுமில்லை. காச்மீரத்தில் பொதுஜன வாக்கெடுப்பு நடத்துவது பற்றி 1947ல் இந்திய சர்க்கார் வாக்களித்தது உலக அரங்கத்திடமும் காச்மீர மக்களிடமும்தானேயொழியப் பாகிஸ்தானிடம் அல்ல. எனவே இவ்விஷயத்தில் வற்புறுத்திப் பேசுவதற்குப் பாகிஸ்தானுக்கு உரிமை கிடையாது.

இவ்விதழ் வெளியாவதற்குள் ஒருகால் பாதுகாப்புச் சபையின் முடிவு வெளியாகலாம். போர் நிறுத்தத்தில் இந்தியா கொண்டுள்ள உண்மையான அக்கறையையும், பாகிஸ்தானின் ஏமாற்று யுக்திகளையும் உலக நாடுகள் புரிந்துகொண்டு, ஆக்கிரமிப்பாளரையும் நம்மையும் ஒரே தராசில் வைத்து எடை போடாமல், உடனடிச் சமாதானத்துக்கு உதவி புரியும் நடவடிக்கையாகவே உலக அரங்கின் முடிவு அமையும் என்று நம்புவோமாக!

இந்தியா - பாகிஸ்தான் இரு தரப்பிலும் நூற்றுக் கணக்கான மக்கள் மாண்டுவந்த 'அசல்' யுத்தம் முடிந்ததற்கு ஐ. நா. தீர்மானம்தான் காரணம். இதனால் ஐ. நா. வின் அந்தஸ்தே உயர்ந்துவிட்டது எனலாம். 'அசல்' யுத்தத்தை முடித்து வைத்துப் பெருமை கொண்ட ஐ. நா. ஸ்தாபனம், பாகிஸ்தானின் விஷமங்களுக்கு ஆட்படாமல், யுத்தத்தின் நிழலாகத் தற்போது பாகிஸ்தான் நிகழ்த்தி வரும் ஊடுருவல்களையும் சக்திவாய்ந்த முறையில் தடை செய்வதற்கு வழி காணும் என்று நம்புகிறோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப்
பெற்ற
தாயென்று கும்பிடடி —
பாப்பா
— பாரதியார்

ராஜாஜியின் கருத்துக்கள்

ஜனநாயகம் முறைப்படி நடைபெறுவதற்குச் சக்தி வாய்ந்த ஓர் எதிர்க் கட்சி அவசியம் என்பதை எல்லா அரசியல் சிந்தனையாளர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆள்கிற கட்சியின் தவறுகளைக் கண்டித்து அதனைத் தடுப்பது எதிர்க் கட்சியின் பொறுப்பு. அதிகாரத்திலிருப்பவர்கள் தமது ஸ்தானத்தைப் பற்றக் கூடிய எதிர்க் கட்சி உள்ளது என்ற பயம் கொண்டிருந்தாலே தூய்மையான நிர்வாகம் நடைபெறும். சர்க்கார் சிப்பந்திகள் கட்சிச் சார்பு இல்லாமல் திறமையுடனும், உண்மையுடனும் செயலாற்றுவதும் ஜனநாயகத்துக்கு அவசியமாகும்.

தேர்தலில் மெஜாரிட்டி பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்ற கட்சி தனது கொள்கைகளை அமுலாக்கும்போது, கட்சி முன்னேற்றத்துக்கு உதவியவர்களுக்கு மட்டுமின்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் அவற்றின் மூலம் ஒருசீரான பலன் கிடைக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு 'கொள்கைகள்' என்பன 'காரியங்கள்' என்ற உருவை அடையும் போது அவற்றைக் கட்சிச் சார்பற்ற திறமைசாலிகள்தான் ஏற்று நடத்த வேண்டுமேயன்றி, கொள்கையை வகுக்கும் கட்சிக்காரர்கள் அல்ல.

எனவே ஏக-கட்சி ஏகாதிபத்தியம் என்கிற போலி ஜனநாயகமின்றி, உண்மையான ஜனநாயகம் நிலவ வேண்டுமாயின் இரண்டு விஷயங்கள் தேவையாகும். ஒன்று: சட்டசபை, பத்திரிகைகள், பொது மேடை இவை மூலம் செயல் புரிகிற சக்தி வாய்ந்த எதிர்க் கட்சி. இரண்டு: கட்சிச் செல்வாக்குக்கு உட்படாமல் சுதந்திரமாக இயங்கும் திறம் பெற்ற சர்க்கார் நிர்வாக இயந்திரம். இவ்விரண்டில் ஏதேனுமொன்று இல்லாவிடினும் — அல்லது போதுமான சக்தி பெற்றிராவிடினும்— தேசத்தின் ஆட்சி ஒரே கட்சியின் வசமாகி விடுகிறது. ஆள்கிற கட்சி தன்னையே அதிகாரத்தில் நிரந்தரமாக இருத்திக்கொள்ள முயலும் இம்முறையின் பிரத்தியேகப் போக்கையொட்டி அதனைக் கம்யூனிஸம், சோஷலிஸம், நாஜிக் கொள்கை, ஃபாஸிஸம் என்று பல பெயர்களில் குறிப்பிடுகிறோம்.

விசேஷ அநுகூலங்கள் பெற்ற ஓர் அரசியல் கட்சி ஆட்சியில் தன்னை நீண்ட காலம் நீடித்துக்கொண்டுவிட்டால் ஜனநாயகத் தத்துவங்களை மறந்தே விடுகிறது. எதிர்க் கட்சிகளைத் தேச விரோதிகள் போலவும் அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் போலவும் கருதத் தொடங்குகிறது. அதிகாரத்திலுள்ளபடியால் நாட்டுப் பொருளாதாரம் முழுவதையும், தன் கைவசமாக்கிக் கொண்டு நாட்டின் உற்பத்தி, விநியோகம் இவற்றில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்வையும் சொத்தையும் கட்டுப்படுத்துகின்ற ஆளும் கட்சிக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்க் கட்சிகள் பெரும்பாடுபட நேருகிறது. ஆள்கிற கட்சியை எதிர்ப்பதென்பது சர்வ வியாபகமான ராணுவத்தையும், போலீஸையும் கைக்கொண்டுள்ள எதிரியுடன் போரிடுவது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினமாகிறது.

ஜனநாயகத்தின் ஆதாரத் தேவைகளை ஒப்புக்கொண்டால் ஆட்சியிலுள்ள சர்க்கார் அரசியல் சாஸனத்துக்கு உண்மையாகவே உயிரளித்து எதிர்க் கட்சிகளின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். குறைந்தபட்சம் எதிர்க் கட்சிகள் இயல்பாகவும் நியாயமாகவும் அடைகிற வளர்ச்சியைத் தடுக்காமலாவது இருக்க வேண்டும். ஆள்கிற கட்சி தனது பிரத்தியேக உரிமைகளைச் செயலாக்கச் சுதந்திரம் பெற்றிருப்பது உண்மையே; எனினும் அதே சமயத்தில் அரசியல் சாஸனத்தை மூலத்திலுள்ளவாறே பின்னமுறாமல் காக்கும் பொறுப்பும் அதற்கு உண்டு. 'எதிர்க் கட்சி

யின் வளர்ச்சிக்கு உதவுவது என் வேலையல்ல' என்று அது கூறமுடியாது.

இதெல்லாம் ஏதோ ஏட்டளவில் நிற்கும் கலாசாலைக் கட்டுரை போல் தோன்றக்கூடும். ஆயினும் நிகழ்கால விவகாரங்களில் நேரடியாகப் பொருத்தி உடனுக்குடன் நடைமுறையாக்க வேண்டிய உண்மைகளே இவை என்பதை நம் நாட்டு அரசியலில் ஈடுபாடுள்ள அனைவரும் உணருவர். ஆள்கிற கட்சியின் போக்கைச் சமன் செய்யுமளவுக்குச் சக்தி வாய்ந்த எதிர்க் கட்சி உருவாக வழி செய்யாததால்தான் மோசமான அரசாட்சியைப் பெற்றிருக்கிறோம். அதுமட்டுமல்ல. ஆள்கிற கட்சிக்குள்ளேயே தருமமும் ஒழுக்கமும் குன்றிவிட்டன. இவ்விஷயமாக அக்கட்சியிலுள்ள நல்ல மனிதர்களே கவனம் செலுத்தத் தொடங்குமளவுக்கு நிலைமை முற்றிவிட்டது.

ஃஃஃ

அரசாங்க நிருவாகத்தில் நடைபெறும் ஒழுங்கீனங்களை விசாரித்துத் தீர்ப்புக் கூற 'ஆம்பட்ஸ்மான்' போன்றதொரு சுதந்திர அமைப்பை நிறுவுவதற்குத் தில்லியின் உள்துறை மந்திராலயம் பலமாக ஆட்சேபம் தெரிவித்திருக்கிறதாம்.

இந்தியா மிகப் பெரிய நாடானபடியால் மத்திய 'ஆம்பட்ஸ்மான்' ஒன்றைக் கொண்டு நிருவாகப் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க இயலாது என்பது உள்துறை மந்திராலயத்தின் வாதம். ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஓர் ஆம்பட்ஸ்மானும், இவற்றுக்கு மேலாக ஒரு மத்திய ஆம்பட்ஸ்மானும் அமைக்கலாம் என்பதே வாதத்துக்கு விடையாகும்.

இச்சமயத்தில், மத்திய ஆம்பட்ஸ்மான் சாத்தியமில்லை என்று கூறுபவர்களிடம் இன்னொரு கேள்வியும் கேட்கத் தோன்றுகிறது. மிகப் பெரும் ஜனத்தொகை கொண்ட இவ்வளவு பெரிய நாட்டுக்கு மத்திய ஸ்தாபனம் ஒன்றிலிருந்தே திட்டங்கள் தீட்டுவதும், இம்மாபெரும் தேசத்தின் பரந்து விரிந்த தொழில்களைச் சர்க்கார் சோஷலிஸத்தின் கீழ் கொண்டு வருவதும் சாத்தியம் என்று மட்டும் அரசாங்கம் எப்படி நினைக்கிறதோ?

மனமிருந்தால்தான் வழி பிறக்கும். மனமில்லாவிடில் ஆட்சேபிப்பதற்கு எத்தனையெத்தனையோ காரணங்கள் தோன்றிக்கொண்டுதான் இருக்கும்.

ஃஃஃ

அமெரிக்கா தான் பெற்றுள்ள பெரும் அந்தஸ்துக்குக் கூலியாக உலகத்தின் கண்டனங்களைச் சகித்துக் கொள்ளக் கற்க வேண்டும் என்று ஓர் அமெரிக்க நிருபர் எழுதியுள்ளார். இதே போல் ஒருவர் தமது உண்மையான கருத்துக்களை வெளியிடுவதற்கும் பின்பற்றுவதற்கும் உரிய கௌரவத்தை அநுபவிக்க விரும்பினால், ஒரே போக்கில் செல்கிற பலருடைய கண்டனத்தைச் சகிக்கக் கற்றேயாக வேண்டும். எனக்கு அறிவும் செல்வாக்கும், தீர்க்க தரிசனமும் — ஏன், தேச பக்தியும்கூட — இருப்பதாக மக்கள் ஒப்புக்கொள்கிறார்கள். எனினும் என் அபிப்பிராயங்களே சரியாக இருக்கக்கூடும் என்று ஒப்பாவிடினும், அவை சரியாக இருக்க ஹேதுவேனும் உண்டு என்பதைக்கூட ஒப்ப மறுக்கிறார்கள்.

பேராசிரியர் மணிவிழா

கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர், பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்களுக்கு அறுபது பிராயம் நிறைந்துவிட்டது என்று மணிவிழாக் கொண்டாடி உலகுக்கு அறிவித்துவிட்டனர். ஆனால், பேராசிரியர் அவர்களை நேரில் கண்டவர்களோ, அவரிடம் அளவளாவியவர்களோ, நாற்பதாண்டுகளுக்கு மேலாக அவரிடம் பழகியவர்களோ கூட, அவருக்கு அறுபது வயது ஆகிவிட்டது என்று சொன்னால் நம்ப மாட்டார்கள். அவர் பேச்சிலும், எழுத்திலும், நண்பர்களுடன் பழகும் இனிய பாங்கிலும் ''என்றும் இளமை'' தோன்றும் பண்பையே அன்பர்கள் கண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவரைப்பற்றி நம்ப முடியாத ஒன்றை நம்பச் செய்திருக்கிறார்கள் கல்கத்தா எழுத்தாளர் சங்கத்தினர்.



அ. சீநிவாசராகவன்

ஆனாலும் பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்கள் தமிழுக்குத் தமது எழுத்து மூலமும் பேச்சின் மூலமும் செய்துள்ள சேவையையும் அவர் தமிழ்த் தாய்க்கு உலக இலக்கிய அரங்கில் ஏற்றம் தேடித் தந்த சீர்மையையும் நினைத்துப் பார்க்கில் 'இது எத்தனை எத்தனையோ ஆண்டுகளில்தான் செய்து முடிக்கக் கூடிய பணி; இதனைச் செய்தவருக்கு அறுபது பிராயம் நிறைந்துதான் இருக்கவேண்டும்' என்று உறுதி கொள்வோம். தமிழ் கூறும் நல்லுலகம் அவருக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறது என்பதை எளிதில் சொல்லிவிட முடியாது.

கல்கி நேயர்கள் 'இலக்கியச் செல்வம்', 'குருதேவரின் குரல்' ஆகிய பல தலைப்புகளில் பலமொழி இலக்கிய நயங்களையும் டாகூரின் கவிதை நயங்களையும் பேராசிரியர் வாரி வழங்கியதை அநுபவித்தவர்கள். சென்னை சர்வ கலா சாலையில் ''கல்கி'' நினைவுச் சொற்பொழிவுகளைத் தொடங்கி வைத்து அரிய இலக்கிய உரை நிகழ்த்தியவர் திரு அ. சீ. ரா.

இலக்கியமே மூச்சாகவும் பேச்சாகவும் கொண்டுள்ள பேராசிரியர், தமிழ்த் தாயின் அருளாலே பன்னெடுங் காலம் வாழ்ந்து தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்ற வேண்டுமென்று இறைஞ்சுகிறோம்.

பொருளியல் நிபுணர் பிரிவு

அவர் எல்லாரையும்போல் பணம் பண்ணுவதில் மட்டும் குறியாக உள்ள தொழிலதிபராக இருந்திருந்தால் பாரத நாட்டில் அவர் மறைவு குறித்து இவ்வளவு அதிர்ச்சியும், துயரமும் யாருக்கும் ஏற்பட்டிராது. அவர் பாரத நாட்டு மக்களின் சுபிட்சத்திலும் தொழில்வளர்ச்சியிலும் உள்ளார்ந்த அக்கறை கொண்டவராகவும், அந்த அக்கறையை ஆக்கரீதியில் காட்டும் பொருளியல் அறிவு பெற்றவராகவும் வாழ்ந்தார். இதனாலேயே அவரது பிரிவு பலருக்குத் துயரமளித்துள்ளது. பம்பாய் தொழில் பிரமுகர் திரு ஏ. டி. ஷராப் அவர்களின் மறைவைக் குறித்துத்தான் சொல்கிறோம். அரசாங்கத்தின் தொழில் விஸ்தரிப்புக் கொள்கை பாரதநாட்டின் தொழில் வளர்ச்சியையே கொன்று விடும் என்று முதன் முதலில் குரல் கொடுத்து அதற்காக வேண்டிப் பொதுஜன அபிப்பிராயம் திரட்டச் சுதந்திர தொழில் அரங்கம் (Forum of Free Enterprise) என்ற ஒரு ஸ்தாபனத்தையும் ஏற்படுத்தியவர் ஏ. டி. ஷராப் அவர்கள். தமது தீரமான போக்கினால் பல தொழில் பிரமுகர்களுக்கும் தைரியத்தையூட்டி வந்தார்.



பங்கு மார்க்கெட், இன்ஷ்யூரன்ஸ், பாங்குகள், டாடா தொழிலகம் ஆகிய பல்வேறு தொழில், வியாபார ஸ்தாபனங்களில் முக்கியமான தலைமைப் பதவிகள் வகித்துச் சிறப்புப் பணியாற்றியவர் ஷராப். நுணுக்கமான பொருளாதாரக் கொள்கைகளையும் வரிவிதிப்பு முறைகளையும் பாமர மக்களும் எளிதில் புரிந்து கொள்ளுமாறு பேசக்கூடிய ஆற்றலும் பெற்றிருந்தார்.

சுதந்திரக் கட்சிக்குப் பக்க பலமாக விளங்கி, அதன் வளர்ச்சியில் அக்கறை காட்டி வந்தார்.

பாரதத் தாய் அவரது மறைவில் தனது சத்புத்திரர்களில் ஒருவரை இழந்துவிட்டாள் என்றே கூற வேண்டும்.

அடுத்த இதழில்:- பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை நமது வீரர்கள் முறியடித்த யுத்தகளத்துக்கு நேரில் சென்று சுற்றிப் பார்த்துத் தாம் கண்டறிந்தனவற்றைச் சுவைபடத் தருகிறார் திரு எஸ். எஸ். மாரிசாமி எம். பி.



ஸ்ரீ கூடலி சிருங்ககிரி ஸ்வாமிகள் விஜயம்

கடந்த சில மாதங்களாகச் சென்னைமா நகருக்கு ஒரு யோகம் அடித்து வருகிறது. யோகேசுவரரும், கருணாமூர்த்தியுமான ஸ்ரீ காமகோடி ஜகத்குரு அவர்கள் முதலில் இங்கு எழுந்தருளி அன்பு நெறி பரப்பினார்கள். மக்கள் மத்தியில் இருப்பினும் இல்லாத போதிலும் தமது திருவுள்ளத்தின் மத்தியில் மக்களின் நினைவை இருத்திக் கருணை பெருக்கி வரும் ஸ்ரீ பெரியவர்கள் தற்போது ஜனசஞ்சாரமற்ற காட்டுப்பள்ளியில் இருந்தபடியே சூக்ஷ்மமான முறையில் சர்வ ஜனங்களின் க்ஷேமத்துக்காகவும் தவயோக பூஜைகள் புரிந்து வருகிறார்கள். அவர்கள் மீண்டும் நம் சிற்றறிவுக்கு எட்டும் வகையில் ஸ்தூலமாகவே ஜன சமூகத்திடை வந்து சென்னை மாநகரில் முகாமிருக்கப் போகிறார்கள் என்றும் ஆவலுடன் நம்பப் படுகிறது. இதனிடையே சுமார் ஒரு மாத காலமாக ஸ்ரீ சிருங்ககிரி பீடாதிபதிகள் இங்கு வந்து தங்கி நமது மக்களின் ஆஸ்திக சிந்தனையை வளர்த்து வருகிறார்கள். தற்போது ஸ்ரீ கூடலி சிருங்ககிரி சங்கராசாரிய ஸ்வாமிகளும் சென்னையில் மயிலை சங்கராலயத்தில் எழுந்தருளியிருப்பதைப் பார்க்கும் போது இந்நகருக்கு ஏதோ ஆஸ்திக யோகம் அடிப்பதாகவே தோன்றுகிறது.

ஆதிசங்கர பகவத் பாதரவர்களின் அத்வைத சித்தாந்தத்தைப் பரப்பி வரும் புராதனமான மடங்களில் ஒன்று ஸ்ரீ கூடலி சிருங்ககிரி மடம். இம்மடத்தின் இன்றைய அதிபதிகளாக விளங்கும் ஸ்ரீ சச்சிதானந்த சங்கர பாரதி ஸ்வாமிகள் கல்வியாலும், தவ ஒழுக்கத்தாலும் சிறந்தவர்கள்; நாட்டின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்து ஆஸ்திகத்துக்கு வளர்ச்சியளித்து வருகிறவர்கள்; வேத வாழ்வு நிலைபெறுவதற்காக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஆதரவு அளித்து வருகிறவர்கள்; பீடத்தின் அதிஷ்டான தேவதையர்க்குத் திவ்வியமான பூஜை புரிந்து மக்களின் மனத்தை ஈர்ப்பவர்கள்; அரிய முறையில் உபந்நியாசங்கள் புரிந்து நல்லறிவு தருகிறவர்கள். இப்பேர்ப்பட்ட ஸ்வாமிகள் தற்போது சென்னை மக்களுக்குப் பக்தியும் ஞானமும் வழங்கி வருகிறார்கள். அவர்களைப் பணிந்து வணங்குகிறோம்.

பல பீடங்களைச் சேர்ந்த ஆசாரியர்கள் திக்விஜயம் நிகழ்த்தி வரும் தற்காலத்தில், 'ஒருவரையேதான் குருவாக வரிக்க வேண்டும் என்கிற நிர்ப்பந்தமில்லை; நல்லறிவைப் போதிக்கக் கூடிய அனைவரையும் குருவாகக் கொண்டு போதனைகளைக் கிரகிக்க வேண்டும்' என ஸ்ரீ சச்சிதானந்த சங்கர பாரதி ஸ்வாமிகள் தெளிவு தந்துள்ளார். 'பீடங்களைப் பற்றியும், பீடாதிபதிகளைப் பற்றியும் கண்டனங்கள் எழுப்புவது தருமப் பிரசாரத்துக்கு இடையூறு விளைவிப்பதேயாகும். ஸ்ரீ சங்கரரின் நாமத்தைத் தாங்கும் எல்லா மடங்களின் ஆசாரியர்களும் ஒன்றுகூடி ஏக மனதாக வேதாந்தத்தைப் பரப்ப வழி காண்பதே இன்றைய தேவை' என்று மொழிந்திருக்கிறார். இப்பெரியாரின் சென்னை விஜயத்தினால் சமயப் பிணக்குகள் மறைந்து, சத்தியம் உறுதி பெறும் என்று நம்புகிறோம்.



ஸ்ரீ கூடலி சிருங்ககிரி பீடாதிபதிகளாகிய ஸ்ரீ சச்சிதானந்த சங்கர பாரதி ஸ்வாமிகள்

"ரெக்கரிங்" டெபாஸிட்டில் அக்கறை காட்டுகிறீர்களா?

உங்களுக்கு அதிக வட்டி அளிப்பதிலே நாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோம். தற்போது புது வழி யொன்றைக் கண்டுபிடித்திருக்கிறோம். "ரெக்கரிங்" டெபாஸிட் என்றால் ஒவ்வொரு மாதமும் ரூ. 10லிருந்து ரூ. 1000 வரை உங்கள் இஷ்டம்போல் 30, 40, 50 அல்லது 60 மாதங்களுக்கு எங்களிடம் டெபாஸிட்டு செய்யலாம். கால வரம்பு முடிந்ததும் நீங்கள் டெபாஸிட்டு செய்த பணத்தையும், 6½ சத விகிதம் வரை வட்டியும் சேர்த்துக் கொடுக்கிறோம். கீழ்க்கண்ட அட்டவணையைக் கவனியுங்கள். உங்களுடைய மாதச் சேமிப்பின்மீது நாங்கள் எவ்வளவு வட்டி கொடுக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். குறைந்த தவணைகளுடன் அதிக வட்டியை நாங்கள் அளிக்கிறோம்.

திருப்பி அளிக்கப்பட வேண்டிய மொத்தத் தொகை

மாதாந்திர தவணைத் தொகை ரூ.	30 தவணைகளில் சேரும் தொகை ரூ.	40 தவணைகளில் சேரும் தொகை ரூ.	50 தவணைகளில் சேரும் தொகை ரூ.	60 தவணைகளில் சேரும் தொகை ரூ.
10	323	443	568	709
20	646	886	1,136	1,418
30	969	1,329	1,704	2,127
40	1,292	1,772	2,272	2,836
50	1,615	2,215	2,840	3,545
60	1,938	2,658	3,408	4,254
70	2,261	3,101	3,976	4,963
80	2,584	3,544	4,544	5,672
90	2,907	3,987	5,112	6,381
100	3,230	4,430	5,680	7,090

மேற்கொண்டு விவரங்களுக்கு இன்றே வந்து விசாரிக்கவும்:

தி சென்ட்ரல் பாங்க்

ஆப் இந்தியா லிமிடெட்

CBI-26-65

பதிவுக் காரியாலயம்: மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்-1

F. C. கூப்பர், *ஜெனரல் மானேஜர்*



ஜனநாயக ஆட்சி நிகழ்ந்து வரும் நாட்டில் விவேகமான முறையில் தேச வாழ்வு அமைய வேண்டுமாயின் விஷய ஞானமுள்ள சமூக ஊழியர்கள் தோன்ற வேண்டும். அரசியலும் அரசியல் கட்சிகளும் ஒருபுறம் அவற்றுக்கே உரிய வழியில் செயலாற்றி வருகையில், மறுபுறத்தில் இவ்வித சார்புகளற்ற பெருமக்கள் ஒன்றுகூடிப் பிரச்னைகளை ஆராய்வதும் தங்களது அறிவாராய்ச்சியை மக்களிடையே பரப்புவதும் அவசியமாகும். நாட்டு வாழ்வில் தருமமும், ஆன்மிகமும் ஊறவேண்டும்.

இந்தச் சீரிய நோக்கங்களுக்குப் பெங்களூரில் அமைந்த கோகலே பொது விவகார நிலையம் தனது இருபதாவது ஆண்டு விழாவைச் சென்ற அக்டோபர் 17ந் தேதியன்று மைசூர் மகாராஜா அவர்களின் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடியது. அதன் நீண்டகால நற்பணிகளுக்கெல்லாம் இவ்வைபவம் ஓர் உருவகமாக அமைந்தது.

பண்டிகைக் கோலம் பூண்ட நிலையத்துக்கு முன்புள்ள திடற் பந்தலில் வேத கோஷத்தோடு இந்த ஆன்மிக — சமூக — கலாச்சார — ஸ்தாபனத்தின் ஆண்டு விழா நடைபெற்றது. நிலையத்தின் வளர்ச்சிக்கு மிகவும் உதவி புரிந்துள்ள ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் பிரார்த்தனைக்குப் பின் வரவேற்புரை நிகழ்த்திய ஸ்ரீ நாகேசுவர ஐயர், மைசூர் மன்னரவர்கள் நிலையத்துக்கு ரூ. 5,000 நன்கொடை வழங்கியுள்ளதாகவும், ராஜாஜியின் பெயரில் ஆண்டுதோறும் நிலையத்தில் என்டோமென்ட் விரிவுரை நிகழ்த்துவதற்காக ஸ்ரீ சதாசிவம் தம்பதியர் ரூ. 10,000 மூலதனம் அமைத்திருப்பதாகவும் மகிழ்ச்சி ஆரவாரத்தினிடையே அறிவித்தார்.

இருபதாவது ஆண்டு விழாவைப் பயன்படுத்திக்கொண்டு பொதுமக்கள் தங்கள் ஆதரவைத் தெரிவிக்குமுகமாக நிலையத்துக்கு நிதியம் திரட்டியிருந்தனர். இத்தொகையை நிலையத்தின் காரணபுருஷரும், காரியதரிசியுமான ஸ்ரீ டி. வி. குண்டப்பா அவர்களிடம் அளித்த மைசூர் மகாராஜா இச்சந்தர்ப்பத்தை யொட்டி நிலையம் தயாரித்துள்ள சிறப்பு மலரை வெளியிட்டுத் தலைமையுரையும் நிகழ்த்தினார். அவ்வுரை சிந்தனைச் செல்வமாகவே விளங்கியது. நிலையத்துக்குப் பெயர் தந்தவரும், நிலையப் பந்தலில் நடுநாயகமாகச் சித்திர உருவில் வீற்றிருந்தவருமான கோகலே அவர்கள் சமூக வாழ்வின் ரத்த நாளங்களில் ஆன்மிகத் துடிப்பை ஊட்டுவதற்காக மேற்கொண்ட முயற்சிகளையும், தமது கருத்துக்களைத் தம்முடைய வாழ்வின் மூலமே ஆதர்சமாக விளக்கியதையும் எடுத்துக் கூறிய மன்னர், இதனாலேயே காந்தியடிகள் கோகலேயைத் தமது குருவாகப் போற்றினார் என்று கூறினார். கோகலே காட்டிய வழியில் மக்களுக்குக் குடியியலின் பெருமையை உணர்த்தி வருகின்ற நிலையத்தை மனமாரப் பாராட்டினார். நாட்டின் முன்னேற்றச் சக்கரத்தை விஷய ஞானமில்லாதவர்களும், ஒழுக்கப் பயிற்சி யற்றவர்களும் இயக்க முடியாது என்றும், கோகலே நிலையம் போன்ற ஸ்தாபனங்கள் மக்களை அரசியலறிவிலும், கலாசார உணர்விலும், ஆன்மிக நாட்டத்திலும், தூய சமுதாயப் பணியிலும் ஈடுபடுத்தினால்தான் நாட்டு நடப்புக்கள் மேம்பாடு பெறும் என்றும் கூறினார். நிலையத்தின் உயிர்நாடியாகிய டாக்டர் டி. வி. குண்டப்பா அவர்களின் இருதயபூர்வமான பெரும் பணியைப் பாராட்டி, 'கோகலே நிலையமே ஸ்ரீ குண்டப்பா; ஸ்ரீ குண்டப்பாவே கோகலே நிலையம்' என்று முடித்தார் மைசூர் மன்னர்.

இவ்வளவு பெருமிதத்துக்குரிய ஸ்ரீ குண்டப்பா அவர்களோ தமது உயர் பண்புக்கேற்ப இவ்விழாவில் பேசும்போது, 'இது நிலையத்தினர் மகிழ்ச்சியுற்று நன்றி கூற வேண்டிய வைபவம் மட்டுமல்ல. விநயத்துடன் தன் சேவையைத் தானே பரிசோதனை செய்துகொள்வதற்கு உரிய ஒரு நன்னாள் இது' என்று கூறினார்.

பொதுமக்களின் உதவியுடன் சர்வ சுதந்திரமாக இயங்கி வரும் ஒரு ஸ்தாபனமே கோகலே நிலையம் என்பதை விழாக் குழு காரியதரிசி ஸ்ரீ கே. எஸ் ராமஸ்வாமியின் அறிக்கையிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. பொக்கிஷதார் ஸ்ரீ நி. வெப்பா, ஸ்ரீ 'சித்ரா' நாராயணஸ்வாமி ஆகியோரின் உரைகளுக்குப் பின்னர் ஸ்ரீமதி எம். எஸ். பக்திப் பாடல்களைப் பாடிக் கூடியிருந்தோரை மகிழ்வித்த விழா மங்களகரமாக நிறைந்தது.

கோகலே நிலையத்தின் பணிகள் நாள்தோறும் பொலிவு பெற்று வரப் பரமனின் அருளை வேண்டுகிறோம்.

வெற்றித் திருநகர்

அகிலன்



அத்தியாயம் நான்கு

வீரத்துக்குச் சோதனை

கிருஷ்ண தேவராயர் இளைஞராக இருந்த காலத்தில் விஜயநகரத்தின் மீது ஆண்டுதோறும் படையெடுத்துக் கொள்ளையடிப்பதையே ஒரு திருவிழாவாக வைத்துக் கொண்டிருந்தார்கள் பாமினி அரசர்கள். கொலைகள், கொள்ளைகள், தீயிடுதல், சூறைகள், கற்பழிப்புக்கள் நடத்திக் குடிமக்களைக் கதிகலங்க வைத்து வேட்டையாடுவது அவர்களுக்குக் குதூகலமான வாடிக்கையாக இருந்தது. அவற்றைத் தடுத்து நிறுத்தி, அச்சத்தை எதிர்முனைக்குத் திருப்புவதற்குக் கிருஷ்ண தேவராயர் செய்த முதல் ஏற்பாடு ஆண்களை ஆண்களாக மாற்றியதுதான்.

வாள் வீச்சு, வேல் வீச்சு, மற்போர், சிலம்பம் இவற்றில் ஓர் ஆண் மகன் பெற்றிருக்கும் தேர்ச்சியைக் கொண்டுதான் அவனுக்கு வேலைகள் கொடுக்கப்பட்டன. ஓலை எழுதுபவனாக இருந்தாலும், அவனுக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதி அவன் போர் வீரனாக இருக்க வேண்டும் என்பதே. படையெடுப்புக் காலங்களில் அவனவன் பெண்டு பிள்ளைகளின் மானத்தையாவது அவனவன் காப்பாற்றத் தெரிந்தவனாக இருக்க வேண்டும். கோழைகள் அந்த நாட்டில் பெண்களை மணக்கத் தகுதியற்றவர்கள் என்று பறை சாற்றச் செய்திருந்தார் சக்கரவர்த்தி.

நகரத்தின் எல்லையில் காட்டுப் பாதைக்குள் வந்து கொண்டிருந்த விசுவநாதனும் அந்தச் சூழ்நிலையில் அந்த மண்ணில் பிறந்து வளர்ந்தவன்தான். சூறையாட வந்தவர்களின் எண்ணத்தையே அவர்களுடைய நெஞ்சிலிருந்து விரட்டியடித்த வீரர் கூட்டத்தில் அவனும் ஒருவனாக இருந்தான். ஆனாலும், அந்தக் கருக்கிருட்டு நேரத்தில் அவனை எதிர்க்கத் துணிந்து வாள் வீசியவனின் பிடி இரும்புப் பிடியாக இருந்தது. வாழ்நாளிலேயே அவன் கண்டிராத மூர்க்கத்தனமான வாள் வீச்சு அது. எப்படித்தான் அவனால் வெற்றி கொள்ள முடிந்ததோ? விசுவநாதனால் நம்பவே முடியவில்லை.

அந்தச் சமயத்தில்தான் அங்கே அந்தப் பேரதிசயம் நடந்தது. சற்று முன்பு வாள் வீசியவரின் கால்களில் விழுந்து கதறச் செய்த அதிசயம் அது. வாள் வீசியவரோ, அவனைத் தமது மார்புறத் தழுவிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்து நின்றார். அவர்



வேறு யாருமில்லை; அவனைப் பெற்று வளர்த்த அவனுடைய அன்புத் தந்தை நாகம நாயக்கர்தாம் !

விசுவநாதன் யார் மீது வேங்கையெனப் பாய்ந்தானோ, அவர் முன்பு இப்போது நாணித் தலை குனிந்து, அச்சத்தால் உடல் குன்றித் தவறு செய்து விட்டவன் போல் தடுமாறிக் கொண்டிருந்தான். அவனுடைய உடல் மெல்ல நடுங்கியது. ''இருளில் யாரென்று தெரியாமல் பிழை செய்துவிட்டேன்'' என்று தயங்கித் தயங்கி மன்னிப்புக் கேட்டான்.

தந்தைக்கும் மைந்தனுக்கும் இடையில் சிரித்துக் கொண்டே வந்து நின்றார் அது வரையில் இருளில் ஒதுங்கியிருந்த சாளுவ நரசிம்மர்.

''விசுவநாதா! உன் வீரத்தைப் பரிசோதிப்பதற்காக ஒரு விளையாட்டு நடத்தினேன். இதில் நீ வெற்றி பெற்றுவிட்டாய். வெட்கப்படுவதற்கு இதில் என்ன இருக்கிறது?'' — சாளுவ நரசிம்மர் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

''இதற்காக நீ பெருமைப்பட வேண்டும், விசுவநாதா!'' என்றார் அவன் தந்தை நாகம

நாயக்கர்; "எதிர்பாராத விதமாக உன்னை ஆற்றங் கரையில் கண்டவுடன், உன் மாமாவுக்கு இப்படி ஒரு யோசனை தோன்றியது. நான் மறுத்தும் கேளாமல் என்னைத் தூண்டி விட்டு விட்டார்."

"ஏன் இப்படிச் செய்தேன் தெரியுமா?" என்றார் சாளுவ நரசிம்மர்; "நமக்கு எதிராகப் போரிடக் கூடிய வீரர் யாருமே இந்த விஜயநகரத்தில் கிடையாது என்று உன் அப்பாவும் வெகுநாட்களாக மார் தட்டிக் கொண்டிருக்கிறார். இதைக் கேட்டு மற்றவர்களும் அஞ்சுகிறார்கள். அதனால்தான் உனக்கும் அவருக்குமாகச் சேர்த்து ஒரு சோதனை நடத்தினேன். உன் வெற்றி என் வெற்றி!"

"நம் வெற்றி என்று கூறுங்கள்!" என்று பூரிப்போடு பேசினார் நாகமநாயக்கர். "விசுவநாதன் யார் என்பதை இன்றுதான் நானே கண்டுகொண்டேன்!"

"நமக்கெல்லாம் முன்பு சக்கரவர்த்தி கண்டு வைத்திருக்கிறார்; அதனால் அவரிடம் இவன் செல்லப் பிள்ளையாக வளர முடிகிறது" என்று நாகமரிடம் கூறிவிட்டு, விசுவநாதனிடம், "நீ கவலைப்படாதே! உன் அப்பாவின் தலையை நீ வாளால் உருட்டி விருந்தால்கூட அவர் மோட்சமே கிடைத்து விட்டதாக நினைத்துப் பெருமைப் படுவார்" என்றார் சாளுவ நரசிம்மர்.

"இல்லை, மாமா! அப்பாவை வெல்லும் ஆற்றல் எனக்குக் கிடையாது; அது எனக்கு வேண்டவும் வேண்டாம். என்னை வெட்டி வீழ்த்திவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் வேண்டுமென்றே தம் வாளை நழுவ விட்டிருக்கிறார்கள்."

"ஓ! அப்பாவுக்குப் பரிந்து பேசுகிறாயா?" என்று பரிகசித்தார் நரசிம்மர்.

"அவன் என்ன பேசுவது? நானே உண்மையைச் சொல்லி விடுகிறேன்" என்றார் நாகம நாயக்கர்; "கையில் வாளெடுக்கும் வரையில்தான் நான் தயங்கினேன். வாளெடுத்து விட்டால் நான் எப்போதுமே என்னை மறந்து விடுகிறவன். பாசம் உறவு எதையும்விட வாளின் வெற்றியே எனக்கு முக்கியம். நான் தோற்றுத்தான் போய் விட்டேன். இந்தத் தோல்வியில் நான் பெற்ற மகிழ்ச்சி நான் சாகும் வரை என் நெஞ்சை விட்டு நீங்காது."

நாகம நாயக்கர் எப்போதுமே தமது குமாரனை நெருக்கு நேர் புகழ்ந்ததில்லை. கண்டிப்பும் கட்டுப்பாடுமாக அவனை வளர்த்து வந்தார். அவரே தம்மை மறந்து பேசிய பேச்சு அவர் எல்லையற்ற பரவசத்தில் மூழ்கியிருந்தார் என்பதைக் காட்டியது.

விசுவநாதனை அழைத்துக் கொண்டு அவர்கள் அருகிலிருந்த அரண்ய வீட்டுக்குச் சென்றார்கள். அங்கு வெளிப்புறம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த வீரர்கள் இன்னும் எழுந்திருக்க வில்லை. முதல் நாள் அவர்கள் இருவரும் அங்கே ஒரு வேலையாக வந்திருந்தார்கள் என்பதைத் தெரிந்து கொண்டான் விசுவநாதன். வழக்கமாக முன் நேரத்தில் எழுந்து பழகியவர்களாதலால், காலையில் எழுந்து உலவச் சென்றபோது அவனைக் கண்டிருக்கிறார்கள். சாளுவநரசிம்மர் இப்படி ஒரு சலசலப்பு ஏற்படச் செய்து விட்டார்.

காவல் வீரர்களை எழுப்பி முதலில் நகரத்துக்குப் போகும்படி கட்டளையிட்டார் நாகம நாயக்கர். பிறகு மற்ற மூவரும் சேர்ந்து புறப்படுவதற்கு ஆயத்தம் செய்தனர். விசுவநாதன் தன் தந்தையாரையும் சாளுவ நரசிம்மரையும் அவர்களுக்குத் தெரியாமல் வியப்போடு உற்றுப் பார்த்தான். அவன் பிறப்பதற்கு முன்பிருந்தே அவர்கள் இருவரும் நண்பர்கள். உருவத்திலும், குணத்திலும், பிறப்பிலும் இருவருக்குள்ளும் பல வேறுபாடுகள் இருந்தும் அவர்கள் எப்படியோ இணை பிரியாதவர்களாகி விட்டார்கள்.

நாகமநாயக்கர் பிறப்பால் தெலுங்கர்; சாளுவ நரசிம்மரோ காஞ்சீபுரத்தில் பிறந்த தமிழர். நாயக்கரை வாள்வீச்சில் 'எதிர்ப்பவர்களின் எமன்' என்று கூறுவார்கள்; நரசிம்மரையோ 'அறிவை ஆயுதமாகக்கொண்ட புலி' என்பார்கள். நாகம நாயக்கர் கம்பீரமான தோற்றமுடையவர்; சாளுவ நரசிம்மர் வெளித் தோற்றத்துக்குப் பகைவைப் போல் இருப்பார். நாகமநாயக்கர் பேரரசின் பெருஞ் செல்வங்களைக் காக்கும் தனாதிகாரி; சாளுவநரசிம்மர் படை வீரர்கள் பெருந் தலைவரான தண்டநாயகர்.

அமைச்சர் அப்பாஜிக்கு அடுத்தபடியாகச் சக்கரவர்த்தி கிருஷ்ணதேவராயர் இவர்கள் இருவரையுமே சாம்ராஜ்யத்தின் இரு கண்களென மதித்து வந்தார். சக்கரவர்த்தியின் தந்தையார் காலத்திலிருந்து அந்தப் பேரரசுக்காக இவர்கள் உழைத்து வந்ததால், கிருஷ்ணதேவராயரிடம் இவர்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. வயதிலும் அநுபவத்திலும் சக்கரவர்த்தியைவிட மூத்தவர்கள் இவர்கள்.

அரண்ய வீட்டிலிருந்து புறப்படுவதற்கு முன்னால், எதேச்சையாக விசாரிப்பவர்போல், "தமிழ் நாட்டுச் சுற்றுப் பயணமெல்லாம் நன்றாக நடந்ததா?" என்று விசுவநாதனிடம் கேட்டார் சாளுவ நரசிம்மர்.

"நன்றாக நடந்தது" என்று, அதற்குமேல் பேச விரும்பாதவன் போல் பதிலளித்தான் விசுவநாதன்.

"வீரர்களையும் அரியநாத முதலியாரையும் காணோமே?"

"பின்னால் வந்து கொண்டிருக்கிறார்கள்."

"சோழ நாடு பாண்டிய நாடு எங்கும் சுற்றியிருப்பாய். நிலவரங்கள் எப்படியிருக்கின்றன? யார் யாரோடு மோதிக் கொண்டிருக்கிறார்கள்? எங்களுடைய தமிழ்ப் பரம்பரையே தங்களுக்குள் போரிட்டுக் கொள்வதில் பெயர் பெற்ற பரம்பரையாயிற்றே!"

விசுவநாதன் இப்படி ஏதாவது கேள்விகள் எழக்கூடுமென்றுதான், எடுத்த எடுப்பிலேயே விழிப்போடு இருந்தான். அவன் கிருஷ்ணதேவராயரின் அந்தரங்கப் பணியாளன் என்ற முறையில் தமிழ் நாட்டுக்குப் போய் வந்தவன். அவன் கண்டு கேட்டு வந்த செய்திகளைச் சக்கரவர்த்தியிடம் கூறக் கடமைப்பட்டிருந்தானே தவிர, வேறு



யாரிடமும் வெளியிட அவன் விரும்பவில்லை. சாளுவ நரசிம்மரிடம் அவன் சிரித்து மழுப்பிக் கொண்டிருந்தான்.

"உன் மாமா கேட்கிறார்; நடந்ததைச் சொல்லேன்!" என்றார் நாகமநாயக்கர். அவர்கள் ஒருவருக்கொருவர் மைத்துனர் முறை வைத்துக் கொண்டு பழகியதால், விசுவநாதன் சாளுவ நரசிம்மரை மாமா என்றே அழைத்து வந்தான்.

"நீங்களே கேட்டாலும் உங்கள் பிள்ளை சொல்ல மாட்டான்; நாமிருவரும் ஒன்று சேர்ந்தால் எப்படியோ அப்படிப்பட்ட வல்லாள கண்டன் இவன்!" என்று சொல்லி விட்டு, "வாள் வீச்சிலே உங்களை வீழ்த்தியது போல் சிந்தனை வீச்சில் என்னை வீழ்த்தப் பார்க்கிறான்; அதுதான் நடக்காது" என்றார் நரசிம்மர். விளையாட்டாக அவர் பேசுகிறாரா அல்லது வினயத்துடன் பேசுகிறாரா என்று விசுவநாதனால் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர் பேச்சைக் கேட்டே அந்த நாட்டில் பலர் கதி கலங்குவதுண்டு. அவனும் சிறிது கலங்கினான்.

"இதோ, பார்! உறையூரிலிருக்கும் வீர சோழன் மதுரைப் பாண்டியனை அடித்து அவனுடைய நாட்டைப் பிடுங்கிக் கொண்டு விட்டான். மதுரைப் பாண்டியன் சந்திர சேகரன் நம்முடைய உதவிக்காக இங்கே வந்து கொண்டிருக்கிறான். இதைத்தானே நீ சக்கரவர்த்தியிடம் கூறப் போகிறாய் ?"

திடுக்கிட்டு வெல வெலத்துப் போனான் விசுவநாதன். ஆனாலும் 'ஆமாம்' என்று கூறி, அவர் கூற்றை அவன் ஆமோதிக்கவில்லை. இரகசியத்தை அவனாக வெளிப்படுத்த அவன் விரும்பவில்லை.

"உன்னுடைய மாமா இப்போது தண்டநாயகரில்லை. சாம்ராஜ்யத்தின் மாமந்திரியாக உயர்த்தப்பட்டிருக்கிறார். அப்பாஜிக்குப் பதிலாக இவர்தாம் இப்போது முதல் அமைச்சர்" என்றார் அவன் தந்தை.

"மாமாவுக்கு என் வாழ்த்துக்கள்!" என்றான் விசுவநாதன்.

"இப்படிச் சொன்னால் போதுமா? என் மாளிகைக்கு வந்து முறையோடு சொல்ல வேண்டும்" என்றார் சாளுவ நரசிம்மர்.

'அப்பாஜி என்ன ஆனார்?' என்று கேட்க அவன் மனம் துடித்தது. அதை அடக்கிக் கொண்டே, குதிரையில் தாவி, அவர்களோடு ஒன்றாக நகரத்துக்குக் கிளம்பினான்.

அத்தியாயம் ஐந்து

நீறுபூத்த நெருப்பு

தாவிப் பாயும் முன்னம் பன்றிகளின் உருவம் பொறிக்கப்பட்ட வராகக் கொடிகள் விஜயநகரத்து வெளிக் கோட்டை மதிலின் உயர்ந்த கம்பங்களில் வானளாவப் பறந்தன. கோட்டை வாயிலின் இரு மருங்கிலும் உயர்ந்து நின்ற காவற் கோபுரங்களில் காவலர்கள் பலர் கண்ணிமைக்காது காத்து நின்றனர். அதை நோக்கிப் புரவிகளில் வந்து கொண்டிருந்த மூவரில், விசுவநாதனுக்கு அந்த நகரத்தின் தொலைவுக் காட்சியே ஒரு புத்தெழுச்சியைக் கொடுத்தது.

சுற்றளவிலும் பரப்பிலும் மிகப் பெரிதாக இருந்த அந்தத் திருநகரம், ஏழு பெரும் சுற்றுப் பிராகாரங்களைக் கொண்ட ஆலயம் ஒன்று விசுவரூபம் எடுத்தது போல், ஏழு பெரும் கோட்டை மதில்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. வெளிப்புறத்துப் பெரும் அரணாக ஒருபுறம் அடுக்கடுக்கான மலைத் தொடர்கள் அதை வளைத்துக் கொண்டிருந்தன. மறுபுறம் ஆழமும் அகலமும் கொண்ட துங்கபத்திரா நதி நகரத்தின் பேரகழியாகச் சீறிப் பாய்ந்தது. மலைத் தொடர்களில் இடைவெளி கண்ட இடங்களிலெல்லாம் வலிமை மிக்க சுவர்களை எழுப்பி அவற்றை இணைத்திருந்தார்கள். நகரத்துக்குள் நுழைந்து செல்ல வேண்டுமானால், அங்கங்கே இருந்த கோட்டை வாயில்கள் வழியாகத்தான் செல்ல வேண்டும்.

சாளுவ நரசிம்மர் முன்னே செல்ல, அவரை அடுத்து இருபுறமும் விசுவநாதனும் நாகமநாயக்கரும் வெளிக் கோட்டையின் அகழிப் பாலத்தின் மீது சென்றனர். சாளுவ நரசிம்மரைக் கண்டவுடன் திடீரென்று கோட்டை வாயிலின் முரசங்கள் முழங்கின. எக்காளங்கள் தங்களது பேரொலியை எழுப்பின. முதல் அமைச்சர் ஆகிவிட்ட சாளுவ நரசிம்மருக்கு அளிக்கப் பெறும் அரச மரியாதை அது.

வாயிலுக்குள் அவர்கள் நுழைவதற்கு முன்பாகவே, அவர்களுக்கு முன்னும் பின்னும் சில குதிரை வீரர்கள் அணிவகுத்து உடன் சென்றார்கள். சுறுசுறுப்பு நிறைந்த அந்த நகரத்தில், அவர்களுக்காக எதிரில் வந்து கொண்டிருந்த பல்லக்குகளும், குதிரைகள் பூட்டிய ரதங்களும் வழிவிட்டு ஒதுங்கி நின்றன. சாளுவ நரசிம்மர் தமது பதவிக்குரிய செருக்கோடும் கம்பீரத்தோடும் அவர்கள் இருவருக்கும் இடையில் சென்றார். விசுவநாதனும் நாகமரும் அவரை முன்பு அமைச்சர் அப்பாஜி வாழ்ந்த மாளிகையில் விட்டு விட்டு, அடுத்தாற்போல் தங்களது மாளிகை நோக்கி விரைந்தனர். விசுவநாதன் சாளுவ நரசிம்மரின் வாழ்க்கையில் திடீரென்று ஏற்பட்டிருந்த ஒவ்வொரு மாறுதலையும் கவனிக்கத் தவறவில்லை.

வீட்டில் அவன் அன்னையார் கமலாதேவி அவனை ஆனந்தக் கண்ணீருடன் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். ஒரே பிள்ளை; அதிலும் நெடுநாட்கள் கழிந்தபின் பிறந்த பிள்ளை; காசிக்குச் சென்று வந்த பிறகு அவன் பிறந்ததால் விசுவநாதன் என்று அவனுக்குப் பெயர் வைத்திருந்தார்கள். பணிப் பெண்களும் ஏவலாட்களும் மாளிகையில் நிறைந்திருந்தும் கமலாதேவி தமது குமார



னைக் கவனிக்க வேண்டிய பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டார். ஒரு மாதத்துக்குப் பிறகு அவன் அங்கு திரும்பி வந்திருந்தான்.

காலை உணவை முடித்துக் கொண்டு அவசரம் அவசரமாக அரண்மனைக்குப் புறப்படுவதற்காக உடை மாற்றிக்கொண்டு அவன் கூடத்துக்கு வந்தான். கூடத்தில் ஒரு பெரிய பொற் தட்டில் ரோஜாப் பூ மாலை ஒன்றும் பழங்களும் வைக்கப் பெற்றிருந்தன. அவனுடைய தந்தையார் அவன் வரவுக்காகக் காத்திருப்பதுபோல் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். 'பூமாலையும் பழங்களும் எதற்காக இங்கு இருக்கின்றன?' என்று கேட்பவன்போல் அவன் தன் தந்தையாரைப் பார்த்தான்.

''முதலில் போய் உன் மாமாவைப் பார்த்து முறைப்படி வாழ்த்துக்களைச் சொல்லி விட்டு வா. வந்த பிறகு நீ அரண்மனைக்குப் போகலாம்'' என்றார் நாகம நாயக்கர்.

அரண்மனைக்கு உடனே போக வேண்டுமென்ற துடிப்பு இருந்தாலும், தந்தை சொல் தட்டியறியாதவன் என்பதால் அந்த ஆவலை அடக்கிக் கொண்டான். நரசிம்மரின் மாளிகைக்குச் செல்வதிலும் அவனுக்கு மற்றொரு வகை ஆவல் இருந்தது. அங்கு அவருடைய குமாரத்தி லட்சுமி இருந்தாள்.

''மாமா எப்படி அமைச்சர் ஆனார்? அப்பாஜி இப்போது எங்கிருக்கிறார்?'' என்று கேட்டான் விசுவநாதன்.

''நீ தெற்கே போயிருந்த போது இங்கு அரண்மனையில் பல விஷயங்கள் நடந்திருக்கின்றன. அதையெல்லாம் நீ அவரைப் பார்த்து வந்த பிறகு கூறுகிறேன். வழியில் அவரே உன்னைச் சந்தித்து விட்டதால், முதலில் நீ அவரைப் பார்ப்பதையே அவரும் விரும்புவார்.''

ஃ ஃ ஃ

விசுவநாதன் மீண்டும் உள்ளே சென்று தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டான். எப்படியாவது லட்சுமியின் கவனத்தைத் தன்னிடம் திருப்ப வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு. இயல்பாகவே லட்சுமி ஓரளவு செருக்கும் அலட்சிய சுபாவமும் கொண்டவள். அதிலும் இப்போது அவள் சாம்ராஜ்யப் பேரமைச்சரின் மகள். ஏனோ அவளது அலட்சிய சுபாவமே அவனை அவளிடம் அதிகமாக ஈர்த்தது.

வாயிலில் காத்து நின்ற சிவிகைக்குள் அந்தப் பொற் தட்டு வைக்கப் பெற்றது. விசுவநாதனும் சென்று அமர்ந்து கொண்டான். சிவிகை அமைச்சரின் வீடு நோக்கிப் புறப்பட்டது. பட்டுத் திரைகள் தொங்கிய அந்தச் சிவிகைக்குள் அவன் தனித்திருந்த போது, அங்கே அந்த ரோஜாவின் மணம் மெல்லக் கமழ்ந்தது. மெதுவாக அதை எடுத்து லட்சுமியை நினைத்தவாறே முகர்ந்து இன்புற்றான் விசுவநாதன்.

சாளுவ நரசிம்மரின் மாளிகைக்குள் நுழைவதற்கு அவனுக்கு எப்போதுமே முன்னறிவிப்புத் தேவையில்லை. மாலையோடும், பழங்களோடும் உள்ளே நுழைந்தான். கூடத்தில் அவரது குரல் கேட்டது. சற்றே தயங்கி நின்றான். குறுக்கும் நெடுக்குமாக அங்கு நடந்தவாறே தமது அன்றையக் கடமைகளை வரிசையாகச் சொல்லிக் கொண்டு வந்தார் சாளுவ நரசிம்மர். ஆசனத்தில் அமர்ந்தவாறே அவற்றை ஓலையில் எழுதிக் கொண்டிருந்தாள் லட்சுமி.


அவனுடைய கரத்திலிருந்த பூமாலையே லட்சுமியாக உருவெடுத்து அங்கே துவண்ட தோற்றத்தில் அமர்ந்திருப்பது போல் அவனுக்குத் தோன்றியது. தமிழராகிய நரசிம்மருக்கும் தெலுங்க நாட்டுப் பெண்ணழகியாகிய அன்னைக்கும் பிறந்தவள் அவள். தமிழ் நாட்டுக்கே இயல்பான நளினமும் தெலுங்கு நாட்டுக்குரிய வாளிப்பான உடல் அமைப்பும் அவளிடம் இரண்டறக் கலந்திருந்தன.

''ஓ! நீங்களா?'' என்று விசுவநாதனைக் கேட்டுவிட்டு, ''அப்பா, அவர் வந்திருக்கிறார்'' என்று தன் தந்தையிடம் கூறினாள்.

அவர் திரும்பிப் பார்த்தவுடன் அவசரம் அவசரமாகச் சென்று, லட்சுமியின் கழுத்தில் அதை அணிவிப்பதாக நினைத்துக் கொண்டு, அவர் கழுத்தில் அணிவித்தான் விசுவநாதன். பழங்களையும் அவரிடம் வெட்கத்தோடு கொடுத்துவிட்டு, ''மாமாவுக்கு என் வாழ்த்துக்கள்!'' என்றான்.

நாணத்தால் அப்போது அவனுக்கு முகம் சிவந்தது.

சாளுவ நரசிம்மர் தாங்க முடியாத பெருமையோடு ஒருகணம் பிரமித்து நின்றார். பிறகு பழங்களை லட்சுமியிடம் கொடுத்துவிட்டு அவனுடைய கரங்கள் இரண்டையும்



"ஏனய்யா இப்படிச் சிரிக்கிறீங்க?"

"என் ரேடியோவை எவனோ எடுத்துக் கொண்டு போய்விட்டான்."

"அதுக்கா சிரிக்கிறீங்க?"

"ஆமாங்க! எடுத்துப் போனவன் இன்னும் அதன்மேலுள்ள தவணைப் பணத்தை எப்படிக் கட்டப் போகிறானோ? ஹ...ஹ்...ஹா..."

இறுகப் பற்றிக் கொண்டு, "இந்த மாலை யாருக்குரிய மாலை தெரியுமா?" என்று கேட்டார்.

'லட்சுமிக்குரிய மாலை!' என்று அவனுக்குத் துணிவிருந்தால் அப்போது கூறி யிருப்பான். பதில் அளிக்காமல் தலையைக் குனிந்து கொண்டு நின்றான்.

"இந்த நாட்டு இளம் தலைமுறையின் மிகப் பெரிய வீரனுக்குச் சேர வேண்டியது இது. நானே அவனுக்குப் போடுகிறேன்!" என்று கூறித் தம் கழுத்து மாலையைக் கழற்றி அவனுக்கே அணிவித்து விட்டார். வெட்கத்தால் அதை அவன் உடனே கழற்றி விடாமல் இருப்பதற்காகத் தம் கரத்தால் அதைப் பற்றிக் கொண்டார். வியப்பும் திகைப்புமாக அந்தக் காட்சியை உற்றுப் பார்த்தாள் லட்சுமி.

"லட்சுமி, குங்குமத்தை எடுத்து வா!" என்று கூறி, அதை வாங்கித் தமது கரத்தாலேயே அவனுக்குத் திலகமிட்டு விட்டார். பிறகு அவனை அழைத்துத் தம் அருகில் உட்காரச் செய்து தாமும் ஆசனத்தில் அமர்ந்தார்.

"எதற்காக உனக்கு இந்த மாலை தெரியுமா?"

அவன் மெதுவாக அம்மாலையைக் கழற்றி அருகில் வைத்துக் கொண்டு, தலையைக் குனிந்து கொண்டான். எப்போதுமே அவரிடம் பணிவும் பயபக்தியுமாகப் பழகி வந்தவன் அவன். அவருடைய உபசாரங்களையும் பாராட்டுக்களையும் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சாளுவ நரசிம்மர் லட்சுமியிடம் அன்று அதிகாலையில் அவனுக்கும் அவன் தந்தைக்கும் நடந்த வாட்போரைப் பூரிப்போடு குறிப்பிட்டார். யாராலுமே வீழ்த்த முடியாத நாகம நாயக்கர் எப்படி அவன் வாளுக்கு இரையாக இருந்தார் என்பதைச் சொல்லி, "நான் இவனைத் தடுத்திருக்காவிட்டால், அவருடைய உடலைத்தான் சுமந்து கொண்டு வந்திருக்க முடியும்!" என்று கூறினார்.

அவ்வளவையும் வியப்போடு கேட்ட லட்சுமிக்கு அதை நம்பவே முடியவில்லை. அவனுடைய பணிவுமிக்க வெளித்தோற்றத்தைக் கண்டு அது வரையிலும் அவனிடம் புறக்கணிப்போடு நடந்து கொண்டவள் அவள். நாகமரின் குமாரன் என்பதாலேயே சக்கரவர்த்தியும் தன் தந்தையும் அவனிடம் மிகுந்த பரிவு காட்டுவதாக நினைத்துக் கொண்டிருந்தாள்.

"இவர் பெரிய வீரரென்றால், ஏன் மஹாநவமித் திருவிழாவின் போது இவர் வீர விளையாட்டுக்களில் கலந்து கொள்வதில்லையாம்?" என்று பரிகாசம் கலந்த குரலில் கேட்டாள் லட்சுமி.

"வீரத்தை விளையாட்டுக் காட்சியாக்கிப் பெண்கள் கூட்டத்தின் பாராட்டைப் பெற நான் விரும்பவில்லை!" என்றான் அவன்; "அதைக் கட்டிக் காத்துத் தேவையான போது பயன்படுத்துவேன்."

"லட்சுமி! பார்த்தால் பசு போலிருக்கிறானே என்று ஏமாந்து விடாதே! பொல்லாத புலிக் குட்டி இவன். ரெய்ச்சூர் போரில் எத்தனையோ பேர்களை எமலோகத்துக்கு அனுப்பி வைத்து, நமக்கு வெற்றி தேடித் தந்தவன். நீறுபூத்த நெருப்பு போல் தன் வலிமையை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறான்."

"நான் வருகிறேன் மாமா!" என்று அங்கிருந்து நழுவப் பார்த்தான் விசுவநாதன்.

"விசுவநாதா! ஒரு விஷயத்தை நீ மறந்து விடாதே. சாதாரணப் போர்வீரனாக இந்த சாம்ராஜ்யத்துப் பணியில் சேர்ந்த நான் இன்றைக்கு அப்பாஜியின் இடத்தில் இருக்கிறேன். நீ என்னையும்விட உயர்ந்த பதவிக்கு வரவேண்டும்; வரக் கூடிய திறமை உன்னிடம் இருக்கிறது."

"சக்கரவர்த்தியின் பதவிதான் உங்களை விட உயர்ந்தது!" என்று கூறிச் சிரித்தாள் லட்சுமி.

"அதற்குச் சமமான நிலைக்கு வரக்கூடிய பிள்ளை இவன்" என்றார் சாளுவ நரசிம்மர்.

அன்றைக்கு அவன் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட போது, என்றுமில்லாத புதுமையாக அவனோடு வாசல் வரையில் வழியனுப்ப வந்தாள் லட்சுமி. அப்படி ஓர் அதிசயமான மாற்றம் அவளிடம் நிகழும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய இதயம் ஆனந்தபரவசத்தால் வேகமாக அடித்துக் கொண்டது. பல்லக்கில் அமர்ந்து கொண்டு லட்சுமியை அவன் ஏறிட்டுப் பார்த்தான். அவள் விழிகளைக் கண்டவுடன் முதல் முறையாக அன்றுதான் அவன் முகம் நாணிக் கவிழ்ந்தது. (தொடரும்)

அம்மாவின் சமயோசிதம் உதவியது!





வலிதான் எங்கள் பிரச்சினை...உங்களுக்கு நாங்கள் உதவக்கூடிய விதம் இதுதான்!

ஆராய்ச்சி: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கழகத்தில் ஒரு ஆராய்ச்சிக் குழுவின் தலைமை வகிப்பவன் நான். எங்களுடைய பணி வலியை நீக்க மேன்மேலும் சிறந்த முறையைக் கண்டுபிடிப்பதே. இந்தப் பிரச்சினையில் ஆழ்ந்த ஊக்கம் கொண்டுள்ள உலகத்தின் முதன்மையான பல கழகங்களுள் எங்களுடையதும் ஒன்று. வலிக்கு, இக்காலத்தில், சிறந்த ஒரே விடை 'ஆஸ்ப்ரோ' பார்முலாதான் என்பதை எங்கள் இன்று அறிகிறோம். அதனால்தான் அது உலக முழுவதும் உள்ள டாக்டர்களாலும் ஆஸ்பத்திரிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

வலி என்பது என்ன? உயிர்ப்போருள், உடல் வேகத்திற்கும் மேலாக, மிக விரைவாகத் திசுக்களில் சேர்ந்து குவிந்து, ஒரு "மறைமுகமான" வீக்கத்திற்குக் காரணமாகிவிட அது நரம்புகளின் அழுத்தத்தின் மூலம் வலி ஏற்படுகிறது.

'ஆஸ்ப்ரோ' இயங்குவது எப்படி? 'ஆஸ்ப்ரோ' உடனடியாக இரண்டறக் கலந்துவிடுகிறது—வீக்கத்தை நீக்கி—நரம்புகளின் மீதிருக்கும் அழுத்தத்தைப் போக்கி—வலியை வெளியே இழுத்துவிடுகிறது.

இவைகளுக்கு 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: வலி • தலைவலி • உடல்வலி • பல்வலி • மூட்டு வலி • ஜுரவேகத்துடன்கூடிய ஜலதோஷம் • ஃப்ளூ • டெங்கு.


அளவு:
பெரியவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் இதே அளவில் உபயோகிக்கவும். **குழந்தைகள்:** ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டரின் சொற்படி.



'ஆஸ்ப்ரோ'

வலியை வெளியே இழுத்துவிடுகிறது!

A.G. 845 TAM



செம்பாலான
அடிப்பாகம் கொண்ட
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் பாத்திரங்களில்
சுகாதார ரீதியாக
உங்கள் உணவைச்
சமையுங்கள்!

- உணவு காந்துவதோ, தீய்ந்து போவதோ இல்லை.
- சூடு சமசீராகப் பரவுகிறது.
- சுத்தம் செய்வதும், துப்புரவாக வைத்துக்கொள்வதும் சுலபம்—கழுவித் துடைத்தால் போதும்—வேறெதுவும் ...செய்யவேண்டியதில்லை!

செம்பாலான அடிப்பாகம் கொண்ட ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் சமைப்பதற்குச் சிறந்தவை.
மேலும், அவை ஆயுட்காலம் வரை நீடித்துழைக்கின்றன.


அவற்றை இன்றே வாங்குங்கள். அவற்றில் சமைப்பதே பேரானந்தம் அளிக்கும்...சுத்தம் செய்வதோ மிகவும் சுலபம்!

அவை உங்கள் வட்டாரத்தில் கிடைக்கவில்லையாயின்,
தயாரிப்பாளர்களின் பிரதிநிதிக்கு எழுதுங்கள்:

மகாலக்ஷ்மி மெடல் இண்டஸ்ட்ரீஸ், 192 B, பாந்துஜாரா போக் ரோட், பம்பாய்-4.

இந்த வியாபார சின்னத்தைப் பார்த்து வாங்குங்கள் **Meghdoot**

LPE Aiyars / 3 TAM



சேவைக்கு ஒரு சகோதரி

மோனிகா ஃபெல்டன் — அநுத்தமா

முதன் முதலாகக் கயையைத் தான் பார்த்தபோது, எடுத்த எடுப்பில் ஏற்பட்ட எண்ணத்தை விவரித்தார் சகோதரி சுப்புலக்ஷ்மி: ''கயை ஒழுங்காகவோ சுத்தமாகவோ இராது. ஒருகால், மிகவும் புராதனமான ஊர் என்பதாலும், எப்போதும் யாத்திரிகர்கள் நிரம்பியிருப்பதாலும் அது அவ்வாறு இருக்கலாம்.''

சுப்புலக்ஷ்மியும் அவள் பெற்றோரும் ரயில் நிலையத்தை அடைந்ததும் அங்கு தென்னிந்தியப் புரோகிதர் ஒருவர் தம் வீட்டுக்கு அவர்களை அழைத்துச் செல்லக் கோச்சு வண்டியை அனுப்பியிருப்பதை அறிந்தார்கள். அவர் மிகவும் பணக்காரர்; பிரமுகர். அவருடைய கோச்சு பெரிதாகவும் அழகாகவும் இருந்தது. ஆயினும், அந்தக் குதிரைகள் பட்டினி கிடந்து மெலிந்திருக்கின்றன என்பதைச் சுப்புலக்ஷ்மி வெறுப்புடன் கவனித்தாள். இந்த ஊரில் தங்கும் நாட்களைத் தான் சிறிதும் ரசிக்கப் போவதில்லை என்பதை உடனே அவள் உணர்ந்தாள்.

இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் கயை ஒரு முக்கியமான புண்ணிய க்ஷேத்திரம். இங்குதான் பெரிய அரச மரத்தடியில் கௌதம புத்தர் ஞானம் பெற்றார். முன்னோர்களின் ஆத்மசாந்திக்காக ஆயுசில் ஒரு தடவையேனும் கயாவில் சிராத்தம் செய்வது விசேஷமாகக் கருதப்படுகிறது. அங்கு இருக்கும் புரோகிதர்கள் கயாவாலாக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் சொல்லும் மந்திரங்களுக்கு அதிகச் சக்தி இருப்பதாக எண்ணப்படுகிறது. சிராத்தம் செய்தவர்கள் அதற்குப் பிறகு அங்கு மூன்று நாட்களோ அல்லது மூன்றால் வகுக்கக்கூடிய அளவு நாட்களோ—அதாவது, ஆறு, ஒன்பது, முப்பது, அறுபத்தாறு...... என இப்படி இருக்க வேண்டும். சில சமயம் அவர்கள் பல மாதங்கள் தங்கி விடுவதும் உண்டு.

சுப்பிரமணிய ஐயருக்கு என்றுமே புரோகிதர்கள் கையாளும் சில வழிகளெல்லாம் பிடிக்காது. அதிலும் அலகாபாத் சென்ற பிறகு அவரது இந்த எண்ணம் தீவிரப்பட்டு விட்டது. சகோதரி இன்று என்னிடம் கூறினார்: ''புரோகிதர்களுடைய பல காரியங்களில் என் தந்தைக்குச் சிறிதுகூட நம்பிக்கை கிடையாது. நம் மதத்தின் உண்மையான தத்துவத்தை அவர்களுடைய நடவடிக்கைகள் அழித்து விடுவதாகவே அவர் எண்ணினார். ஆகையினால் பகுத்தறிவுக்கு ஒவ்வாத எந்த மூடச் சடங்கிலும் கலந்து கொள்ள அவர் விரும்பவில்லை. அந்தப் புரோகிதரின் மிகவும் பெரிதானதும் கம்பீரமானதுமான வீட்டையடைந்ததும் ஒரே ஒரு நாள்தான் அங்கு இருப்பேன் என்று என்னுடைய தகப்பனார் கூறி விட்டார்.''

புரோகிதர் ஆட்சேபணை ஒன்றும் தெரிவிக்கவில்லை. அவருடைய மகனும் புரோகிதத் தொழிலையே மேற்கொண்டிருந்தான். இருவரும் அன்பும் பண்பும் கொண்டு அவர்களை நன்கு வரவேற்று உபசரித்தனர்.

மறு நாள் காலை நடக்கவிருந்த சிராத்தத்துக்குத் தேவையான சமையலைத் தயாரிக்க அவர்கள் தங்கள் சமையல்காரனையே ஏற்பாடு செய்யவும் முன்வந்தார்கள்.

கயையில் சிராத்தம் நடக்கும் விதத்தைச் சகோதரி விளக்கினார்:

''புரோகிதர்கள் அருகிலேயே அமர்ந்து மந்திரங்களைச் சொல்லிப் பிண்டப் பிரதானங்களைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். சில நிமிஷங்களுக்கு ஒரு முறை நின்று, 'வேறு யாரும் உங்கள் குடும்பத்தில் இறக்கவில்லையா? செத்துப் போன வேறு யாருடைய பெயரும் நினைவில்லையா? ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்' என்பார்கள். எல்லாம் முடிந்தபிறகு எந்த யாத்திரீகனும் தானாக விடைபெற்றுக் கொள்ள முயலக் கூடாது. புரோகிதர் வந்து அவன் தோளைத் தொட்டு, 'உன் முன்னோர்கள் எல்லாம் சொர்க்கத்தில் சௌக்கியமாக இருக்கிறார்கள்' என்று கூறும் வரை காத்திருக்கவேண்டும். அப்படி அவர் திருவாய் மலர்ந்தருளுவதற்குப் பிரதியாகக் கணிசமான தொகையை எதிர்பார்ப்பது சகஜம்தானே? பணம் அவர் எதிர்பார்த்த அளவுக்கு இல்லாவிட்டால் அவர் தமது ஆசியைத் தெரிவிக்க மாட்டார்!''

சுப்பிரமணிய ஐயர் தம் மனைவி, மகளுடன் சிராத்தம் நடக்கும் இடத்துக்குச் சென்ற போது தெற்கத்தியக் கிழவர் ஒருவர் கண்களில் நீர் மல்க, புரோகிதரிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார் :

''நான் இங்கு இருபத்தொரு நாட்களாக இருக்கிறேனே ! என் பணம் எல்லாம் செலவழிந்து விட்டது. என்னால் இயன்றவரை கொடுத்துவிட்டேன். இப்போது என்னிடம் இருப்பது ஊர் திரும்பத் தேவையான பணம் தான். என்னை ஆசீர்வதித்து அனுப்பி விடக் கூடாதா?''

கிழவர் கூறிக் கொண்டிருந்தது சுப்புலக்ஷ்மிக்கும் அவள் பெற்றோருக்கும் கேட்டது. அவர் முகம் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இப்போது அந்தப் புரோகிதர் ஆசி கூறவில்லையென்றால் கடந்த மூன்று வாரங்களாக அவர் செய்த சிராத்தச் சடங்குகள், பிரார்த்தனைகள் யாவும் வீணாகி விடும். முன்னோர்களுடைய ஆத்மாக்களும் சொல்லொணாத கஷ்டங்களை அநுபவிக்கும்படி சபிக்கப்பட்டதாகி விடும்.

சுப்பிரமணிய ஐயருக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. அவர் பேசவில்லை. ஆனால் அந்தச் சினம் அவர் முகத்திலேயே ஜொலித்தது. திடீரென்று புரோகிதர் தமது வலக் கையைத் தூக்கிக் கிழவரின் தோளைத் தொட்டு, ''போ, எல்லாம் சரியாகி விடும்'' என்றார்.

பிறகு சுப்பிரமணிய ஐயர் அமர்ந்தார். சிராத்தம் தொடங்கியது. அது முடிந்ததும் தட்சிணை கொடுக்கப் போன போது புரோகிதர் அதை மறுத்து விட்டார்: ''நீங்கள் எனக்கு ஒன்றுமே தர வேண்டாம். நானாக ஆசைப்பட்டு உங்களுக்கு இதையெல்லாம் செய்திருக்கிறேன். தென்னாட்டிலிருந்து உங்கள் நண்பர்கள் கயா யாத்திரை புறப்படும்போது என்னிடமே வரும்படி நீங்கள் சிபாரிசு செய்தால் போதும்'' என்றார். தங்களுடைய ஸ்தல யாத்திரை முடிவுக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது விசாலாட்சிக்கு நிம்மதியை அளித்தது. அவள், கணவருக்கும் பெண்ணுக்கும் கூட அப்படித்தான். கயாவாலாக்கள் அவர்கள் எதிர்பார்த்தது போலன்றி ஏமாற்றமே அளித்தார்கள். ஐம்பது வருடங்களுக்குப் பிறகும் சகோதரி சுப்புலக்ஷ்மியின் ஏமாற்றம் இன்னமும் பசுமையாக இருந்தது. ''கயையில் இருக்கும் அந்த மனிதர்கள் தங்களைப் பிரும்மபுத்திரர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள். இந்தியாவில் உள்ள எல்லாப் பிராமணர்களையும் விடத் தாங்கள்தாம் புண்ணியசாலிகள் என்று கருதுகிறார்கள். அவர்களே அதை நம்மிடம் சொல்கிறார்கள். தாங்கள் மிகவும் புண்ணியசாலிகளானபடியால் பூவுலகில் இதுதான் அவர்களுக்குக் கடைசி ஜன்மமாம். நம்மைப் போன்ற பாவிகளுக்கு உதவி செய்யவும், நம்முடைய முன்னோர்களின் ஆன்மாக்களைக் காப்பதற்காகவும், நமது பாவ மலங்களைக் கழுவ நமக்குப் புண்ணிய ஸ்நானம் செய்விக்கவுமே கடவுள் அவர்களைப் பொறுக்கி எடுத்துக் கயையில் பிறக்க வைத்திருக்கிறாராம். அப்படியிருந்தும்...'' இங்கு சகோதரி ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, அருவருப்போடு கூறி முடித்தார்: ''அவர்கள் மீன்கூடச் சாப்பிடுகிறார்கள் !''

கயையை விட்டுப் புறப்படுமுன் அவர்கள் கங்கா ஸ்நானம் செய்தார்கள். பிறகு, ஊர் திரும்பும் பயணத்தைத் தொடங்கினார்கள். அலகாபாத் புரோகிதர்கள் சொன்ன கதைகளையெல்லாம் இம்மியும் மறக்காத விசாலாட்சி, தன் பயத்தை வெளிக் காட்டிக் கொள்ளாதிருக்க முயன்றாள். தன் அச்சத்தைக் கண்டு கணவர் சிரிப்பார் என்றும், சுப்புலக்ஷ்மிக்குத் தன்னைப் போல் பயமில்லை என்றும் அறிவாள்.

அவர்கள் ரயில் கோதாவரி கிருஷ்ணா நதிகளைக் கடந்தது. இது வரை எந்த விதமான இடையூறும் ஏற்படவில்லை.

இன்னும் ஒரே நாள் — அவர்கள் எல்லாரும் சௌக்கியமாகச் சென்னையை அடைந்து விடுவார்கள். எப்போதும் போல் அன்று இரவும் சுப்புலக்ஷ்மி நிம்மதியாகத் தூங்கினாள். அவள் விழித்துக் கொண்ட போது ரயில் இடை வழி ஸ்டேஷன் ஒன்றில் நின்று கொண்டிருந்தது.

''நாம் எங்கிருக்கிறோம்?'' என்று அவள் கேட்டாள்.

''எனக்குத் தெரியாது. இந்த ரயில் இரண்டு மணி நேரமாக இங்கேயே தான் நின்று கொண்டிருக்கிறது'' என்றாள் அவள் தாயார். அவள் குரல் நடுங்கிக் கொண்டிருந்தது.


மற்றப் பிரயாணிகள் பிளாட்பாரத்தில் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டிருந்தனர். அருகிலிருந்த கிராமத்து மக்கள், தயிரும் பாலும் விற்க அங்கு கூடிவிட்டனர். இது வரை எதிர்ப் பக்கத்தில் பலகையில் உறங்கிக் கொண்டிருந்த சுப்புலக்ஷ்மியின் தந்தை எழுந்து உட்கார்ந்தார். தம் மனைவியைப் பார்த்து, ''கீழே பிளாட்பாரத்தில் இறங்கி உன் ஸ்டவ்வைப் பற்ற வைத்து நமக்கெல்லாம் காப்பி போடேன்'' என்றார்.

அவருடைய குரலைக் கேட்டதும் விசாலாட்சிக்குக் கொஞ்சம் நிம்மதி பிறந்தது. எழுந்து சென்று அவரிட்ட பணியில் ஈடுபட்டாள். சீக்கிரமே அங்கு ஸ்டேஷன் மாஸ்டர் வந்தார். சில மைல்களுக்கப்பால் ஒரு கூட்ஸ் வண்டி தண்டவாளத்தை விட்டு இறங்கி விட்டதாக அவர் கூறினார். விபத்து கவலைக்கிடமானது அல்ல. ஆனால் வழியைச் சீர்ப்படுத்த இன்னும் ஒரு மணி நேரத்துக்கு மேலாகும் என்று தெரிவித்தார்.

வேறொரு பெட்டியிலிருந்து இறங்கிய ஒரு சிநேகிதர் பிளாட்பாரம் வழியே

அன்றும்... இன்றும்...





பழங் காலத்திய மண்டபங்களுடன் கூடிய மவுண்ட் ரோடு ரவுண்டானவில் அன்று நிம்மதியாக நடக்கவும் காலாற உட்காரவும்கூட முடிந்தது. இன்று ரவுண்டானா பகுதியில் அம்மாதிரி செய்ய முடியுமா? போலீஸ்காரர்கள் விரைந்து செல்லும் வண்டிகளை நிறுத்தி வைத்து, மக்கள் சாலையைக் கடக்க வழி செய்கிறார்கள்! இன்னும் சில நாட்களில் இந்த ரவுண்டானா பகுதியில் பாதாளப் பாதை வசதி வரப் போகிறதே!


நடந்து வந்தார். ''ஆ! சென்னையை விட்டுக் கிளம்பியது முதல் இது போன்ற காப்பியின் மணத்தை நான் நுகரவே இல்லை. எனக்கும் கொஞ்சம் கொடுக்க முடியுமா?'' என்று கேட்டு அவர் மூச்சை நீள உள்ளுக்கிழுத்து அந்த மணத்தை ரசித்தார்.

அவர்களுக்கு மிகவும் சந்தோஷமாகி விட்டது. வீட்டுக்கு வெகு சமீபம் வந்து விட்டோம் என்று நினைக்க நினைக்க ஆனந்தமாய் இருந்தது. விசாலாட்சியும் தன் இயல்பான சிரித்த முகத்துடன் விளங்கினாள். அவள் மகளோ முன்னேக்கும் போதே ஒரு கணம் பின்னேக்கியும் பார்த்துத் தான் கயையில் கண்ட ஒரு காட்சியை நினைவு படுத்திக் கொண்டாள். அவள் பெற்றோரும் அவளும் கங்கையில் ஸ்நானம் செய்ய வண்டியில் சென்று கொண்டிருக்கும்போது அவள் கண்ணில் தென்பட்ட ஒரு பரிதாபக் காட்சி அது.

சகோதரி என்னிடம் கூறினார்: ''என்னால் அக்காட்சியை மறக்கவே முடியவில்லை. அங்கே பாதையின் நடுவில் ஒரு கிழவி இறக்கும் தறுவாயில் இருந்தாள். இடுப்பில் கந்தை உடுத்தியிருந்தாள். அவளது எலும்புக்கூடு சருமத்தோடு ஒட்டினாற்போல் துருத்திக் கொண்டு நின்றது. அவள் உடல் முழுவதும் ஆயிரக்கணக்கான ஈக்கள் மொய்த்தன. மனிதர்கள், யாத்திரிகர்கள் அவளைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தனர். சிலர் நடந்தும், சிலர் வண்டிகளிலும் போனார்கள். ஆனால் ஒருவரேனும் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. எங்களுக்கு அவளுக்கு உதவ வேண்டும் போல் இருந்தது. ஆனால் நாங்கள் என்ன செய்ய முடியும்? எங்களுக்கு அந்தப் பாஷைகூடத் தெரியாது. அவள் நிம்மதியாகச் சாகக் கூடிய இடம் ஏதும் எங்களுக்குத் தெரியாது. அவளுக்குப் புகலிடம் என்று எதைக் கருதி எங்கு கொண்டு சேர்ப்பது அவளை? எப்பொழுதாவது கயை என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தைப் பற்றி யாரேனும் பேசும் போது எனக்கு, பாவம், அந்தக் கிழவி தெருவில், உதவுவாரின்றி, தன் கஷ்டத்தைக் குறைப்பாரின்றி, கிடந்தது நினைவுக்கு வருகிறது.''

இதன் பிறகு சகோதரி சுப்புலக்ஷ்மி கேட்டார் — என்னிடமல்ல; அப்பொழுதுதான் அவரைப் பார்க்க வென்று வந்து படியேறி, வராந்தா ஓரத்தில் உட்கார்ந்திருந்தவரை நோக்கியும் அல்ல. இன்னுமொரு நீண்ட வராந்தாவை அவர் பார்த்தார். வெட்டவெளியை, ஒளி குன்றி மாலை கவிந்து வரும் ஆகாய முற்றத்தை நோக்கிப் பேசினார்: ''மதம் என்பது என்ன? என்ன அது? கருணையும் அன்பும் எங்கே? மனிதர்கள் ஒருவரையொருவர் இவ்வாறு எப்படி நடத்த முடியும்?''

(தொடரும்)




LIFEBUOY
for health
லைப்பாய்
இருக்குமிடம்: அதுவே...
ஆரோக்கியம் இருக்குமிடம்
லைப்பாய் சோப்பினால் நீராடுவீர்... அதுவே குதூகல உணர்ச்சியின்
குற்றாலம்... ஆரோக்கிய மலர்ச்சியின் ஆலோலம்...ஆஹாஹா...நல்ல சோப்பின்
நன்மைகள் யாவும் பெறுவீர், மேலும் பெறுவீர் லைப்பாய் துணையால் ...
அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய்
ஹிந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.
லின்டாஸ்-L.50-140 TM

நீர்க்குமிழி



∧ நாகேஷ் ஜெர்ரிலூயி ∨



நீர்க்குமிழி வாழ்க்கையில் 'சிரிப்பவன் கவலையை மறக்கின்றான்; நினைப்பவன் அழுகின்றான்' என்பது சித்தாந்தம். சேது வயசிலேயே கடுமையான நோயாளியானாலும் சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறான். அவன் உடல் நோயின் உண்மையை அறிந்தபோது அழுது அழுது நீர்க்குமிழி வாழ்க்கையைப் பற்றிய பொன்மொழியை உதிர்த்து உயிரை விடுகிறான்; படத்துக்கு உயிரும் கொடுக்கிறான். இப்படிச் சிரித்து, அழுது சிந்திக்க வைக்கும் பாத்திரத்தை ஏற்றிருப்பவர் நாகேஷ்.

புகழ்பெற்ற கால்பந்தாட்ட வீரன் அருண் காலடிபட்டு நர்ஸிங்ஹோமில் சேதுவுக்கு அடுத்த படுக்கையில் வந்து படுத்து, நர்ஸிங்ஹோம் டாக்டரின் மகள் காதலைப் பெறும் பாக்கியமே பெறுகிறான். அருணாக வரும் இன்ஷுர் கோபாலகிருஷ்ணன் இந்தப் படத்தில் சோடை போகவில்லை.

சீனியர் டாக்டர் பதவியேற்றுள்ள சுந்தரராஜன் நர்ஸிங்ஹோமையே தம் கண்டிப்பினால் கதி கலங்க வைக்கிறார். அவரது கண்டிப்பு அவரது டாக்டர் மகளையும் விட்டுவைக்கவில்லை. சௌகார் ஜானகி கதாநாயகி வேஷம் தாங்கிக் காதலுக்கும் கடமைக்கும் நடுவே தவிக்கிறாள். கடைசியில் கடமை வெற்றி பெறுகிறது.

நீர்க்குமிழி படத்துக்கு வசனம் எழுதி, முதன் முறையாகப் படத்தை டைரக்ட் செய்திருப்பவர் இனிய பாரதத்தினர் திரு கே. பாலசந்தர். வெறும் ஆரஞ்சுத் தோலைக் காட்டி, நோயாளி சேதுவின் நீர்க்குமிழி வாழ்க்கையை அதோடு ஒப்பிட்டுக் காட்டியிருப்பது நன்றாயிருக்கிறது.

ஒலிப் பதிவில் நிமாய்கோஷின் திறமையை அறிகிறோம்.

'ஆடி அடங்கும் வாழ்க்கையடா' என்ற பாட்டு உருக்கமாக அமைந்துள்ளது.

படம் நீர்க்குமிழியைப் போலவே மறையாது நாகேஷின் நடிப்புக்காகவும் நல்ல கதைக்காகவும் நீண்டு நின்று ஒளி வீசும்.

Who is Minding the Store?

ஜெர்ரிலூயியின் மற்றொரு ஹாஸ்யப் படம் ரஸிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்க வந்திருக்கிறது.

ஒரு பெரிய கடையின் விற்பனை ஊழியனாக வேலைக்கு வந்து சேர்ந்த ஜெர்ரிலூயியை அந்தக் கடை முதலாளியின் குமாரத்தி காதலிக்கிறாள். அவ்விஷயத்தை அறிந்த அப்பெண்ணின் தாயார், தன் மகள் வெறும் முட்டாளைக் காதலிக்கிறாள் என்று எடுத்துரைக்கிறாள். இருப்பினும் மகள் உறுதியாக இருக்கிறாள். ஜெர்ரிலூயிக்குக் கடும் விஷப் பரீட்சைகள் நடத்தி, அவனை அவமானப் படுத்தத் திட்டமிடுகிறாள் தாயார்! இவற்றையெல்லாம் ஜெர்ரிலூயி சமாளிக்கும் விதம்தான் வயிறு வெடிக்கச் சிரிக்க வைக்கிறது.

ஒரு டைபிஸ்ட் பெண்ணாக ஜெர்ரிலூயி நடிக்கும் பகுதியில் அவர் ஹாஸ்ய நடிப்பின் சிகரத்தை எட்டி விட்டார் என்று சொல்ல வேண்டும்!

அவருடன் துணை நடிகையாக ஜில்ஸெண்ட் ஜானும் அபாரமாக நடித்து ஈடு கொடுத்திருக்கிறார்.





MY FAIR LADY

புகழ்பெற்றதோர் ஆசிரியரின் கற்பனையிலே உருவாகிப் புத்தகமாக வெளிவந்த போது உலக மக்களின் ஒருமித்த பாராட்டுதல்களை அமோகமாகப் பெற்றது ஒரு நாடகம். அதை மேடை ஏற்றிய போது, சங்கீத உல்லாசக் கதை அமைப்பைக் கொண்ட அது; மிக அதிக நேரம் மேடையில் நடிக்கப்பட வேண்டிய அது; இதுவரை எந்த நாடகமுமே அளித்திராத வெற்றியை ஆறு வருடங்கள் தொடர்ந்து நடந்து, 2,717 காட்சிகளை நடத்தி ரசிகர்களை மகிழ்வித்தது. மேடையிலே வெற்றிக் கொடி நாட்டிய மகத்தான அதைத் திரைக் காவியமாக்கத் திரைப் படத் தயாரிப்பில் ஆற்றலும் அனுபவமும் பெற்றவர்கள் முனைந்தால் அந்தப் படம் எப்படி இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ? எட்டு அகாதமி பரிசுகளைத் தட்டிக் கொண்டு போயிற்று அந்தப் படம். 'வருடத்தின் மிகச் சிறப்பான படம்', 'தலை சிறந்த நடிகர்' 'ஒப்பற்ற டைரக்ஷன்' ஆகிய பரிசுகளும் இதனுள் அடக்கம் பெறுகின்றன.

இத்தனை ஏற்றங்களுக்கும் உரித்தான அந்தப் படம்தான் 'என்னுடைய கவர்ச்சி மிகு மங்கை'. (My Fair Lady) பெர்னார்ட் ஷாவின் பிக்மிலியன் என்ற நாடகத்தைத் தழுவித் தயாரிக்கப்பட்டது தான் இந்தப் படம். மிக நாசூக்காகக் கேலி செய்வதில் புகழ்பெற்ற ஷாவின் படைப்பான இதில் கண்ணியமான உயர்தர ஹாஸ்யம் விரவிக் கிடக்கிறது. வாழ்க்கையின் கீழ்ப்படியில் வாழும் ஒரு பெண்ணை நாகரீகத்தின் உச்சாணிக் கிளையில் வாழும் சமூகத்தினரிடையே பழகும் பாவையாக மாற்ற முயன்று அதில் வெற்றியும் அடைகிறார் ஒரு பேராசிரியர். இதுதான் கதை. ஆனால் இரண்டே வரியில் இத்தனை இலகுவாக இதைச் சொல்லி விட்டாலும் இரண்டு மணி நேரம் ஓடும் இந்தப் படம் ரசிகர்களுக்குப் பூரணமான இன்பத்தை அளிக்கிறது. பிரதான ஆண் பாத்திரமாக வரும் ரெக்ஸ் ஹாரிஸன் சிறந்த நடிகர் என்ற பரிசு பெற்றிருக்கிறார் இந்தப் படத்தின் மூலம். முன்பே பல ஆஸ்கார்களை வாங்கியவர்தான் ஹாரிஸன். கிளியோபாட்ராவில் சீஸராக வந்ததை மறந்துவிட முடியுமா? 'அன்னாவும் சயாம் தேசத்து மன்னனும்' (Anna and The King of Siam) என்ற படத்தில் மன்னனாக வந்ததைத்தான் மறந்துவிட முடியுமா? குணசித்திர நடிகரான ஹாரிஸனின் நடிப்பை இந்தப் படத்தில் புகழுவதற்கு வார்த்தைகள் கிடையாது. ஆகவே படத்தை நீங்கள் பார்த்துவிட வேண்டியது தான். நியூயார்க் மேடையிலேயும் இதே பாத்திரத்தை ஹாரிஸன்தான் ஏற்று 1006 காட்சிகளில் தோன்றி நடித்துள்ளார். அதனால் அந்தப் பாத்திரத்தின் படைப்பிலே எத்தகைய மெருகு ஏறி இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. பிரதான பெண் பாத்திரமாக வரும் ஆட்ரீ ஹெப்பர்ன் - ஹாரிஸனுக்கு இணையாக முதலில் பூக்காரியாகவும் பிறகு நாகரிக மங்கையாகவும் அற்புதமாக நடித்துள்ளார். குரல் மாற்றத்துக்காக அவர் பிரயாசையோடு போராடும் கட்டங்களிலும் அதன் பிறகும் உணர்ச்சியோடு உன்னதமாக நடித்துள்ளார். ஹெப்பர்னின் விழிகளோ பாவங்களை உதிர்க்கின்றன. காட்சியமைப்பு, ஒலி, ஒளி, வர்ணக் கலவைகள் ஆகிய எல்லாவற்றிலுமே சிறந்து விளங்குகிறது இந்தப் படம். சங்கீத உல்லாசப் படமான இதில் வசனங்கள் கூடப் பாடல்களாகப் பாடப் படுகின்றன. ஆனால் சலிப்பு என்பதே ஏற்படவில்லை. அத்தனை எளிய, இனிய மெட்டுக்கள். பொருள் பொதிந்த வார்த்தைகளைக் கொண்டிருக்கின்றன பாடல்கள்.

மொத்தத்தில் கண்ணுக்கும் கருத்துக்கும் உயர்ந்த ஹாஸ்யத்துக்கும் நடிப்புக்கும் சங்கீதத்துக்கும் விருந்தாக அமைந்துள்ளது — மை பேர் லேடி. நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த இந்தப் படம் ரசிகர்களுக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியையும் தரவல்லது!

கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

53. கணைமழை பொழிந்த கருணை முகில்

சூரபன்மனின் ஆணைப்படி ஒற்றர்கள் ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் சென்று சேனைகளைத் திரட்டிக் கொண்டு வந்தார்கள். அச் சேனைகள் உலகங்களெல்லாம் நடுங்க வந்து கூடின.

சூரபன்மன் சிவபூஜை செய்து ஆகாரம் உண்டான். நீறணிந்து, நறுமணம் பூசிக்கொண்டு பெரும் பொருளைத் தானமாக அள்ளி வீசினான். பின் போர்க்கோலம் பூண்டு, முன் யாகத்தில் தோன்றிய பெரிய தேரின்மீது ஏறிப் புறப்பட்டான். சிவப் படைக்கலம் முதலியவைகள் நிறைந்த ஆயிரம் கோடி தேவர்களும், சிங்க வாகனமும் இந்திர ஞாலத் தேரும் சூழ்ந்து வந்தன. பேரிகைகள் முழங்கின. எண்ணில்லாத சேனைகளுடன் சூரபன்மன் போர்க்களம் சேர்ந்தான். தமது இன்னலுக்கெல்லாம் காரணமான அவனைக் கண்ட இமையவர் இரத்தக் கண்ணீர் வடிய அரற்றினார்கள். இந்திரன் தான் உற்ற அவமானங்களை யெல்லாம் எண்ணி வருந்தினான். நான்முகனும் அரக்கன் ஆணைக்குட்பட்டுத் தான் வாழ்ந்ததை நினைந்து மனம் விம்மினார். வீரரும் பூதரும் வெய்துயிர்த்தார்கள்.

மாலும் அயனும், மகபதியும் கந்தவேளிடம் வந்து வணங்கி, சூரபன்மன் போர்க்களம் வந்துள்ள செய்தியைத் தெரிவித்தார்கள். கந்தப் பெருமான் கடைக்கண் நோக்க, வாயுதேவன் மனோவேகத் தேரைக் கொண்டு வந்து நிறுத்தினான். புத்தேளிர் பூமழை பொழிந்தனர்.

முருகனின் முதற் தலைமையில் மகிழ்வுடனே போர்க்களம் எய்திய அமரர்கள் போர்க்களத்தை அடைந்ததும் எண்ணிறந்த அசுரர் படை கண்டு அயர்வு எய்தினர். கொசுக்களும், கிருமிகளும் கோடிக் கணக்கில் பெருகுவதுபோல் நல்லன பெருகுவது கிடையாது. தீய சக்தி யாவற்றையும் தேவநாயகன் தேய்த்தொழிப்பதற்குத் தருணம் வந்து விட்டபடியால் அவை அவுணர் உருவில் கணக்கிட முடியாத பெருமளவில் திரண்டு விட்டன.

வரத்தினிற் பெரியர் மாய
　வன்மையிற் பெரியர் மொய்ம்பின்
உரத்தினிற் பெரியர் வெம்போர்
　ஊக்கத்திற் பெரியர் எண்ணில்
சிரத்தினிற் பெரியர் சீற்றச்
　செய்கையிற் பெரியர் தாங்கும்
கரத்தினிற் பெரியர் யாரும்
　காலினிற் பெரியர் அம்மா

''ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் உள்ள அவுண சேனைகள் அனைத்தும் இன்று வந்து விட்டன. இவர்கள் கடல்களைப் பருகுவர், வடவைத் தீயினும் கொடியவர்; மேரு மலையைப் பந்தாடுவர்; சண்டமாருதத்தின் எதிரே பஞ்சு போல் இவர்கள் முன் நாம் அழிவோம். எங்கும் அசுரர்களாயிருப்பதால் ஓடி ஒளிவதற்கும் இடமில்லை. இவர்களுடன் போர் புரிந்து அழிவது உறுதி'' என்றே பூத வீரர்கள் எண்ணத்தொடங்கிவிட்டனர். துன்ப காலத்தில்தான் தெய்வநம்பிக்கை மிகவும் பெருகும்; அதேபோல் துன்ப காலத்தில்தான் அது மிகவும் தளரவும் செய்யும். பிற்பாடு துன்பம் தீர்ந்தபின் தேவர்களின் பக்தி முறுகி முதிர்வதற்கெனவே இப்போது சிறிது தளர்ச்சி கண்டது. முருகவேள் தம் தரப்பில் தலைமை தாங்குவதையும் அவர்கள் மறந்து அச்சத்துக்காட்பட்டனர்.

இந்திரன் நடுங்கிக் கொண்டே திருமாலிடம் வந்தான். ''சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள அசுர வீரர்களுடன் ஆறுமுகக் கடவுள்மீது போர் செய்ய வந்துவிட்டான். சூரனுடைய படைகளை அழிக்கவே ஊழிக் காலம் சென்றுவிடும். அவ்வாறாயின் சூரன் மாள்வது என்று? நான் பொன்னுலகம் ஆள்வது என்று?'' என்று முறையிட்டான்.

திருமால் முருகப்பெருமானின் பெருமையை இந்திரனுக்கு எடுத்துரைத்தார்.

காலமாய்க் காலம் இன்றிக்
　கருமமாய்க் கருமம் இன்றிக்
கோலமாய்க் கோலம் இன்றிக்
　குணங்களாய்க் குணங்கள் இன்றி



ஞாலமாய் ஞாலம் இன்றி
   அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல்
   மூவிருமுகங் கொண்டு உற்றான்

என்று பரமனின் புகழ் பாடினார்.

''இந்திரனே! முன்னர் மேரு மலையில் முருகவேள் மூவரும் தேவரும் உயிர்களும் தன்பாற் காட்டி ஒரு வடிவங் கொண்டதை நீ மறந்து விட்டாய் போலும்! அக் குமாரக் கடவுள் பிரம்மா வாகிப் படைப்பார்; என் உரு வாகிக் காப்பார். ஈசன் போல் அழிப்பார். வேதங்களுக்கெல் லாம் எட்டாதவர் அவர் உருவா யும் குணங்களாயும், உலகமாயும் அவற்றைக் கடந்து அப்பாலாகி யும் நிற்கும் மின்உருவம் போன்ற அவரது வடிவம் யாராலும் அவ் வளவு சுலபமாக அறிந்துகொள்ள முடியாது. அதனை விளக்கும் ஆற்றல் வேதங்களுக்கும் இல்லை.

பொன்னுரு வமைந்த கஞ்சப்
   புங்கவனுகி நல்கும்
என்னுருவாகிக் காக்கும்
   ஈசன்போல் இறுதி செய்யும்
மின்னுரு என்ன யார்க்கும்
   வெளிப்படான்போலும்? அன்னான்
தன்னுரு மறைக ளாலும்
   சாற்றுதற்கு அரிய தன்றே

பாயிருங் கடலிற் சூழ்ந்த
   பற்றலர் படையை எல்லாம்
ஏயென்னும் முன்னம் வீட்டும்
   சிறுவன்என் றெண்ணல் ஐய!
ஆயிரகோடி கொண்ட அண்டத்தின்
   உயிர்கட் கெல்லாம்
நாயகன் அவன்காண் நாம்செய்
   நல்வினைப் பயனால் வந்தான்''

இந்திரனை 'ஐய' என்று அழைத்தாராம் நாராயணர். ''தேவேந்திரா! சமுத்திரம் போல் உள்ள இந்தச்சைன்யங்கள் எல்லாம் முருகப் பெருமான் 'ஏ' என்று சொல்லும்போதே அழிந்து விடும். அவர் இப்படைகளையெல் லாம் மிக விரைந்து அழிப்பார். அவர் திருவுளங் கொண்டால் புன்முறுவலால் அழிப்பார்; கோபத்தினுல் கொல்வார்; திரு வாக்கால் அழிப்பார்; பார்வை யால் அழிப்பார். இஃது அவருக்கு ஒரு திருவிளையாடல்; முருகப் பெருமானைக் குழந்தை என்று எண்ணாதே. அவருடைய வேற் படையால் சூரன் அழிவான். எம்பெருமான் கருணைக் கடல். நம்மீது கொண்ட அருட் கருணையினுல் தான் அவர் சூரனுடன் போர் செய்யவந்திருக் கிறார். ஆயிரங் கோடி அண்டங்களுக்கும் அவர் நாயகன். நாம் செய்த நற்பேற்றினுல் அவர் நமக்குக் காட்சி தந்திருக்கிறார்.

சூரனே முதலோர் தம்மை
   இமைப்பினில் தொலைக்க உன்னின்
மூரலால் அடுவன்; கொண்ட
   முனிவினுல் அடுவன்; வாய்மைச்
சீரினுல் அடுவன்; நாட்டச்
   செய்கையால் அடுவன் என்றால்
நேரிலா முதல்வன் வன்மை
   யாவரே நிகழ்த்தற் பாலார்?

''ஆகவே, தேவேந்திரா, கவலைப்படாதே. சூர ஸம்ஹாரம் விரைவில் நடைபெறும். நீ பொன்னுலகம் பெறுவாய்'' என்று திருமால் கூறினார்.

இதிகாச புராணங்களிலேயே மிகப் பெரிய போரும் தொடங்கியது.

பூத வீரர்கள் அவுண வீரர்களுடன் பொருது புறந் தந்தார்கள். இலக்கத்தெண்மர் வலிமைஇழந்து ஓய்ந்தார்கள். அதனைக் கண்ட

வீரவாகு தேவர் தம் வில்லை வளைத்துக் கணை மழை பொழிந்தார். எனினும் அவுண வீரர்கள் அழியாததைக் கண்டு வருந்தி இளைத்துக் கந்தவேள் அருகிற் சென்றார்.



அவுண வீரர்கள் ஆறுமுகக் கடவுளைச் சூழ்ந்து, தண்டு, சக்கரம், குலிசம், சூலம், வேல், கோடரி, பாசம், அம்பு முதலிய ஆயுதங்களையும் தெய்வாஸ்திரங்களையும் ஏவி ஆரவாரம் செய்தார்கள்.

பூத வீரர்கள் புறங்கொடுத்ததையும், இலக்கத்தெண்மர் வலியிழந்து ஓய்ந்ததையும், வீரவாகு தேவர் வருந்தி நிற்பதையும், அவுண வீரர்கள் ஆரவாரம் செய்வதையும் கண்ட குமாரக் கடவுள் சிறுநகை புரிந்து வில்லைத் திருக்கரத்தில் ஏந்திக் கணை மழை பொழிந்தார். பூமியில் நின்ற அவுண வீரர்கள் அனைவரும் அழிந்தனர்.

போர் நடைபெறும் பூமியில் நுழைவதற்கு இடமின்றி வெளியே நெருங்கி நின்ற அவுணர்கள் சினந்து உட்புகுந்தனர். தேவர்கள் துதிக்கவும், வீரர்கள் அருகிற் சூழவும் குமாரக் கடவுள் அவுணர்களின் எதிரே எழுந்தருளினர். மீண்டும் பெரும் போர் தொடங்கியது. முருகப் பெருமான் வாயுவைப் பார்த்து, ''நாலா பக்கங்களிலும் தேரைச் செலுத்து'' என்று பணித்தார். வாயு அதனைக் கேட்டு வணங்கி அவுணர் நிற்குமிடந்தோறும் தேரைச் செலுத்தினர். அத்தேர் பூமியிலும், திசைகளிலும், வானத்திலும், கடல்களிலும் எங்கும் விரைந்து சென்றது. குமாரக் கடவுள் தம்மை நெருங்கி நிற்கும் அவுண சேனைகளின் மேல் ஆயிரங் கோடி கணைகளைச் செலுத்தினர். அண்டம் நிறைந்த அவுணர்கள் கந்தவேள் கணைமழையால் அழிந்தனர். பிணமலைகள் குவிந்து உதிர வெள்ளத்தில் பிணங்கள் மிதந்தன. அந்த உதிரத்தைக் குடித்தும், மாமிசத்தைத் தின்றும் ஜீரணமாகாமல் பேய்கள் கரணம் அடித்து விளையாடுகின்றனவாம்.

குமாரக் கடவுளின் தேர் அவர் விடுக்கும் கணைகளைவிட விரைந்து சென்றது. தேரைச் செலுத்தும் வாயுவையும், கணைகளை விடுக்கும் குமாரக் கடவுளையும் அமரர் வியந்து பாராட்டித் துதித்தனர்.

இவ்வண்டத்தில் உள்ள அவுணர் படைகள் மட்டுமின்றி, மற்றைய அண்டங்களில் உள்ள அவுண சேனைகள் புறப்பட்டு வருவதைக் கண்ட குமாரக் கடவுள் மீண்டும் படைகள் வராதபடி அண்ட கோளகையின் வாயிலை அடைத்தார். தம் கணைகளினால் இறந்த அவுண வீரர்களின் பிண மலைகள் பாதாளத்திலும், கடலிலும், பூமியிலும் மிக உயர்ந்து நிற்பதைக் கண்டு தமது பன்னிரண்டு திருக் கண்களையும் கொடிய வடவாக்கினி போல் ஜொலிக்கச் செய்து உற்று நோக்க அவை வெந்து நீறாகி வெற்றிடமாயின. இரத்த வெள்ளமும் வறண்டது. மூவுலகங்களும் முன்போல் விளங்கின.

போர்க் களத்தில் நின்ற சூரபன்மன் முருகப் பெருமானின் இத்தகைய திவ்வியப் பெருஞ் சாதனைகளையும் அவற்றை அவர் திருவிளையாடலாகவே அநாயாசமாகப் புரியும் பாங்கினையும் கண்டான். தன் சேனைகளை அழித்த சேவலானை நேருக்கு நேர் எதிர் கொண்டு போர் புரியத் தானே முன்வந்தான்.

இடியேற்றைத் தேடிச் சென்றது வெந்நாகம். (தொடரும்)



ஜீவகீதம்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் நாற்பத்தைந்து

திசை மாற்றம்

பழமும் காயும் பிஞ்சும் பூவுமாக மந்திரக்காரன் சிருஷ்டித்துக் காட்டிய மாங்கன்றின் அழகில் பிரமித்துச் சொக்கி நிற்கும்போது திடுமென்று அது மறைந்து போனால் எத்தகைய ஏமாற்றமும் வெறுமை உணர்ச்சியும் ஏற்படுமோ, அந்நிலையில் தளர்ந்து துவண்டு சூனியம் கப்பிய மனத்துடன் வீடு வந்து சேர்ந்த சபேசன், வாசற் கதவு பூட்டிக் கிடக்கவே திண்ணையில் ஏறிப் படுத்து விட்டான்.

தூக்கமா வந்தது? இல்லை; துயரம் நெஞ்சைப் புரட்டியது. சுவர்ப் பக்கமாக ஒருக்களித்துச் சாய்ந்து மௌனமாய்க் கண்ணீர் வடித்தான். சாணத்தால் மெழுகிய மண் தரையில் கண்ணீர் கவர்ந்து கன்னத்தை ஈரமாக்கி அரிப்பு ஏற்றியது.

''எல்லாம் தோல்வி! எதிலும் ஏமாற்றம்! இனி நான் என்ன செய்வேன்? என்னால் இனி என்ன செய்ய முடியும்?'' — இவ்வாறு சிறு பிள்ளையைப் போல் வாய்விட்டு அரற்றினான் அவன்.

மறு கணம் ஏதோ ஒன்றால் தெம்பித் தூக்கப்பட்டவன்போல் திடுமென எழுந்து உட்கார்ந்தான். பரபரப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தான். பிறகு தன் வலது செவியில் கை வைத்து எதையோ கூர்ந்து கேட்பவன் போல் குனிந்தான்.

'இறைவா! என் உள்ளத்தில் கவிந்துள்ள பேரிருளை அகற்று; அச்சத்தைத் துரத்து; ஆண்மையைக் கொடு! உன் பெருங் கருணைச் சிலிர்ப்பால் என்னைத் திளைக்கச் செய்து மகிழ்ச்சி ஏற்று! உன் வெற்றிச் சின்னத்தை வீறுடன் ஏந்தச் செய்!....

அவ்வாறாயின்,

குட்டையில் குதிப்பேன்; நீர் நிலையின் ஆழத்தில் மூழ்கினாலும் கவலை இல்லை. என்னையே அழிக்கும் விளையாட்டை விளையாடுவேன்...... இறுதியில் என்னை — என்

உயிரை — பந்தயப் பொருளாக வைத்துச் சோதிப்பேன்!.......'

கவியரசர் தாகூரின் இந்தப் புத்துணர்ச்சியூட்டும் பாடல் அவனது உள் மனத்திலிருந்து பீரிட்டெழுந்து உட்செவியில் மந்திரகானமாக ஒலித்தது.

அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான். தெரு ஓரத்தில் தழைத்துப் படர்ந்து ஓங்கி வளர்ந்திருந்த பூவரச மரம் ஒன்றின் இரு கிளைகளினூடே நீலம் பாரித்துத் தெரிந்த அடிவானத்தை நோக்கி அவனுடைய பார்வை வெறித்தது. அங்கே நிதானமாக வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்த ஒரு பருந்து சற்றைக்கெல்லாம் தொடுவானத்துக்கப்பால் போய் மறைந்தது.

பூட்டிக் கிடந்த கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டுத் திரும்பினான் சபேசன். கழனிக் காட்டிலிருந்து களைப்பும் சோர்வுமாக வந்த மீனாட்சி அவனைப் பாராமலே ஒருவித சலிப்புடன் முகத்தை வைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

இதைப் பொருட்படுத்தாத சபேசன் உறுதியானதொரு முடிவுக்கு வந்தவன்போல் விருட்டென்று எழுந்து கூடத்து அறைக்குள் விரைந்தான். ஒரு மூலையில் கிடந்த 'கான்வாஸ்' பையைத் திறந்து தனது பொருள்களையெல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு, அதில் பத்திரமாகச் செருகி வைத்திருந்த பதினைந்து ரூபாயை எடுத்து ஜேபியில் திணித்துக் கொண்டான். அலட்சியமாகத் தன் தலைக் கேசத்தை விரல்களால் கோதி ஒதுக்கி விட்டவாறு நிமிர்ந்து, ''அத்தை !'' என்றான் ஓசையாக.

''ஏங்க, தம்பி?'' என்று உள்ளிருந்தபடி குரல் கொடுத்தாள் மீனாட்சி.

''இப்படிக் கொஞ்சம் வருகிறீர்களா?''

உடனே வராமல் சற்றுத் தாமதமாகவே வந்த மீனாட்சி, அங்கு பையும் கையுமாக ஏதோ நெடுந் தூரப் பயணத்துக்குத் தயாராகி விட்டவன் போல் நின்ற சபேசனைப் பார்த்துத் திகைத்தாள்.

''நான் போய் வருகிறேன், அத்தை ! மதராஸுக்குப் போகிறேன். அத்தான் வந்ததும் சொல்லி விடுங்கள்.'' — உற்சாகத்துடன் கூறினான் சபேசன்.

மீனாட்சியின் திகைப்பு இன்னும் நீங்கவில்லை. ''என்ன தம்பி இது, திடீர்னு கிளம்பிட்டீங்க?......'' என்று இழுத்தாள்.

சபேசனுக்கு அதிகம் பேச விருப்பமில்லை. ''ஆமாம், அத்தை ! அதைத் தவிர வேறு வழியில்லை'' என்றான் சுருக்கமாக.

ஏதும் சொல்லத் தோன்றாமல் மௌனமாய்த் தலை குனிந்திருந்த மீனாட்சி, உள்ளே போய் ஒரு தம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து விட்டு, ''பட்டணத்துக்குப் போனதும் மறக்காமல் கடுதாசி போடுங்க!'' என்றாள் கரகரத்த குரலில். என்னதான் வறுமையால் மனம் மரத்துப் போயிருந்தாலும் இரத்த பாசம் விட்டு விடுமா ? அவள் கண்கள் கலங்கின.

''அவசியம் கடிதம் எழுதுகிறேன், அத்தை ! அவ்வப்போது உங்களுக்கு என்னாலான உதவி செய்யவும் பார்க்கிறேன்.''— சபேசனின் குரலும் கம்மிக் கரைந்தது.

''உங்க அப்பாரைப் பற்றி எதனாச்சும் தகவல் தெரிஞ்சா அதையும் தெரியப்படுத்துங்க தம்பி!''

இதைக் கேட்டதும் சபேசன் முகம் வெறுப்பால் கறுவடைந்தது. அந்த வார்த்தைகளைக் காதில் வாங்காதவன் போல் அலட்சியமாகத் திரும்பிய அவனது பார்வை, அங்கே மாடப் புரையில் அணைந்து கருகிய நிலையிலே கிடந்த ஓர் அகல் விளக்கை நோக்கிச் சென்றது. அது அவனுடைய அன்னை கண்ணம்மா இறந்த போது ஏற்றிப் பின் அணைக்கப்பட்ட விளக்கு! அதன் அருகில் திருநீற்றுக் கிண்ணம் ஒன்றும் இருந்தது.

அந்த விளக்கையே சிறிது நேரம் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த சபேசனின் கண்டம் விம்மிப் புடைத்துக் கண்கள் நீரிலே மிதந்து மின்னின. கிண்ணத்திலிருந்த திருநீற்றில் கொஞ்சம் எடுத்து நெற்றிக்கு இட்டுக் கொண்டு, இரு கரங்களையும் குவித்து அவ்விளக்கை வணங்கிய அவன் சட்டென்று திரும்பி அமைதியாக வெளியே நடந்தான்.

பிரமித்த நிலையில் திண்ணைத் தூணைப் பிடித்துக் கொண்டு நின்ற மீனாட்சி, தொலைவில் செல்லும் அவனையே விழியசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாலை ஐந்து மணி இருக்கும். கோவை ரயிலடிப் பாலத்தருகே பஸ்ஸை விட்டு இறங்கிய சபேசன் பல்வேறு சிந்தனை மோதல்களோடு ரயில் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

'பட்' என்று சத்தம். அதைத் தொடர்ந்து சிலர் சிரிக்கும் ஒலி.

அவன் திரும்பிப் பார்த்தான். அதே சமயம் அவனது காலணிகளில் ஒன்று மேல்வார் அறுந்த நிலையிலே கழன்று சற்றுத் தொலைவில் போய் விழுந்தது. இன்று காலை சந்தியாவைச் சந்திக்கப் போகு முன் வெகு கஷ்டப்பட்டு ஊசி நூலால் தைத்துச் செப்பனிட்ட காலணிதான் அது. கோவை நகருக்கு வந்து சேர்ந்த அன்று எந்த இடத்தில் அந்தக் காலணி அறுந்து அவனுடைய மானத்தை வாங்கியதோ, அதே இடத்தில் இன்றும் சொல்லி வைத்தாற் போல் அறுந்து விழுந்து விட்டது. நடைபாதையில் தம் கடைகளை ஏறக்கட்டிக் கொண்டிருந்த காலணிக் கலைஞர்களுக்கு இந்தக் காட்சியைக் கண்டதும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''சனியன், இதோடு தொலையட்டும்!'' என்று எரிச்சலுடன் முனகிய சபேசன் தனது மற்றொரு காலில் இருந்த காலணியையும் உதறி எறிந்து விட்டுத் திரும்பிப் பார்க்காமல் மேலே நடந்தான்.

சென்னை செல்லும் ரயிலுக்கு இன்னும் முக்கால் மணி நேரம் இருந்தது. மாலை ஆறு மணி ஐந்து நிமிடங்களுக்கு அது கோவையை விட்டுப் புறப்படும். சாவதானமாக வந்த சபேசன் டிக்கட் கொடுக்கும் இடத்தில் சிறிதளவே இருந்த 'க்யூ' வரிசையில் போய் நின்றான். எதிரே ரயில்வே போலீஸார் தங்கும் அறை ஒன்று இருந்தது. அது பிரயாணிகளின் பெட்டி படுக்கை சாமான்களைப் பத்திரப்படுத்தவும் உபயோகப்படுவது. அவ்


அமிர்தாஞ்சனம்
தடவி விரைவில்
நிவாரணம்
பெறுங்கள்
உடலில் ஒரு பகுதியை மட்டும் பாதிக்கும் வலிக்காக உள்ளுக்கு மருந்து சாப்பிடுவானேன்? வலிக்கும் இடத்தின் மேல் மட்டும் அமிர்தாஞ்சனம் தடவி விரைவாக வலி நிவாரணம் அடையுங்கள். பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள அமிர்தாஞ்சனம் சுளுக்கு, தசைவலி, தலைவலி மற்றும் மூட்டு வலிகளுக்கு சிறந்த வகையில் நல்ல நிவாரணமளிக்கும். மற்றும் மார்புச்சளி, ஜலதோஷம் போன்றவைக்கும் ஏற்ற மருந்து அமிர்தாஞ்சனம். ஒரு சமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால், ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக்கணக்கில் வரும். • அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி.
பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி.
சுளுக்கு
எவ்வளவு
அசௌகரியமாக
இருப்பினும் உபாதை
வலிக்கும் பகுதியில்
மட்டுமே
AMRUTANJAN
Pain Balm
அமிர்தாஞ்சன் லிமிடெட், மெட்ராஸ்
பம்பாய் - கல்கத்தா - டெல்லி

வறைக்கு வெளியே சில மரப் பெட்டிகள் கிடந்தன. இரவு நேர 'டியூட்டி'க்கு வந்திருந்த போலீஸாரில் சிலர் அந்தப் பெட்டிகளிலிருந்து தம் உடுப்புகளை எடுத்துச் சாங்கோபாங்கமாக அணிந்து கொண்டிருந்தனர். ஒருவர் கனத்த பூட்சுக்கு மேல் கெண்டைக் கால்வரை காக்கி நிறப் பட்டியை நிதானமாகச் சுற்றிக் கொண்டிருந்ததை வெகு சுவாரசியமாகப் பார்த்தவாறு 'கியூ'வில் நகர்ந்து கொண்டிருந்தான் சபேசன்.

''என்ன தம்பி, என்னை அடையாளம் தெரிகிறதா?''

சட்டென்று திரும்பினான். அவனுக்குப் பின்னால் இரண்டு பேர்களுக்குத் தள்ளி நின்று கொண்டிருந்த ஒருவர் அவனைப் பார்த்து முறுவலித்தார். சபேசனும் அவரை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

''கண்ணுச்சாமியோட மகன் சபேசன் தானே நீங்க?''

''ஆமாம்; நீங்கள்?...''

''முதல் கப்பலில் நான் உங்களோடு வந்தேனே, மறந்துட்டீங்களா?''

அவர் பர்மா அகதி என்பதும், ரங்கூனில் கொஞ்ச காலம் தன் தந்தையோடு வேலை பார்த்துக் கொண்டிருந்து விட்டு, பிறகு வேறு இடத்துக்குப் போய்விட்டார் என்பதும் அதன் பின் கப்பல் பயணத்தின்போது தனக்கு உதவிகள் பல செய்தவர் என்பதும் சபேசனுக்கு இப்போதுதான் ஞாபகம் வந்தன. ''வணக்கம் அண்ணே!'' என்றான் பவ்யமாக.

சற்று நேரம் ஏதோ யோசித்த அவர், ''அது சரி, தம்பி! மெட்ராஸ் காம்பில் இருந்த நீங்கள் எங்களோடு வரவில்லையே, அதுக்கு முன்னடி ஊருக்குப் போயிட்டீங்களா?'' என்று விசாரித்தார்.

அந்தக் குழறுபடியான விவரங்களை அவரிடம் சொல்ல விரும்பாமல், 'ஆம்' என்று மட்டும் தலையசைத்தான் சபேசன்.

''இப்போ எங்கே பயணம்? பெங்களூருக்கா?'' என்று கேட்டார் அவர்.

'என்ன இவர், எனக்குச் சம்பந்தமில்லாத ஊரைச் சொல்லிக் கேட்கிறாரே' என்று எண்ணிய சபேசன், ''இல்லே; சென்னைக்கு!'' என்றான். ''நீங்கள் இப்போது எங்கே யிருக்கிறீர்கள் அண்ணே?''


''திருச்சிராப்பள்ளிக்குப் பக்கத்திலே மாத்தூர் காம்பில் இருக்கிறேன். சர்க்கார் எல்லா வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறது. இன்னும் கொஞ்ச நாளில் ஒவ்வொரு பர்மா அகதிக் குடும்பத்துக்கும் மூணு அல்லது நாலு ஏக்கரா நிலமும், விவசாயக் கருவிகளும், சிறிது ரொக்கப் பணமும் கொடுத்துச் சொந்தமாகப் பயிரிட்டுக் கொண்டு வாழ வகை செய்யப் போகிறார்களாம். இப்பவே எங்கள் பிள்ளைகள் படிக்க இரண்டு ஆரம்பப் பள்ளிகள் தொடங்கி நடந்து வருகின்றன.''

தன்னை மீறிய ஆவலோடும் உள்ளார்ந்த கவலையோடும் இவ்விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்த சபேசனுக்குத் 'தானும் ஒழுங்காக மூகாமிலேயே இருந்திருந்தால்' என்ற ஏக்கம் உள்ளத்தைக் குடைந்தெடுத்தது.

''இந்த ஊரில் என் பழைய முதலாளி ஒருவர் இருக்கிறார். அவரைப் பார்த்துக் கொஞ்சம் உதவி கேட்கலாம் என்று வந்தேன். நான் வந்த நேரம் சரியாயில்லே. அவர் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்'' என்று வருத்தத்துடன் சொல்லி நிறுத்திய அந்த மனிதர், ''ஆமாம்; நீங்க ஏன் தம்பி இப்ப பட்டணத்துக்குப் போகிறீங்க?'' என்று கேட்டார்.

உண்மையைச் சொல்லத் தயங்கிய சபேசன், ''என் அப்பா இன்னும் நாடு திரும்பவில்லே, அண்ணே! இரண்டாவது கப்பல் வரும்வரை சென்னையில் இருந்து பார்த்து விட்டு ஊருக்கு வந்து விட்டேன். மூன்றும் கப்பல் வந்ததா இல்லையா என்ற தகவல் தெரியவில்லே. அதுதான் போய்ப் பார்த்து விட்டு வரலாம் என்று...'' என்றான் இழுத்தாற் போல.

''என்னது? மூன்றாவது கப்பல் வரவில்லையா? அது விசாகப்பட்டினத்துக்கு வந்து சேர்ந்து கிட்டத்தட்ட இரண்டு வாரங்களாகப் போகின்றனவே!''




கல்கி வெள்ளிவிழாப் பரிசுப் போட்டி

எழுத்தாளர்களின் எழுத்துப் பணி சிறக்கச் செய்வதே இந்த வெள்ளி விழா ஆண்டை விமரிசையாகக் கொண்டாடுவதற்கான சிறந்த வழி என்ற அளவில் இருபத்தையாயிரம் ரூபாய் பரிசுத் திட்டம் வைத்துள்ளோம். சிறந்த நாவலுக்கு முதல் பரிசு 10,000 ரூபாய்; இரண்டாவது பரிசு ரூபாய் 7,500 மூன்றாவது பரிசு ரூ. 5,000. சிறந்த சிறுகதைக்கு ரூ. 1000; இரண்டாவது பரிசு ரூ. 500; மூன்றாவது பரிசு, பத்துச் சிறுகதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 வீதம் ரூ. 1000.

இந்த நாவல், சிறுகதைப் போட்டிகளுக்கு ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பி வைக்கலாம்.

இந்தப் போட்டிக்கு வரும் சிறுகதை, நாவல்களைப் பரிசீலனை செய்து தீர்ப்பளிக்க இலக்கியத் துறையிலும், எழுத்துத் துறையிலும் முதிர்ந்த பஞ்சாயத்தார்கள் நியமிக்கப்படுவார்கள். இந்த நாவல், சிறுகதைப் போட்டிகளின் விஷயத்தில் ''கல்கி'' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

முடிவுத் தேதி 31-12-65 என்பதை நினைவூட்டுகிறோம்.



"என்ன, கையில் சாக்பீஸோடு தயாராய் பட்சணப் பட்டியல் போர்டிடம் ஒருவன் நிற்கிறானே?"

"அடிக்கடி, நிமிஷத்துக்கு நிமிஷம் பட்சணங்களின் விலையை மாற்றி உயர்த்தி எழுத வேண்டியிருக்கிறதே; அதற்கு ஒரு ஆளையே நியமிக்க விட்டார் ஹோட்டல் முதலாளி!"

"அப்படியா?"

"ஆமாம், தம்பி! அந்தக் கப்பலில் வந்த பர்மா அகதிகளெல்லாம் விசாகப்பட்டினத்திலேயே இறக்கப்பட்டு விட்டார்களாம். அதில் உன் அப்பாரு கண்ணுச்சாமியும் வந்ததாகக் கேள்விப்பட்டேன்."

"உண்மைதானா, அண்ணே?"

"யாரோ சொன்னதாக ஞாபகம். உங்களுக்கு ஒன்றும் தகவல் இல்லையா தம்பி?"

"இல்லே, அண்ணே! அதனால்தான் இப்போது......"

"மதுரைக்குப் போகிறீங்களா? அங்கே போய் என்ன பிரயோசனம்?"

"ஏன் அண்ணே? விசாகப்பட்டினத்தில் இறங்கினாலும், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களையெல்லாம் முதலில் சென்னை முகாமுக்குத்தானே அனுப்பி வைப்பார்கள்?"

"அப்படிச் சொல்ல முடியாது, தம்பி! கொஞ்சம் பேரைப் பெங்களூரில் முகாம் போட்டு வைத்திருப்பதாகக் கூடப் பேசிக் கொண்டார்கள். அதனால்தான் உன்னைப் பார்த்ததும் பெங்களூருக்கா போகிறாய் என்று கேட்டேன்."

"பெங்களூரில் எங்கே அண்ணே?"

"அதெல்லாம் எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. பராபரியாகப் பேச்சு அடிபட்டதைச் சொல்கிறேன். இனி மேல்தான் விவரம் தெரியும்."

கியூ வரிசையில் நகர்ந்து கொண்டேயிருந்த சபேசன் டிக்கட் கொடுக்குமிடத்தை அடைந்து விட்டான். அந்தச் சில நிமிடங்களில் அவனுள்ளே ஒரு பெரிய போராட்டமே நடக்கலாயிற்று. 'இப்போது சென்னைக்கு டிக்கட் வாங்குவதா? அல்லது பெங்களூருக்கா?' — மூன்றாவது கப்பலில் தன் தந்தை வந்து விட்டிருப்பார் என்று எப்படியோ அவன் மனம் நிச்சயப்படுத்தி விட்டது. அத்துடன் அவர் பெங்களூர் முகாமில்தான் தங்கியிருப்பார் என்றும் தீர்மானித்து விட்டான். 'சென்னை செல்லும் இதே ரயிலில் ஏறி ஜோலார்ப்பேட்டையில் இறங்கிக் கொண்டு, பிறகு சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் மெயிலில் ஏறிக் கொள்ள வேண்டியது. பெங்களூருக்குச் சென்றும் அங்கே யாரிடமாவது விசாரித்துக் கொண்டு என் தந்தை யார் இருக்கும் முகாமைக் கண்டுபிடித்து விடலாம்.' — தன்னை மீறிய ஓர் ஆவேசத் துணிவுடன் இவ்வாறு முடிவு செய்த சபேசன், தன்னிடமிருந்த பதினைந்து ரூபாயை எடுத்து நீட்டி, "பெங்களூர் கன்டோன்மென்ட்" என்றான் உற்சாகமான குரலில். ஒரு மூன்றாம் வகுப்பு முழு டிக்கட்டுக்குப் பதின்மூன்று ரூபாயும், சில்லறையும் போக, மீதிக் காசையும் டிக்கட்டையும் வாங்கி ஜேபியில் போட்டுக் கொண்டு, சுரங்கப் படிகளில் விரைந்து ஏறிப் போய் வண்டியில் இடம் பிடித்து அமர்ந்தும் கொண்டான். இப்போது அவனிடமிருந்த ஆஸ்தி ஒரு ரூபாயும் சில நயா பைசாக்களும்தான்!

வண்டி புறப்பட்டது. அந்தப் பர்மா அகதி ஆசாமியும் அவன் இருந்த பெட்டியில் தான் ஏறியிருந்தார். மகிழ்ச்சிகரமான, ஏதேதோ கற்பனையில் ஆழ்ந்திருந்ததால் சபேசன் அவரிடம் ஒன்றும் பேசவில்லை. அவரும் தம் கவலையில் ஆழ்ந்தவராய் எங்கோ பார்த்தவாறு மௌனமாயிருந்தார்.

ஈரோடு ஜங்ஷன் வந்து போனதையே சபேசன் கவனிக்கவில்லை. சேலம் சந்திப்பில் வண்டி நின்றது. அந்தப் பர்மா அகதி அங்கு இறங்கிக் கொண்டார். சேலத்திலிருந்து வேறு வண்டி மாறியோ அல்லது பஸ்ஸிலோ அவர் போய் விடுவார் போலும். அவரிடம் விடைபெறுவதற்காகச் சன்னலுக்கு வெளியே தலை நீட்டிய சபேசன், அங்கே அந்த ரயில் நிலையத்தின் பிளாட்பாரத்துக் கோடியில் ஓர் எதிர்பாராத காட்சியைக் கண்டு அப்படியே வியப்பும் திகைப்புமாகத் தடுமாறி விட்டான்.

ஆமாம்; அவன் பார்த்த இடத்தில், பாவின்தான் அகதிகளான ஏழெட்டுக் குடும்பங்கள் மூட்டை முடிச்சுக்களுடன் கும்பலாக உட்கார்ந்திருந்தன. அவர்களைச் சுற்றிச் சில போலீஸாரும் நின்றிருந்தனர். அந்த அகதிகள் குழுவில் சுரேஷ் சௌத்ரியும், அவரது மகள் சந்தியாவும்கூட இருப்பது தெளிவாகத் தெரிந்தது!

உணர்ச்சி வசப்பட்டுப்போன சபேசன் கீழே இறங்கிவிட யத்தனித்தான். ஆனால் அதற்குள் வண்டி புறப்பட்டு விட்டது. (தொடரும்)




31
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி..
அவள் எங்கே?
என் வாழ்வை இன்னி எப்படி வாழ முடியும்? சாத்தியமற்ற பேச்சு கந்தசாமி.
வாழ முடியும் வழி இருக்கிறது. இன்னும் ஒரு வாரத்தில் மறுபடி உன்னை வந்து சந்திக்கிறேன். அப்போது என்னைப் பார்!...
சொன்னபடியே ஒருநாள் இரவு திரும்பி வந்தான் கந்தசாமி.
இது...யார்? நாதனையல்லவா? உண்மையாகவா?
ஆ... கந்தசாமியா?
ஹ..ஹ..ஹா! எப்படி இந்த வேஷம் பம்பாயிலே மிகப் பிரபலமானதொரு கலைஞரின் கை வேலை இந்த முகமூடி. இதைப் போட்டுக் கொண்டால் போலீஸ் என்னைக் கண்டு பிடிக்கவே முடியாது. நீதிபதியவர்களே இந்த உங்கள் உருவத்துக்குள் இருப்பது கந்தசாமி..
இப்போது சொல்லுங்கள். நான் நீயாக வாழ முடியுமல்லவா? பகலெல்லாம் நீ நீயாக இரு. நீதிபதியின் வீட்டிலுள்ள தப்பியோடி வந்த கைதியான நான் பகலிலே மறைந்திருப்பேன். நல்ல பத்திரமான இடமில்லையா? இரவிலே இதன் உதவியால் நான் நீயாக மாறி என் வாழ்வை வாழுவேன். ஹ..ஹ..ஹா. ஏன் பயப்படுகிறாய்?
மெல்ல மெல்ல அவனை மாற்றி விடலாம் என்ற நம்பிக்கையில் அவன் திட்டத்துக்கு அவர் உடன்பட்டார். ஆரம்பத்தில் அவன் பொறுப்பாகவே இருந்தான். இரவிலே அவர் எங்கும் போகக் கூடாதென்பது அவன் ஏற்பாடு. குடும்பமற்ற நடராஜனுக்குத் தன் வாழ்வை இப்படி இன்னொருவனுக்குப் பகிர்ந்தளிப்பதில் சிரமம் ஏதும் இருக்கவில்லை. ஆனால் அவர் செய்த ஒரு முட்டாள்தனம், அவனிடம் கொண்ட அதிக நம்பிக்கையில் தம் தம்பியைப் பற்றிய ரகசியங்களை ஒரு நாள் அவனிடம் உளறிவிட்டார். அதுவே அவரைக் கைப்பொம்மையாக்கி விட்டது...


இதன் பிறகு கந்தசாமி தர்மராஜனை ஆட்டி வைக்கலானான். வசதியும் வாய்ப்பும் அவனை வாழ்வின் சுகங்களைத் தேடி ஓட வைத்தன. அப்போதுதான் மாலதியின் சந்திப்பும் நட்பும் ஏற்பட்டது. அவளிடம் அவன் தன் இரட்டை வாழ்வைப் பற்றிச் - சொல்லியிருக்கலாம்..
இப்போது எல்லாமே விளங்கிவிட்டது. ரூபரா ஹோட்டலிலுள்ள அறைகளைக் கவனித்துக் கொள்ளும் பையன் கொடுத்த சில தகவல்களின்படி தான் இதில் நீங்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக ஊகித்தேன்.
உங்கள் ஊகம் சரியானதுதான். என்னைப் போலவே அவன் வாழ்ந்திருக்கிறான். என் நடை, உடை, பாவனை எல்லாம் அவனுக்குக் கை வந்த கலையாகி விட்டன. தவிர அந்த முகமூடியின் அற்புத வேலைப் பாடும் அப்படி..
மாலதியின் தலையற்ற உடலுக்கு கூட அந்த ... கிடைக்குமில்லையா?
இன்னுமொரு சின்ன சந்தேகம் சார்! சாட்சிப் பொருளான துப்பாக்கியை நீங்கள் வாங்கிக் கொண்டு போய் அவனிடம் கொடுத்தது பிழைத்த மாலதியை மறுபடியும்...
நீதிப் புறம்பான செயல்தான். நாய் வேஷம் போட்டால் குரைத்துத்தானே ஆகணும். இந்தத் திட்டத்தில் அவன் ஈடுபட்டதும் என் நல்லெண்ணம் மாறிவிட்டது. இதில் அவனைப் பகைத்துக் கொள்ளவும் முடியவில்லை. என் நல் வாழ்வை அவன் கையில் ஒப்புவித்தவனாகி விட்டேன்.
இந்தச் சிக்கலிலிருந்து விடுபட்டதும் அவன் என் வாழ்விலிருந்தே விலகிப் போய் விடுவதாக வாக்களித்திருந்தான்.


இந்தக் கொலைக்குப் பின் ஆரம்பத்திலெல்லாம் மனமில்லாமல் வேண்டா வெறுப்பாக அவனது செயல்களுக்கு ஒத்துழைத்தேன். நிரபராதியான குமார் என்ற அந்தப் பையன் குற்றவாளியாகித் தண்டிக்கப்படுவானே என்று எப்படித் தவித்துப் போனேன் தெரியுமா? ஆனால் போலீசின் நோக்கமும் வேறு திசையில் திரும்புவதை அறிந்து என் மனம் குதூகலப்பட்டது. எப்படியாவது தர்மராஜனின் மீது அதாவது — என் மீது சந்தேகம் வலுப்பட்டு வரும்போது என் இரட்டை வாழ்க்கையை வெளிப்படுத்திவிட வேண்டும் என்ற துடிப்புடன் காத்திருந்தேன்..
உங்கள் மனமாற்றத்தை ஊகித்தறிந்திருப்பான் அவன் இல்லையா?
ஆமாமாம்! தினமும் அவனுடன் வாக்குவாதம்தான். கடைசியில் அவனைத் தேடி வந்த ஒருவனையும் தீர்த்துக்கட்ட முயற்சித்த போதுதான் நான் எரிமலையானேன்.
இந்தச் சமயத்தில் குமாரும் டாக்டர் சுரேஷும் வருகிறார்கள்...
அதோ டாக்டரும் அவர் மகனும் வருகிறார்கள்.
பையனை உடனே விடுதலை செய்து அனுப்பும்படி ஏற்பாடு செய்து விட்டுத்தான் நான் இங்கு வந்தேன்.
டாக்டர் சார்! என்னால் உங்களுக்கு மனக்கிலேசம். உங்கள் பையனுக்கும் எத்தனையோ கஷ்டங்கள். மன்னிக்க வேண்டும்.
அவன் விதி அப்படி.
தன் காதலியை இழந்த குமாருக்கு நமது அனுதாபங்கள்..
ஏன் ரேணுகாவுக்கும் குமாருக்கும் மணம் முடித்து விட்டால் போகிறது. என்ன டாக்டர்...?
மகன் மீண்டதில் எனக்கு மகிழ்ச்சி தான். ஆனால் ரேணுகாவின் தந்தையைக் காப்பாற்றியும் மீட்க முடியாமல் போனது தான் வேதனை.
முன்பு நிரபராதியாக இருந்து சிறைத் தண்டனை அனுபவித்த கந்தசாமி இப்போது நிஜக் குற்றவாளியாகித் தண்டனை அனுபவிக்க, தப்பிவந்த சிறைக்கே அனுப்பப்பட்டான். நீதிபதி தர்மராஜன் மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்துத் தம் பதவியை ராஜினாமா செய்தார். குமாரும் ரேணுகாவும் தம்பதிகளானார்கள் என்று சொல்லவும் வேண்டுமா? துப்பறியும் இரட்டையர்களின் புகழ் மேலும் உயர்ந்தது................
..... முற்றும்.......


VICCO TURMER
VANISHING CRE



சென்னை கண்ட வைபவங்கள்

சமீபத்தில் நாம் கொண்டாடிய நவராத்திரி சரத் காலத்தில் நிகழ்வதால் இதனை 'சாரதா நவராத்திரி' என்று கூறுவார்கள். சென்னை மாநகரத்தைப் பொருத்த மட்டில் மற்றொரு விதத்திலும் இவ்வருட நவராத்திரியானது சாரதா நவராத்திரியாக அமைந்தது. ஸ்ரீ சாரதாம்பிகை எழுந்தருளும் ஸ்ரீ சிருங்ககிரி பீடாதிபதிகளாகிய ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் தமது சாரதா பூஜையையும், தர்பாரையும் நவராத்திரி சமயத்தில் சென்னையில் நடத்தியதால் இது சாரதா நவராத்திரியாகவே மக்கள் நினைவில் நின்றது.

ஜகன்மாதா மஹிஷாசுரனை வதைத்து வெற்றி பெற்றதைக் குறிக்கும் நவராத்திரி விழா சிருங்ககிரி ஆசாரியர்களின் சென்னை விஜயத்தினால் ஒரு பெரிய கோலாகலமாகவே நிகழ்ந்தது. ஸ்ரீ சாரதாம்பிகையின் பூஜை ஒருபுறமிருக்க, அவளது பாதமாகவே மதிக்கப் பெறும் கிரீடத்தை ஸ்ரீ சுவாமிகள் அணிந்து, அவளிடமிருந்தே பெற்ற பொன்னுடையும் பூஷணங்களும் தரித்து, ஜாஜ்வல்யமான சூழ்நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் காணுமாறு கொலுவிருந்து தர்பார் நடத்தியது மறக்கவொண்ணாத நிகழ்ச்சியாகும்.

பூஜை, தர்பார் இவற்றோடு மிகப் பெருமளவில் தேவியின் பிரீதிக்காக சஹஸ்ரசண்டி யக்ஞமும் சுவாமிகள் தங்கியிருந்த அண்ணாமலைபுர முகாமை அடுத்தே நடைபெற்றது. சீன அபாயம் அதிகரித்த போது இந்த அற்புதமான வேள்வியை சிருங்ககிரியில் நடாத்தி வைத்த ஸ்வாமிகள், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு நிகழ்ந்துள்ள தற்சமயத்தில் மீண்டும் தேச க்ஷேமார்த்தமாகச் சென்னையில் இந்த மகத்தான யக்ஞத்தை நிறைவேற்றித் தர முன் வந்தது சென்னை நகரத்து ஆஸ்திகப் பெருமக்கள் செய்த பாக்கியமாகும். அதன் காரணமாக ஸ்ரீசுவாமிகள் அவர்களுடைய இதய பூர்வமான நன்றியையும் நமஸ்காரத்தையும் பெற்றுள்ளார்கள்.

அம்பிகையைக் குறித்த 'சஹஸ்ரசண்டி'யை அடுத்தே ஈசுவர கிருபையைப் பெறும் நிமித்தமாக சுவாமிகளின் ஆக்ஞைப்படி விமரிசையாக அதிருத்ர யக்ஞமும் நடைபெற்றதைச் சென்னை மக்களின் நற்பேறு என்றே கூற வேண்டும்.

இம்மாபெரும் வைபவங்களை ஒட்டினாற்போல் ஸ்ரீ சுவாமிகளின் குருநாதராகிய ஸ்ரீ சந்திரசேகர பாரதி அவர்களின் ஜயந்தி பூஜையும், ஸ்ரீ சுவாமிகளின் ஜன்மதினமும் கொண்டாடப் பெற்றன.

மங்களகரமான தீபாவளித் திருநாள் ஸ்ரீ சிருங்ககிரி ஆசாரியர்களின் நாற்பத்தொன்பதாவது பிறந்த தினமாகவும் அமைந்தது. அன்று அவர்களுக்கு மக்கள் சிரத்தாஞ்சலி தெரிவிக்கப் பொதுக்கூட்டம் நடந்தேறியது. மைசூர் மகாராஜா, முதன் மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம், ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர், பிரம்மஸ்ரீ அனந்தராம தீட்சிதர், ஸ்ரீ ஜி. வா. ஜகந்நாதன் ஆகியோர் சுவாமிகளின் பெருமைகளை எடுத்துக் கூறினர்.

இரு பெரும் யக்ஞங்களும் நடைபெற்ற நிலத்தை ஸ்ரீ வைத்திய சுப்பிரமணிய அய்யரவர்கள் ஒரு பிரார்த்தனை மண்டபம் எழுப்புவதற்காக வழங்கினார். ஸ்ரீ கே. ஆர். சுந்தரராஜன் அவர்கள் கோடம்பாக்கத்தில் ஸ்ரீ சாரதா தேவிக்கு ஆலயமெடுப்பதற்காகப் பூமிதானம் செய்தார். ஸ்ரீ ஸ்வாமிகள் இத்திருநாளன்று தேசப் பாதுகாப்பு நிதிக்காக, அம்பிகைக்குக் கனகாபிஷேகம் செய்த நாற்பத்தொன்பது பொற்காசுகளும், ஐயாயிரம் ரூபாயும் முதன் மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலத்திடம் வழங்கினார்கள். அதோடு நாடு பகை நீங்கி நல்லறம் பெற்றுத் திகழ வாழ்த்தினார்கள்.

தேசத்தில் தீமைகள் விலகி நலன்கள் பெருகுவதற்காகப் பூஜை, யக்ஞம், உபதேசம், திரவிய சகாயம் முதலிய பல விதங்களிலும் பெருதவி புரிந்து வரும் ஸ்ரீ சிருங்ககிரி பீடாதிபதிகளுக்கு அஞ்சலிகளை அளிக்கிறோம்.

பல்சுவைப் பக்கங்கள் 1



○ முகத்தைப் பார்த்துச் சோதிடம் சொல்லும் ஒருவர் ஞானி ஸாக்ரடீஸைப் பார்த்து, (அவருக்கு ஞானி என்று தெரியாது) 'இந்தச் சப்பை மூக்கையும், கருட்டைத் தலையையும் பார்த்தால் இம்மனிதர் காம வெறி பிடித்த ஸ்திரீலோலனாகவும், முரட்டுக் குணம் படைத்தவனாகவும் இருக்க வேண்டும்' என்று சொன்னார்.


இதைக் கேட்ட ஞானி ஸாக்ரடீஸைச் சுற்றியிருந்த சீடர்கள் பெருங்கோபமுற்று, அந்தச் சோதிடனை அடிக்கப் போனார்கள். உடனே ஸாக்ரடீஸ் அவர்களைத் தடுத்து, 'அந்தச் சோதிடன் கூறியது அவ்வளவும் வாஸ்தவம். அவன் கூறிய அத்தனை கெட்ட குணங்களும் என் உள்ளத்தில் இருந்தன. அவற்றை யெல்லாம், என் பகுத்தறிவினால் வாதம் செய்து, வாதம் செய்து வென்றேன்' என்றார்.

என்ன செய்வது? யூரி ககாரின் இந்தியாவுக்கு வந்திருந்தபொழுது ராஷ்டிரபதி பவனில் அவருக்குப் பெரிய விருந்து ஒன்று கொடுத்தார்கள். விருந்து முடிந்த பிறகு ககாரின் விண்வெளி சென்றதைப் படமாகத் திரையில் காட்டுவதாக இருந்தார்கள். இதைப் பார்ப்பதற்கு எல்லா மந்திரிகளும், எம். பி.க்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

சினிமா ஆரம்பித்தவுடன் பிலிம் பாதியில் அறுந்து விட்டது. சுகாதார மந்திரி ஸ்ரீமதி சுசீலா நய்யார் ஆப்பரேட்டரிடம் சென்று 'அநாவசியமாக எங்கள் நேரம் வீணாகிறது' என்றார்.

'அம்மணி! நான் என்ன செய்வது? பிலிம் ரஷ்யாவிலிருந்து வந்தது. புரொஜக்டர் அமெரிக்காவிலிருந்து வந்தது. இரண்டும் ஒத்துழைக்க மறுக்கின்றன' என்றார் ஆப்பரேட்டர்.

— மிஸ் ஜெயா



● பிரபல இசையமைப்பாளர் கல்யாண்ஜி, ஆனந்த்ஜி பற்றிய சில ரசமான தகவல்கள்:

ஆனந்த்ஜி கதவைத் திறந்தார். எதிரே பிரிகேடியர் அந்தஸ்துள்ள இராணுவ அதிகாரி நின்று கொண்டிருப்பதைக் கண்டார். வெகு உற்சாகத்துடன் இராணுவ அதிகாரி அவர் கையைப் பிடித்துக் குலுக்கினார். "நான் இவ்வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். எதிரேயுள்ள சுவரில் துப்பாக்கி ரவைகளின் அடையாளங்களைக் கண்டதும் உள்ளே நுழைந்தேன். ஆமாம், இப்படித் துப்பாக்கி சுட்டது யார்?" என்று கேட்டார்.

கையைப் பிடித்து விட்டுக் கொண்டே ஆனந்த்ஜி தாம்தான் துப்பாக்கி சுட்டது என்பதை ஒப்புக் கொண்டார். அதிகாரிக்கு ஒரே மகிழ்ச்சி. மீண்டும் அவர் கையை அழுத்திப் பற்றிக் குலுக்கி, "வெல்! எத்தனை காலமாகத் துப்பாக்கி பிடிக்கப் பழகுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"அதுவா? இருபது வருஷங்களாக இம்முயற்சியில் இறங்கியிருக்கிறேன்!" என்றார் ஆனந்த்ஜி.

"இப்படிக் குறி பார்த்துச் சுடுகிறவர்கள்தான் எங்களுக்குத் தேவை!" என்று கூறி மீண்டும் அதிகாரி அவர் கையைப் பற்றினார்.

கைக்கு ஒத்தடம் கொடுக்கத்தான் வேண்டும் என்று முடிவுக்கு வந்து விட்டார் ஆனந்த்ஜி. வெந்நீர் சுட வைக்குமாறு பணியாளனைப் பணித்துவிட்டுக் கைவலிக்கேற்பத் தம் முகத்தைச் சுளித்துச் சிரித்து வைத்தார்.

"நிசமாகவே சரியான குறி. ரவை வெள்ளை வட்டத்துக்குள் நட்ட நடுவிலே இம்மிகூடப் பிசகாமல் பட்டிருக்கிறது. இப்படிக் குறி பார்த்துச் சுடுவதற்கு நீங்கள் மிகவும் பிரயாசைப்பட்டுத்தான் பழகியிருக்க வேண்டும். இல்லையா?" என்று கேட்டார் அதிகாரி.

"ஆமாம், ஆரம்பத்தில் மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது ஒரு நல்ல யுக்தி கண்டு பிடித்து விட்டேன். இனி வட்டத்தை விட்டுக் குண்டு வெளியே போகவே போகாது!" என்றார் ஆனந்த்ஜி உறுதியான குரலில்.

"என்ன யுக்தியோ? எங்களுக்கும்தான் சொல்லுங்களேன்!"

"முதலில் துப்பாக்கியினால் சுட்டு விடுகிறேன். அப்புறம் குண்டு பட்ட இடத்தைச் சுற்றி வட்டம் போடுகிறேன். எப்படி என் யுக்தி?" என்றார் ஆனந்த்ஜி.



● "எங்கள் நாட்டில் ஓர் இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது!" என்று வெளிநாட்டவர் ஒருவர் கல்யாண்ஜியிடம் கூறினார்.



பல்சுவைப் பக்கங்கள் 2

பெரிய நகைக் கடை வியாபாரி அவர். அவருக்குத் திருமணம் நடந்தது. மோதிரம் மாற்று வைபவம் நிகழ்ந்தது. மணமகளின் விரலில் மணமகன் மோதிரத்தை அணிவித்த பொழுது, திருமணத்தை நடத்தி வைத்த பாதிரி, 'இந்த மோதிரம்.....' என்று தொடங்கினார்.

உடனே மணமகன் மேலே தொடர்ந்தார்: 'இந்த மோதிரம் நல்ல தங்க மோதிரம். இத்துடன் நாங்கள் எழுத்து மூலம் ஓர் உத்தரவாதமும் தருகிறோம். வாடிக்கைக்காரர்களுக்கு எந்தக் காரணத்தினாலாவது இது பிடிக்காமற் போனால், நாங்கள் இதைத் திரும்பவும் பெற்றுக் கொண்டு முழுத் தொகையையும் திருப்பித் தரத் தயாராயிருக்கிறோம். இந்த நிபந்தனையின் பேரில்தான் இந்த மோதிரம்....'

பாதிரியார் வாய் அடைத்து உட்கார்ந்து விட்டார்.

எங்கே போக வேண்டும்?

பம்பாய் செல்ல வேண்டுமா? டெக்ஸாஸ் ரயிலில் பிரயாணம் செய்யுங்கள்.

மதுரா போக வேண்டுமா? பஸிபிக் ரயிலில் பிரயாணம் செய்யுங்கள்.


ஆக்ராவுக்கா? கான்ஸாஸ் ரயிலைப் பிடியுங்கள்.

சிம்லாவா? சிகாகோ ரயில் ஏறவேண்டும்.

மற்றும் பெங்கால், காஷ்மீர், லக்னௌ போக வேண்டுமென்றால் கிரேட் நார்தர்ன் ரயிலில் சென்றால் அடையலாம்.

என்ன மூளை குழம்பி விட்டதா என்று யோசிக்கிறீர்களா? இல்லை. அமெரிக்காவில் உள்ள புகை வண்டி நிலையங்கள்தாம் இவை. அமெரிக்கர்களுக்கு இந்திய நகரங்களின் பெயர்களை வைப்பதில் தனிப் பெருமை. இவற்றைத் தவிரக் குறைந்தது ஏழெட்டு டெல்லி நிலையங்கள் இருக்கின்றன அமெரிக்காவில்.

— சாந்தா பத்மநாபன்



''என்ன விசேஷம் அந்த இயந்திரத்தில்?'' என்றார் கல்யாண்ஜி.

''அந்த இயந்திரத்துக்கு எதிரே நீங்கள் பொய் கூற முடியாது. எதிரேயுள்ளவன் பொய் பேசுகிறான் என்பதைச் சட்டென்று கண்டு பிடித்து விடும்!'' என்றார் அந்த வெளிநாட்டவர்.

''இது ஒன்றும் பெரிய அதிசயக் கண்டு பிடிப்பு இல்லை!'' என்ற கல்யாண்ஜியை அதிசயத்துடன் நோக்கினார் அந்த அந்நியர். ''நாங்கள் இந்த இயந்திரங்களைக் கல்யாணமே செய்து கொள்கிறோமாக்கும்!'' என்று முடித்தார் கல்யாண்ஜி.

● எல்லா மூட்டை முடிச்சுக்களையும் ரயில் வண்டியில் ஏற்றி விட்டுக் கல்யாண்ஜி தாமும் ஏறினார். பிறகு செருப்புக்களைக் கழற்றி ஆசனத்தின் அடியில் போட்டுவிட்டுச் சப்பணம் கட்டிக் கொண்டு உட்கார்ந்தார். அப்பொழுது ஒரு சிறுவன் பெட்டிக்குள் ஏறினான். ''இதோ பார், சார்! செருப்பை இப்படி வைக்காதே! யாராவது எடுத்துப் போய் விடுவான்!'' என்றான்.

''சட்!'' அவனை அடக்கினார் கல்யாண்ஜி. ''எப்படிடா எடுத்துப் போவான்? இத்தனை பெரிய ஆள் நான் குண்டாட்டமா உட்கார்ந்திருக்கும் பொழுது ஒருவன் செருப்பைத் தொட்டு விடுவானோ!'' என்று கேட்டார்.




பையன் வாயடைத்து நிற்பதைக் கண்ட கல்யாண்ஜிக்குத் தம் பேச்சில் பெருமை பிடிபடவில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் வண்டி ஓர் உலுக்கலுடன் புறப்பட்டது. வேகம் பிடிக்கவில்லை. சட்டென்று சிறுவன் செருப்புகளைத் தூக்கிக் கொண்டான். 'டக்' கென்று வண்டியிலிருந்து இறங்கினான். ''சார், இப்படித்தான் தூக்கிப் போவான்'' என்று கூறிக் கொண்டே ஓடி விட்டான்.

● ஒருவர் ஆனந்த்ஜியை ஏகமாகப் புகழ்ந்தார். அவர் விகடத் துணுக்குகளையே அவரிடம் திரும்பத் திரும்பக் கூறி மகிழ்ந்தார். கூட்டம் சிரிப்பில் மிதந்தது. 'ஆமாம், இப்படி விகடத் துணுக்குகளிலேயே பொழுதைச் செலவிடுகிறீர்களே! நீங்கள் பாட்டுக்கு எப்பொழுது மெட்டு அமைப்பீர்கள்?' என்று அவர் ஆனந்த்ஜியைக் கேட்ட போது,

''ஏன், ஐயா! என் மெட்டுக்களுக்கும் விகடத் துணுக்குகளுக்கும் இடையே ஏதாவது வேறுபாடு காண்கிறீர்களா?'' என்று ஆனந்த்ஜி பதிலுக்குக் கேட்டதும் கூடமே அதிர்ந்தது சிரிப்பில்.

ஆதாரம்: மாதுரி



பல்சுவைப் பக்கங்கள் 3

அதையேன் கேட்கிறீர்கள்?

ஹாலிவுட் படக் கம்பெனிகளில் உதவி டைரக்டர்களாகச் சேருபவர்கள் எல்லோருமே நான்கைந்து வருடங்களுக்குப் பிறகு டைரக்டர்களாகப் பதவி உயர்வு பெறுவது வழக்கம். ஆனால் இந்த வழக்கத்துக்கு விரோதமாக ஒரே ஓர் ஆசாமி மட்டும் வெகு காலம் உதவி டைரக்டராகவே இருந்து வந்தார். அதற்கான காரணம் பற்றி நண்பர் ஒருவர் அவரிடம் கேட்ட போது, "அதையேன் கேட்கிறீர்கள்? வெறும் வயிற்றெரிச்சல்...!" என்றார்.

"என்னதான் நடந்தது சொல்லுங்களேன், கேட்போம்!" என்றார் நண்பர்.

உதவி டைரக்டர் சொன்னார்: "எங்கள் கம்பெனியில் தினந்தோறும் கதை சம்பந்தமாக விவாதம் நடைபெறும். தயாரிப்பாளர், டைரக்டர், கதாசிரியர் எல்லோரும் கூடிப் பேசுவார்கள், மணிக்கணக்கில். இந்தக் கதை விவாதத்துக்கு எல்லா உதவி டைரக்டர்களும் கட்டாயமாக வந்தேயாக வேண்டும். நான் நான்கைந்து முறைகள் போய் இருந்து கவனித்தேன். ஒரே போர் அத்தனையும்......இந்தத் தலைவேதனையிலிருந்து தப்புவது எப்படி என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதுதான் சட்டென்று ஓர் எண்ணம் தோன்றியது.

அதன்படி, ஏறக்குறைய என் உயரம் இருக்கும் ஒரு சிம்பன்ஸி குரங்கை விலைக்கு வாங்கினேன். அதற்கு என்னைப் போலவே ஆடை அணிவித்தேன். தினமும் 'ஸ்டோரி டிஸ்கஷன்' தொடங்குவதற்குச் சில விநாடிகளுக்கு முன்பு அந்த அறைக் கதவைத் திறந்து, குரங்கை உள்ளே பிடித்துத் தள்ளி விடுவேன். நன்றாகப் பழக்கப்படுத்தப்பட்ட குரங்காதலால் அது ஒரு நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டிருந்து விட்டு, பிறகு எழுந்து வந்துவிடும். விவாதம் நடக்கும் அறையில் எப்போதுமே மங்கலான வெளிச்சம் தான் போட்டிருப்பார்கள். எனவே, அவர்களோடு ஒரு குரங்கும் வந்து உட்கார்ந்திருக்கிறது என்று யாரும் சந்தேகிக்கவே இல்லை......



ஆனால் ஒரு நாள் துரதிர்ஷ்டம் பாருங்கள், உள்ளே விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது நான் வராந்தாவில் உலாவிக் கொண்டிருந்தேன். சட்டென்று அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார் முதலாளி. என்னை வெளியே கண்டதும் பேயறைந்தது போலாயிற்று அவர் முகம். உட்புறம் திரும்பிப் பார்த்தார்...மீண்டும் என்னை ஒரு தரம் முறைத்துப் பார்த்தார். அவருக்கு விஷயம் புரிந்து விட்டது...என்னை அழைத்துக் கேட்டார். நான் உண்மையை ஒப்புக் கொண்டு விட்டேன். 'உனக்குப் பதவி உயர்வு என்பது இந்த ஜன்மத்தில் கிடையாது. போ... கடைசி வரைக்கும் நீ அஸிஸ்டெண்ட் டைரக்டர்தான்' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். அதுதான் இன்னமும் பழைய படியே இருந்து வருகிறேன்......"

"பாவம், உங்களுக்கு ரொம்ப ஏமாற்றமாகத்தான் இருக்கும்......" என்று அங்கலாய்த்தார் நண்பர்.

"ஐயோ! அதையேன் கேட்கிறீர்கள்? வெறும் வயிற்றெரிச்சல்!.....நான் கொண்டு போய் உட்கார்த்தினேனே ஒரு சிம்பன்ஸி, அது இப்போது டைரக்டர் ஆகிவிட்டதையா.......!" என்றார் உதவி டைரக்டர் அழமாட்டாக் குரலில்! —எஸ். வி. ஆர்.

★ ★ ★

ஒரு கல்லறை வாசகம்: இங்கு என் மனைவி படுத்திருக்கிறாள். இப்போது அவளுக்கு ஓய்வு. எனக்கும்தான்.

— ட்ரைடென்



❋ மஞ்சள் பத்திரிகை என்றால் என்ன? எதில் பச்சை பச்சையாக எழுதுகிறார்களோ அதுதான்.

— நந்தி

சாதல் இல்லையேல் காதல்

சோ

(கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்து விழுந்த மாதிரி என்ற பழமொழி அவ்விரு நண்பர்கள் விஷயத்தில் நடந்து விட்டது. யாரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று நாகராஜனும், சுரேஷும் விரும்பினார்களோ அந்தப் பம்பாய்ப் பிரமுகர் சபேசன் இவர்கள் இடத்தைத் தேடி வந்து விட்டார். தியாகராஜன் வேஷத்தில் இருந்த நாகராஜனைப் பற்றி அவரிடம் அறிமுகப் படுத்தும் பொழுது சுரேஷ் பெயர்க் குழப்பத்தை ஏற்படுத்தினான். சபேசனுக்குத் தன் வேஷம் வெளிப்பட்டு விட்டதோ என்ற பயம் நாகராஜனைப் பிடித்துக் கொண்டது.)

நாக: நல்லா மாட்டிக்கிட்டோம்! உன்னை நம்பினதும் இவ்வளவுதான்டா! ஸார், நான் நிஜத்தைச் சொல்லிடறேன் ஸார்!

சுரே: டேய், இருடா! அவர்...

நாக: சரிதான் போடா! இவன்தான் ஸார் எல்லாம் சொன்னான் — நான் அவன் சொன்ன மாதிரி செய்தேன். அவ்வளவுதான்.

சபே: தெரியும்! இந்தப் பய சுரேஷ் வேலை தான்னு தெரியும் எனக்கு. ஏன்யா சுரேஷ்! நீதான் டிக்கெட் வாங்க மாட்டேங்கறே? வாங்கிக்கறவங்களையும் ஏன் கெடுக்கறே? நான் சமூக சேவை சங்க நிதிக்காக டான்ஸ் டிக்கட் விக்க வரேன்னு தெரிஞ்சுக்கிட்டுத் தானே இந்தப் பையனை ஓடிப் போயிடச் சொன்னே?

நாக: வந்து... அப்ப... நான்... நாக... தியாக.... நான் தியாக.... நாகராஜன்!

சபே: சரிதானய்யா! நீயே வாங்கலை. ஓடி ஒளிஞ்சுக்கறே! உங்கண்ணன் நாகராஜனை வாங்கப் போறான்! அவன் உனக்கு மேலே இருப்பான்!

சுரே (நிம்மதியாக): அப்பாடி! நல்ல வேளை...

சபே: என்ன நல்ல வேளை! அவ்வளவு சுலபமா விட்டுடுவேனா? சுரேஷ், அம்பது ரூபாய்க்காவது டிக்கட்டை உன் தலையிலே கட்டாமல் விடறதில்லை! பார்த்துக்க...

சுரே: ஸார்! உங்ககிட்டே கொஞ்சம் சாவகாசமாப் பேசணும். எப்ப பேசலாம்?

சபே: டிக்கட்டை வாங்கிக்கிட்டு அப்புறம் பேசு.

சுரே: ஸார்...

நாக: டேய், வாங்கிக்கடா! (ரகசியமாக) இல்லாட்டிப் பேச முடியாது. விஷயத்தை யும் சொல்ல முடியாது.

சுரே: உம். கொடுங்க (டிக்கட்டை வாங்கிக் கொள்கிறான்.) பணம் அப்புறம் தரேன் ஸார்!

சபே: இட்'ஸ் ஆல்ரைட்! நான் வரட்டுமா?

சுரே: ஒரு விஷயம் பேசணும்னு சொன் னேனே ஸார்!

சபே: எனக்கு டைம் இல்லை! நோ டைம்!.. அப்புறம் பார்க்கலாம். அம்பது ரூபாயை வீட்டுக்கு அனுப்பிடு! (அவர் போகிறார்.)

சுரே: டேய், டேய்!

நாகு: இவர்கிட்டே இருந்தாடா எனக்குப் பத்தாயிரம் ரூபா வாங்கித் தரப் போறே? நமக்கு ஒரு பைசா தர்றதுக்கு முன்னாலே நம்மகிட்டேயிருந்தே அம்பது ரூபா தட்டிக் கிட்டுப் போயிட்டாரே!

சுரே: கவலைப்படாதே... ரெண்டு மாசம் டைம் இருக்கே!

நாக: அதை நினைச்சாத்தான்டா பயமா இருக்கு! இரண்டே நிமிஷத்திலே அம்பது ரூபாயைப் பிடுங்கிட்டுப் போயிட்டாரே! இரண்டு மாசத்திலே என்ன செய்வாரோ! கடவுள்தான் காப்பாத்தணும்!

காட்சி 18

சபேசன் வீடு - பம்பாய்.

(இதை வீடு என்று அழைப்பதைவிட, மாளிகை என்று அழைப்பதே பொருந்தும். பம்பாயில் சாதாரணமாக இம்மாதிரி வீடுகளில் குறைந்தது ஐம்பது குடும்பங்களாவது வசிக்கலாம். ஆனால் இந்த வீட்டிலோ சபேசன் ஒருவர் மட்டுமே வாழ்கிறார். வீடுகளைப் புறாக் கூண்டுகள் போல் கட்டி, கிடைத்த பொந்துகளிலெல்லாம் பல குடும்பங்கள் வாழ்கின்ற பம்பாய் நகரத்தில் இம்மாதிரி ஒரு சில மாளிகைகளில், ஒரு சில மனிதர்கள் மட்டுமே வாழும் விந்தையைப் பார்க்கிறோம். சபேசன் தமது அறையில் ஒரு பலகையை ஸ்டாண்டில் சாய்த்து நிற்க வைத்து, சித்திரம் வரைந்து கொண்டிருக்கிறார். இது அவருடைய பொழுதுபோக்கு. அறைக்குள் சுரேஷ் நுழைகிறான்.)

சுரே: பிரமாதம் சார்! பிரமாதம்!

சபே: யாரு? நீயா?

சுரே: ஆமாம் ஸார், நான்தான்.

சபே: ஓ! நீதானா?

சுரே: குட் ஈவினிங் ஸார்!

சபே: குட் ஈவினிங்... ஆமாம் என்ன வேணும்?

சுரே: ஸார்...!

சபே: இரு இரு.. சுரேஷ், இந்தப் படம் எப்படி?

சுரே: பிரமாதம் ஸார்.

சபே: நல்லா பார்த்துச் சொல்லு.

சுரே (பார்க்கிறான்): ஐயோ! ஐயோ!... ஐய்யோ!

சபே: என்ன? என்ன?

சுரே: ரொம்பப் பிரமாதம் ஐயோ!... ஆஹா!

சபே: நிஜமாவா?

சுரே: நிஜம்மா ஸார்!... சாதாரண விஷ யம். அதை எவ்வளவு அழகா வரைஞ் சிருக்கீங்க... ஒண்ணுமில்லை... சேற்றிலே இரண்டு எருமைக்கடா குதிக்கிறது. அதை எவ்வளவு அழகா...

சபே: இருய்யா. என்ன விளையாடறியா?

சுரே: ஏன் ஸார்?

சபே: இது ரெண்டும் எருமைக்கடாவா? (சித்திரத்தைக் காட்டுகிறார்.)

சுரே: இல்லையா? எருமைக்கடாதானே ஸார்?

சபே: நீதானய்யா எருமைக்கடா... இது இரண்டு பசங்க... மனுஷங்க!

சுரே: கொம்பு இருக்கே ஸார்! ஒவ்வொரு தலைக்கும் இரண்டு கொம்புகள் போட்டிருக்கிங்களே?

சபே: எது? இது கொம்பா? கர்மம்! இது அந்தப் பசங்களுடைய கைகள்! ரெண்டு பேரும் கையை அப்படி வளைச்சுத் தலைக்கு மேலே தூக்கிக்கிட்டு நிக்கறாங்க... (தாமே அம்மாதிரி வளைத்துக் காட்டுகிறார்).

சுரே: ஸார், ப்ளீஸ்! அந்த மாதிரி நிக்காதீங்க. உங்களைப் பார்த்தாலே ஒரு மாதிரியா இருக்கு....

சபே: சுரேஷ்! உன் நமாஷெல்லாம் நம்ம கிட்ட வேணாம். ஏனய்யா உனக்கு அறிவு இருக்கா? இதை எப்படி எருமைன்னு சொன்னே!

சுரே: ஆளுக்கு நாலு கால் போட்டிருக்கிங்களே ஸார்.

சபே: அது கால் இல்லைய்யா! கம்பி! அவுங்க நீச்சல் குளம் — ஸ்விம்மிங் பூல்லே— கம்பிகள் நடுவிலே நிக்கிறாங்க. ஜலத்துலே குதிக்கிறதுக்குத் தயாரா நிக்கிறாங்க.

சுரே: நீங்க தப்புப் பண்ணிட்டீங்க. அவுங்க ஜலத்திலே குதிச்ச பிறகு நீங்க படத்தை எழுதியிருக்கணும். வெறும் தண்ணியை மட்டும் போட்டு விட்டிருக்கலாமே!

சபே: ஷட் அப்!

சுரே: ஸார், எக்ஸ்க்யூஸ்! ஸ்விம்மிங் பூல்னு சொல்றீங்க... நீச்சல் குளத்திலே ஜலம் ஒண்ணு நீலமா யிருக்கும், இல்லே, கொஞ்சம் பச்சையா யிருக்கும். நீங்க என்ன ஸார் இப்படிச் சேறு மாதிரி வர்ணத்தைப் பூசி விட்டிருக்கிங்க?

சபே: உனக்கு ஒரு எழவும் புரியாது. நிறையப் பேர் குளிச்சுப்பிட்டாங்க... தண்ணி சேறாப் போயிடுச்சு! அத்தனை பேர் இறங்கிக் குளிச்ச பிறகு தண்ணி கிளி ஞவா இருக்கும்?

சுரே: ஓ! அப்படியா அது? ஆமாம்... வேறே யாரை யுமே படத்திலே காணுமே.. இவங்க ரெண்டு பேருதானே இருக்காங்க. குளிச்சவங்க யாரையும் காணுமே?

சபே (எரிச்சலோடு): உம்... போடறேனய்யா. குளிச்சவங்க அப்பன், பாட்டன், பேரன், பேத்தி எல்லாரையும் போடறேன்! போவ்! உனக்கு 'மாடர்ன் ஆர்ட்'டைப்பத்தி ஒரு எழவும் தெரியாது...

சுரே: ஓ! இது மாடர்ன் ஆர்ட்டா? அதை முதல் லேயே சொல்லி யிருக்கக் கூடாதா? ஸார். நான் ஒண் ணும் சொல்லியே இருக்க மாட்டேனே..நீங்க ஒண்ணு பண்ணுங்க. இந்தப் படத்தைத் தலைகீழா மாட்டிடுங்க.

சபே: ஏனய்யா?

சுரே: மாடர்ன் ஆர்ட் வரையறவங்க அப்படித்தான் செய்யறாங்க. படத்தை எழுதித் தலைகீழா மாட்டிப்பிடுங்க.. அதுக்கு ஒரு பேர் மட்டும் நேரா எழுதிடுங்க...

சபே: பேர் மட்டும் நேரா எழுதுவானேன்?

சுரே: படத்துக்கு என்ன பேருன்னு புரி யாமப் போயிடுமே?

சபே: படம் புரியாம இருந்தாப் பரவா யில்லையா?

சுரே: அப்பத்தான் அது மாடர்ன் ஆர்ட்!

சபே: இதுக்கு என்னய்யா பேர் வெக்க லாம்?

சுரே: ''நீச்செருமைக்குளக்கொம்ப்''!

சபே: ஏய்! என்னய்யா இதுக்கு அர்த்தம்?

சுரே: அர்த்தத்தைப் பத்தி நமக்கென்ன கவலே? பார்க்கறவங்க அவங்க அவங்க இஷ் டப்படி அர்த்தம் பண்ணிக்கட்டும்.

சபே: நாலு பேர்கள் பார்த்தா நாலு விதமா அர்த்தம் புரிஞ்சுப்பாங்க.

சுரே: அதுதான் வேண்டியது. உடனே நீங்க பெரிய ஆர்ட்டிஸ்ட் ஆயிடுவீங்க.

சபே: உன்னோட பேசினதிலே பைத்தியம் பிடிச்சுடுமய்யா! காலையிலேதானே உன்னைப் பார்த்தேன்? இப்ப ஏன் இங்கே வந்தே?



கரே: காலேயிலே டிக்கட் கொடுத்தீங்கனே, அதுக்குப் பணம் கொடுத்துட்டுப் போகலான்னுதான்.

சபே: அதுக்கு என்னய்யா அவசரம்?

கரே: பரவாயில்லே ஸார்...இந்தாங்க... (சில பத்து ரூபாய் நோட்டுக்களை நீட்டுகிறான்)

சபே: சரி..(வாங்கிக்கொண்டு) என்னய்யா நோட்டு அச்சடிக்கிறியா?

கரே: என்ன ஸார் இது? அச்சடிக்கிறவன் பத்து ரூபாய் நோட்டா அச்சடிப்பான்? காலம் போற போக்கிலே எவ்வளவு பத்து ரூபா நோட்டு அடிச்சாலும் அச்சுச் செலவுக்குக் கூடக் கட்டுப்படியாகாதே ஸார்! அடிச்சால் நூறு ரூபாய் நோட்டு அடிக்கணும். ஏதோ ஏறத்தாழச் செலவுக்காவது கட்டுப்படியாகுமல்லவா?

சபே: போதும், போதும், பேசாதே. உன்னைப் பேச விட்டாலே என்னுடைய மண்டை குழம்புது.

கரே: நான் வரட்டுமா ஸார்... பாவம், தியாகராஜன்.

சபே: யாரு...

கரே: தியாகராஜன்.

சபே: யாரவன்?

கரே: நாகராஜன் தம்பி. காலேயிலே நீங்க என் ரூம்லே பார்க்கலே? அவன்தான்...

சபே: ஏனய்யா? அவனுக்கென்ன, இவர்னு அவனை நினைச்சுக்கிட்டுப் 'பாவம்'னு வருத்தப்படறியே? அவனுக்கு என்ன ஆயிடுத்து?

கரே (அவர் ஆவலைத் தூண்ட நினைத்து): கேக்காதீங்க ஸார்...

சபே: சரி, கேக்கலே.

கரே (திகைத்து): கேக்கலாம்...கேக்கலாம்... கேட்டா என்ன? கேக்கலாம்.

சபே: வேண்டாய்யா. இன்னொருத்தன் சங்கதி எனக்கெதுக்கு?

கரே: பரவாயில்லே, பரவாயில்லே! நான் சொல்றேன். அவன் தியாகராஜன் இருக்கானே...

சபே: உனக்கும் அவனுக்கும் எவ்வளவோ இருக்கும்! எனக்கெதுக்கய்யா இந்த வம்பெல்லாம்?

கரே: அவன்தானே இந்தப் பணமே கொடுத்தான்?

சபே: அவன் கிட்ட கடன் வாங்கினியா?

கரே: இல்லே ஸார்.. அவன் கொடுத்த மாதிரிதான் இந்தப் பணம் அம்பது ரூபா.



''டேய் குடுத்துடுடா''ன்னுன் நான் குடுத் துட்டேன்.

சபே: உன் பணத்தைக் கொடுக்கிறதுக்கு அவன் என்னய்யா சொல்றது?

சுரே: பாவம் சார்! அவனுக்குத்தானே இந்தப் பணத்தைக் கொடுக்கிறதா இருந் தேன். எனக்கு வேணும், அவருக்கே கொடுத்துடுன்னுட்டான். தாராள மனசு ஸார் அவனுக்கு.

சபே: இது என்னய்யா பெரிய தாராளம்?

சுரே: அவன் நிலையைத் தெரிஞ்சா இந்த மாதிரி சொல்ல மாட்டீங்க

சபே: ஏன் அவனுக்கென்ன?

சுரே: இன்னிக்கு நீங்க நம்ப பேப்பரைப் படிக்கலியா?

சபே: உன் பேப்பர்லே படிக்க என்னய்யா இருக்கு! ஏதோ உனக்காகப் பேப்பரை வாங்கறேன். அவ்வளவுதான்.

சுரே: இதோ பாருங்க ஸார்... நியூஸ்... இந்த நியூஸ் பாருங்க...

(பேப்பரைப் பிரித்து நாகராஜன் இறந்த செய்தியை உரக்கப் படிக்கிறான்.)

சபே: போ! நாகராஜன் போயிட்டானு? யாரவன்?

சுரே: தியாகராஜன் அண்ணன்.

சபே: அது தெரியுதய்யா! அதுதான் பேப்பர்லே வந்திருக்கே....

சுரே: அவர்... நாகராஜன்... பெரிய கவி ஞர்.... தியாகராஜன் இப்ப அனுதை பாவம்! கையிலே காலணு இல்லாம கஷ்டப்படறான். அப்பக்கூடப் பாருங்க, அம்பது ரூபா தனக்கு வேண்டாம்னு சொல்லி, உங்ககிட்ட கொடுக்கச் சொல்லிட்டான்.

சபே: வெரிகுட் பாய்! அப்படித்தான் இருக்கணும். இன்னொருத்தன் கிட்டே பணத்தை எதிர்பார்க்கவே கூடாது.

சுரே (அவர் பேச்சு விபரீதமான திசையில் போவதைத் தடுக்க எண்ணி): அப்படிச் சொல்லிட்டா எப்படி ஸார்? இவனுலேயும் சம்பாதிக்க முடியாது. அண்ணனும் செத்துப் போயிட்டான். மத்தவங்ககிட்டேயும் பணம் எதிர்பார்க்கலேன்னு, என்னதான் பண்ணுறது?

சபே: கஷ்டம்தான்! அவன் உழைப்பாளியாக இருப்பான். உழைச்சுச் சம்பாதிக்கணும்னு நினைச்சிருக்கிறான். தட் ஈஸ் கரெக்ட்!

சுரே: அவன் உழைக்க மாட்டான் ஸார்! அவனுலே முடியாது.

சபே: ஏன் சோம்பேறியா?

சுரே: இல்லே ஸார். அவன் அண்ணன் செத்துப் போன கவலையிலே இருக்கான். எப்படி உழைக்க முடியும்?

சபே: அது எத்தனை நாள் இருக்கப் போறது? எல்லாம் சரியாய்ப் போயிடும்.

சுரே: எப்படி ஸார் சரியாப் போகும்? ஸார்...(வேறு வழியில்லாமல்) அவனுக்குப் பைத்தியமே பிடிச்சுடுத்து!

சபே: அய்யய்யோ! உன்னோட எத்தனை நாள் இருந்தான் அவன்? அதுக்குள்ளேயா இந்த மாதிரி...

சுரே: தமாஷ் பண்ணுதீங்க ஸார்! சித்தப் பிரமை பிடிச்சுத் தவிக்கிறான். யார் அவனுக்கு வேலை கொடுப்பாங்க?

சபே: கல்யாணம் ஆகலியே?

சுரே: இல்லே ஸார்.

சபே: நல்ல வேளை! அவனுக்குக் கல்யாணமும் ஆகியிருந்தா பெண்டாட்டி குழந்தை குட்டியெல்லாம் என்ன கதி ஆறது? உம்... நான் எதுக்கு இருக்கேன்? அதுமாதிரி இருந்தா நம்மாலான உதவி செய்யாமலா இருக்கப் போறேம்? இவனுக்குத்தான் நல்ல வேளையா கல்யாணம் ஆகலியே?

சுரே (தான் தவறிவிட்டதை உணர்ந்து): யார் சொன்னது?

சபே: நீதானே சொன்னே?

சுரே: நீங்க 'கல்யாணம் ஆகலியே'ன்னு கேட்டீங்க. என்னைத்தான் கேட்டீங்களாக்கும்னு ஆகலேன்னு சொல்லிட்டேன்.

சபே: இவனுக்குக் கல்யாணம் ஆயிடுத்தா?

சுரே: அவனுக்கு, அவன் பெண்டாட்டிக்கு இரண்டு பேருக்கும் கல்யாணம் ஆயிடுத்து! மூணு பசங்க... மூணும் பொட்டைப் பசங்க.

சபே: சின்னப் பயலா இருக்கானே. அதுக்குள்ளே மூணு பசங்களா?

சுரே: அவன் பைத்தியம்தானே ஸார்? குடும்பக் கட்டுப்பாட்டைப் பத்தியெல்லாம் அவனுக்கென்ன தெரியப் போறது? அவன் பாட்டுக்குப் பெத்துத் தள்ளிப்பிட்டான்!

சபே: என்னய்யா உளர்றே? அவனுக்கு இப்பத்தானே அண்ணன் செத்ததுனுலே பைத்தியம் பிடிச்சுது?

சுரே: ஆமாம்...இப்பத்தானே பைத்தியம். அப்போ...வந்து ஸார்... (செய்வதறியாமல் திகைக்கிறான்.) நாகு...அதான் தியாகு தம்பி... அண்ணன்... கவிதை... பத்தாயிரம் ரூபாய்...

சபே: சுரேஷ்! என்னய்யா இது? (அநுதாபத்தோடு) உனக்கு என்னய்யா? அந்தப் பையன் என்ன, உனக்கு ரொம்ப வேண்டியவனு? அவனுக்குப் பைத்தியம் பிடிச்சது தாங்காம என்னமோ மாதிரி 'பிஹேவ்' பண்றியே? எல்லாம் சரியாய்ப் போகும். கவலைப் படாதே.

சுரே (இதுதான் சாக்கு என்று): அவனை இனிமேல் யார் ஸார் காப்பாத்தறது?

சபே: அதான் நீ இருக்கியே?

சுரே (ஒரே சோக மயமாக): என்னுலே என்ன ஸார் முடியும்? ஏதோ கைக்கும் வாய்க்கும் பொறைப்பு நடக்குது. தியாகு! உனக்குத் தற்கொலைதாண்டா கதி! (அழ ஆரம்பிக்கிறான்.)

சபே: அவன் எப்படித் தற்கொலை பண்ணிப்பான்? அவன்தான் பைத்தியமாச்சே நீதான் உதவி செய்யணும்.

சுரே: என்னைக் கொலை பண்ணச் சொல்றீங்களா?

சபே: சே...சே... ஏதாவது உதவி செய்யணும். ஒரு கவிஞன் செத்துப் போனப்புறம் அவன் குடும்பத்தைக் கஷ்டப்பட விடலாமா?

சுரே (அவசர அவசரமாக): விடக்கூடாது ஸார், விடக் கூடாது!

சபே: ஏதாவது செய்யணுமே. ஆம் ஒண்ணு செய்யலாம்! நான் உதவி பண்றேன்.

சுரே (ஆவலோடு): என்ன ஸார்? சொல்லுங்க, ஸார்! (தொடரும்)

சந்திரசேகரன் கடந்த ஏழெட்டு மாதங்களாக மாதம் தவறாமல் ஒரு மாத லீவ் கேட்டு மனு எழுதிக் கொடுத்துக் கொண்டு வந்தார். ஒவ்வொரு தடவையும் ஏமாற்றம் தான் கண்ட பலனாக இருந்தது. 'இப்பொழுது லீவ் கொடுக்கச் சாத்தியப்படாது; அடுத்த மாதம் பார்க்கலாம்' என்ற ஒரே பதிலையே அதிகாரி கூறிக் கொண்டிருந்தார். சந்திரசேகரன் பொறுமையை இழந்து விட்டார். சம்பளத்தோடு மூன்று மாத லீவ் அவருக்குச் சேர்ந்திருந்தது. இனி லீவ் எடுக்காமல் விட்டால், சேர்த்து வைத்த லீவை இழக்க வேண்டி வருமே என்ற கவலையும் அதனால் ஆத்திரமும் அதிகமாகி விட்டன. எத்தனை வருஷங்கள் லீவ் எடுக்காமல் வேலை செய்தாலும், சம்பளத்தோடு கூடிய லீவ் மூன்று மாதங்களுக்கு மேல் சேராது. எடுக்காமல் போன லீவ் போனதுதான்.

மாதம் தவறாமல் அவர் வேலை செய்யும் ஆபீஸில் யாராவது ஒருவர் நீண்ட லீவ் எடுத்துக் கொண்டிருப்பது ஞாபகத்துக்கு வந்தது. 'நாம்தான் உழைக்கப் பிறந்தோமா? இல்லை, நாம் மட்டும்தான் சம்பளம் வாங்குகிறோம், மற்றவன் கௌரவ சேவை செய்கிறானா? நமக்கு மட்டும் ஏன் இந்த அதிகாரி 'இல்லை' பாட்டுப் பாடிக் கொண்டிருக்கிறான்? நம் இளிச்சவாய்த்தனத்தைக் கண்டுதான் என்று நம் மனைவி அன்று காலையில் சொன்னது உண்மையாகவே இருக்குமோ?' சந்திரசேகரனுக்கு அவமானமாக இருந்தது. 'இன்று எப்படியும் லீவுக்கு மனுப் போட்டு வெற்றியும் தேடியாக வேண்டும்' என்று விரதம் வைத்துக் கொண்டு ஆபீசுக்கு வந்தார். பிற்பகலில் லீவ் மனுவோடு அதிகாரியிடம் போனார். முகத்தைக் கெஞ்சுகிற பாவனையில் பாதியும். அசைக்க முடியாத பிடிவாத பாவனையில் பாதியுமாக வைத்துக் கொண்டு மனுவை நீட்டினார். வாங்கிப் பார்த்தார் அதிகாரி. சந்திரசேகரனின் முகத்தைப் பார்க்காமலே, ''சாத்தியமில்லை'' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதில் கொடுத்தார்.


சந்திரசேகரனுக்கு முதலில் அதிர்ச்சி ஏற்பட்டது. ஒரு நிமிஷம் மௌனமாக நின்றார். உள்ளம் பற்றி எரிந்தது.

''மிஸ்டர் சந்திரசேகரன்! அடுத்த மாதம் பார்க்கலாம். இப்போது லீவ் கொடுக்க முடியாது'' என்று எரிகிற நெருப்பில் எண்ணெயைக் கொட்டினார் அதிகாரி.

சந்திரசேகரன் கோபத்தை அடக்கிக் கொண்டு, ''ஸார்! எனக்கு மூன்று மாத லீவ் இருக்கிறது ஸார். ஒவ்வொரு மாதமும் இப்படியே சொல்கிறீர்கள்'' என்றார்.

கு. அழகிரிசாமி





''நான் என்ன செய்வது? மூன்று மாத லீவ் இருக்கிறது என்று எனக்கும் தெரியும். அதற்காகக் கேட்ட நேரத்தில் லீவ் கொடுத்து விட முடியுமா ?''

''மற்றவர்களுக்கு மட்டும் கேட்ட நேரத்தில் லீவ் கொடுக்கிறீர்களே, ஸார்!'' என்று ஆத்திரத்தின் ஒரு பகுதியை வெளியிட்டு விட்டார் சந்திரசேகரன்.


அதிகாரி அந்த வார்த்தைகளின் சூட்டையும் வேகத்தையும் புரிந்து கொண்டார்.

''மிஸ்டர் சந்திரசேகரன்! நீங்கள் எப்போது பார்த்தாலும் கடைசி ஆளாக வந்து லீவ் மனு கொடுக்கிறீர்கள். உங்கள் தவற்றுக்கு என் மேல் வருத்தப்பட்டுப் பிரயோசனமில்லை. முன்கூட்டியே மனு எழுதிக் கொடுப்பதற்கென்ன?''

சந்திரசேகரனுக்கு ஒன்றும் புரியவில்லை. முன்கூட்டி என்றால் எப்பொழுது?

''சந்திரசேகரன்! ஒரே சமயத்தில் ஒரே செக்ஷனில் இரண்டு பேருக்கு லீவ் கொடுக்க முடியாது. செப்டம்பர் 2ம் தேதியிலிருந்து அக்டோபர் முதல் தேதி வரையில் சம்பந்தமூர்த்தி லீவ் எடுத்திருக்கிறார். மூன்று நாட்களுக்கு முன்பே மனு எழுதிக் கொடுத்து அனுமதி வாங்கிக் கொண்டு விட்டார்....''

சந்திர சேகரனுக்கு இடி விழுந்ததுபோல் இருந்தது. 'சம்பந்த மூர்த்தியா? தடி ராஸ்கல்!' என்று மனத்துக்குள் சபித்தார். சம்பந்தமூர்த்தி வருஷம் தவறாமல் லீவ் எடுப்பவன். இப்போதும் நமக்குப் போட்டியாக முந்திக்கொண்டு விட்டானே என்று ஆத்திரம்.



''ஸார்! அவர் வருஷா வருஷம் லீவ் எடுக்கிறார். நான் மூன்று மாத லீவை வைத்துக் கொண்டு வந்து கேட்கிறேன்.''

அதிகாரிக்குக் கோபம் வந்து விட்டது.

''சந்திரசேகரன்! மூன்று மாதம் மூன்று மாதம் என்று அதையே சொல்லிக் கொண்டு நிற்கிறீர்களே! நானா வேண்டாம் என்று சொன்னேன் ? கொஞ்சம் முன்னதாக லீவ் கேட்பதற்கென்ன? பேசாமல் தூங்கிக் கொண்டிருந்து விட்டு, இப்பொழுது வந்து உயிரை வாங்கினால் நான் என்ன செய்வது?..... இப்போது நீங்கள் என்ன சொன்னாலும் முடியாது. போங்கள்.....''

சந்திரசேகரன் அப்படியே அந்த அதிகாரியை ஓங்கி அறையலாமா, இல்லை, காகிதத்தில் ராஜிநாமா எழுதி நீட்டி விடலாமா என்ற அளவுக்குப் பொறுமையை இழந்து விட்டார். ஒரு நிமிஷம் நின்றார். ஆத்திரத்தோடு அழுகையும் வரும்போல் இருந்தது. 'சீ! நம் பிழைப்பும் ஒரு பிழைப்பா?' என்று தம்மைத் தாமே வெறுத்தவராக அதிகாரியின் அறையை விட்டு வெளியே வந்தார்.

சந்திரசேகரன் தமது இருப்பிடத்தில் வந்து உட்கார்ந்தார். மூலையில் குனிந்த தலை நிமிராமல் வேலையில் ஈடுபட்டிருக்கும் சம்பந்தமூர்த்தியைப் பார்த்தார். 'திருட்டுப் பயல்! இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்று ஒன்றுமே தெரியாதவன் போல் உட்கார்ந்திருக்கிறான். இவனுக்கு என்ன கேடு? பெண்டாட்டியா, பிள்ளையா ? தடிப் பயலுக்கு வருஷம் தவறாமல் ஒரு மாத லீவ் என்ன வேண்டிக் கிடக்கிறது ?' என்று கடுகடுத்துக் கொண்டே வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் மற்றொரு செய்தியையும் அவர் கேள்விப்படவே, அவருக்குப் பைத்தியமே பிடித்து விடும்போல் இருந்தது. அட்டெண்டர் பையன் சுந்தரமும் ஒரு மாத லீவ் கேட்டு வாங்கியிருப்பதைக் கேள்விப்பட்டார் சந்திரசேகரன். 'கடவுளே! இதெல்லாம் என்ன திருவிளையாடல்!' என்று பிரலாபித்தார்.

அட்டெண்டர் பையன் லீவு எடுப்பதற்கென்றே அந்த ஆபீசில் வேலைக்குச் சேர்ந்தவர்களில் ஒருவன் என்பது சந்திரசேகரன் கண்ட உண்மை. 'இவனுக்கெல்லாம் இங்கே சலுகை இருக்கிறது. நாம்தான் ஏமாளிப் பட்டத்தைக் கட்டிக் கொண்டு, பெண்டாட்டி பார்த்துச் சிரிக்கும்படி மானம் வெட்கம் இல்லாமல் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்' என்று நொந்து கொண்டார்.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அவருக்கு இரண்டு யோசனைகள் ஒன்றன்பின் ஒன்றாக உதயமாயின. 'சட்டப்படி லீவ் இருக்கிறது. சட்டத்தின் மூலம் அதைக் கேட்டு வாங்

ஒரு மாத லீவு வாங்க வேண்டுமென்று துடியாய்த் துடித்தார் சந்திரசேகரன். ஆனால் லீவு வாங்கிய பிறகு, அவர் லீவைக் கண்டு வெறுத்துத் தள்ளினார்; வருந்தினார். இந்த விசித்திரப் பிரகிருதியின் வாழ்க்கையை உணர்ச்சியோடு அழகாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார் அழகிரிசாமி, இந்தச் சிறப்புச் சிறுகதையிலே.

னால் என்ன?' என்று ஒரு துணிச்சல் பிறந்தது. அப்புறம் யோசிக்கும்போது, அது நினைத்துப் பார்க்கவும் முடியாத பயங்கரமாகத் தோன்றியது. 'இன்று சட்டத்தைத் துணை கொள்ளலாம், நாளை அடி சறுக்கும் போது அதிகாரி குழியில் தள்ளிப் புதைத்து விடுவானே, அப்பொழுது சட்டமா வந்து நம்மைக் காப்பாற்றப் போகிறது? சீச்சீ! முட்டாள்தனம். நமக்கு நாமே குழி வெட்டிக் கொள்வதா?' என்று அந்தத் துணிச்சலைக் கைவிட்டார். அடுத்தபடியாகத் தோன்றிய யோசனை விவேகமானதாகப்பட்டது. அதையே நிறைவேற்ற முடிவு செய்தார். அக்டோபர் மாதம் இரண்டாம் தேதியிலிருந்து நவம்பர் முதல் தேதி வரை ஒரு லீவ் மனு எழுதி, அப்பொழுதே கொண்டு போய் அதிகாரியிடம் கொடுத்தார். அதிகாரியும் 'பார்க்கிறேன்' என்று சொல்லி வாங்கி வைத்துக் கொண்டார். 'இன்னும் பார்க்கிறேன்தானா?' என்று குறைப்பட்டுக் கொண்டாலும் சந்திரசேகரனுக்கு ஓர் ஆறுதல் பிறந்தது.

சாயங்காலம் வீடு திரும்பியதும், "என்ன லீவ் கிடைத்ததா? காலையில் விரதம் வைத்துக் கொண்டு போனீர்களே?" என்று கேட்டாள் மனைவி.

"அடுத்த மாதம் நிச்சயம்" என்று குரலை உயர்த்திச் சொன்னார் சந்திரசேகரன்.

"அடுத்த மாதமா!" — மனைவி ஏளனமாகச் சிரித்தவாறே அடுப்படிக்குப் போனாள்.

2

சந்திரசேகரன் எதிர்பார்த்ததற்கு மாறாக அடுத்த மாதம் அதிகாரி லீவ் கொடுத்து விட்டார்.

'தர்மம் வென்றது' என்று அவருக்கு ஒரு மகத்தான கம்பீரமே பிறந்தது. 'இப்போது மட்டும் இவன் இல்லை என்று சொல்லியிருந்தால், பயலைக் கண்ணில் விரலை விட்டு ஆட்டியிருப்பேன். தப்பித்து விட்டான்' என்று அதிகாரிக்குக் கற்பனையிலேயே கருணை காட்டினார்.

அக்டோபர் முதல் தேதியன்று சம்பளம் ரூபாய் நூற்று எழுபதும் சில்லறையும் வாங்கிக் கொண்டு வெற்றி நடையோடு வீடு திரும்பினார் சந்திரசேகரன். கோட்டையைப் பிடித்துவிட்டு வாகை சூடி வரும் வீரனின் மிடுக்கு. வெற்றி விழாவைக்கொண்டாட, தாராளமாக ஓர் ஐந்து ரூபாயைச் செலவழித்துக் குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வாங்கிக் கொண்டு வந்தார்.

இந்த மகிழ்ச்சியில் அன்று இரவு அவர் வெகு நேரம் வரையில் தூங்கவில்லை.

அக்டோபர் இரண்டாம் தேதியன்று காலை வழக்கம் போல் ஆறரை மணிக்குத் தூங்கி முடித்துக் கண் விழித்தாலும், 'இன்றைக்கு என்ன அவசரம்?' என்று ஓர் அரை மணி நேரம் வேண்டுமென்றே பிடிவாதமாகப் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தார். ஆனாலும் பதினைந்து நிமிஷங்களுக்கு மேல் அவரால் படுத்திருக்க முடியவில்லை. எழுந்து தம் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் ஐந்து குழந்தைகளையும் பெயர் சொல்லித் தட்டி எழுப்பினார். முன்பெல்லாம் இப்படிப் பெயர் சொல்லி எழுப்புவது என்ற பேச்சே கிடையாது. 'கழுதையே', 'நாயே', 'குரங்கே' என்று ஏதாவது ஒரு மிருகத்தின் பெயரைச் சொல்லியே ஓங்கி அறைந்து எழுப்புவார். இன்று தம்மை முற்றிலும் மாற்றிக் கொண்டு, 'கண்ணே' 'ராஜா' என்று செல்லமாகக் கூப்பிட்டு எழுப்பினார்.

பத்து வயதிலிருந்து இரண்டு வயதுவரை இருந்த ஐந்து குழந்தைகளும் அவரைப் பார்க்கும்போது, அவர் அசாதாரணமாகப் புன்னகை செய்து கொண்டிருந்தார். 'அப்பாவுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?' என்று குழந்தைகள் நினைத்திருந்தாலும் தவறில்லை. ஆனால் அப்படி நினைக்கவில்லை. அவருடைய திடீர் மாறுதலைக் கண்டு ஆச்சரியத்தோடு திகைத்துப் போய் நின்றார்கள். இரண்டு வயதுக் குழந்தை ராஜியை எடுத்து அணைத்துக் கொண்டார் சந்திரசேகரன்.

"என்ன? இன்றைக்குச் சினிமாவுக்குப் போகலாமா?" என்று ஏக முழக்கத்துடன் ஆரம்பித்தார் சந்திரசேகரன்.



குழந்தைகள் ஒரு பதிலும் சொல்லவில்லை. அவர் இப்படிக் கொஞ்சிப் பேசுவது போல் பாவனை செய்துவிட்டு இறுதியில், 'சினிமா வேறு கேடா; எட்டு மணி வரை எருமை மாதிரி தூங்கிக் கிடந்துவிட்டு ?' என்று ஓர் அறை கொடுத்து விரட்டுவார் என்றே எதிர்பார்த்தான், அவருடைய குணத்தை நன்கு அறிந்திருந்த பத்து வயதுப் பையன் குமார். மூன்றாவது குழந்தை — ஏழு வயது சாவித்திரி — மட்டும் வாய் திறந்தாள்.

"சினிமா வேண்டாம்; சர்க்கஸ்தான்" என்றாள்.

"சர்க்கஸா? நீ என்ன சொல்லறே கமலா ?" என்று அவளுடைய அக்காளைக் கேட்டார்.

"சினிமா !"

"நீ ?" என்று ஆறு வயதுப் பையன் ரவியைக் கேட்டார்.

"சினிமா."

"சினிமாதானா? சரி, அப்படி என்றால் மெஜாரிட்டி வோட்டு சினிமாவுக்குத்தான். அதனால் இன்று சினிமாவுக்கே போவோம். நாளை சர்க்கஸ். சரிதானே சாவித்திரி ?"

பிற்பகல் இரண்டு மணிக்கு சினிமாவுக்குப் போனார்கள். படம் பார்த்தார்கள். ஒரு மாத லீவின் ஆரம்ப விழாக் கொண்டாட்டத்தை ஒரு சினிமாவுடன் நிறுத்திவிடச் சந்திரசேகரனுக்கு மனமில்லை. 'கடற்கரைக்குப் போவோம்' என்று அறிவிப்புக் கொடுத்து விட்டு எல்லோரையும் முதலில் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார். சிற்றுண்டி சாப்பிட்டு முடிந்ததும் கடற்கரை. அங்கே குழந்தைகளுக்குப் பலூன்களும், பிளாஸ்டிக் விளையாட்டுச் சாமான்களும் வாங்கிக் கொடுத்தார். திரும்பி வரும்போது, இரண்டு வயதுக் குழந்தை ராஜிக்கு ரூபாய் நான்கு கொடுத்து ஒரு கவுன் வாங்கினார். அப்புறம் திடீரென்று ஒரு யோசனை பிறந்தது. "வாருங்கள் ஹோட்டலிலேயே சாப்பிடலாம்" என்றார். மனைவிக்குத் தூக்கிவாரிப் போட்டது. இப்படி ஒரே நாளில் பணத்தைக் கரைத்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்தினால், "என்ன இது? இப்படிப் பணத்தை இறைத்தால் என்ன ஆவது? இன்னும் ஒரு மாதம் தள்ள வேண்டும் என்பதை மறந்து விட்டீர்களா? நீங்கள் லீவுதான் எடுத்திருக்கிறீர்களே தவிர, புதையல் எடுக்கவில்லை" என்று எச்சரித்தாள் மனைவி.

"போடி போ! உனக்கு எப்போதுமே இந்தப் பஞ்சப் பாட்டுத்தான்" என்று எகத்தாளமாகச் சொன்னார் சந்திரசேகரன். குழந்தைகள் ஏகமனதாக அப்பா கட்சியையே ஆதரித்தன. அவர் முகத்தில் அபாரமான மந்தகாசம். இன்னும் கொஞ்சம் நெஞ்சை நிமிர்த்திக் கைகளை வீசிக்கொண்டு ராஜ நடையோடு எல்லோரையும் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார்.

மனைவியின் எச்சரிக்கையைத் தூக்கி எறிந்து பேசினாலும், சிறிது நேரத்தில் அவர் மனக் கணக்குப் போட ஆரம்பித்தார். கூட்டல் கழித்தல்கள் அதிகமாகவே இருந்தன. சாப்பிட்டு முடியும் வரையில்கூடக் கணக்குகளைப் போட்டு முடிக்க முடியவில்லை.

சாப்பிட்டு முடிந்தது. அவர் முகத்தில் புன்னகை குறையத் தொடங்கி விட்டது. வீடு வந்து, கணக்குப் பார்க்கும்போது பதினைந்து ரூபாய்க்கு மேல் செலவாகி யிருந்தது. மனைவி கணக்கு கேட்டபோது "பத்துத்தான் செலவு" என்றார் சந்திரசேகரன். "பத்தா?" என்று அவள் வாயில் அடித்துக் கொண்டாள். முகத்தில் பேய் அறைந்துவிட்டது போல் ஒரு பீதி. "சரி சரி போ. என்றாவது ஒரு நாள். தினமுமா செலவழிக்கப் போகிறோம்?" என்று அவளைச் சமாதானப்படுத்தும் வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே தெரு வாசலுக்கு வந்து விட்டார். மேற்கொண்டு அங்கே நின்றால் பெரிய சண்டை மூண்டு விடும் என்று அவருக்கே தெரியும். இரவு வேளையில் எல்லோரும் அவரவர் பகுதிகளில் இருக்கும்போது, சண்டை போட்டுக்கொண்டு நிற்க விரும்பாமல் நழுவிய சந்திரசேகரன், 'பதினைந்து ரூபாய் அதிகம்தான். ஹோட்டலில் சாப்பிட்டிருக்க வேண்டாம். ஐந்து ரூபாய் மிஞ்சியிருக்கும்' என்று பரிதாபத்தோடு தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார். அன்று பகல் முழுவதும் அவர் முகத்திலும் அகத்திலும் நின்று நிலவிய புன்னகை அப்போது அடியோடு மறைந்து விட்டது.

'மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள்' என்று சொல்வார்கள். இரண்டுமே அவ்வளவு சீக்கிரத்தில் சலித்துப் போய்விடுமாம். சந்திரசேகரனுக்கோ பத்தே நாட்களில் லீவ் சலித்துப் போய்விட்டது. கையில் பத்து ரூபாய், ஐந்து ரூபாய் நோட்டுகள் கரைந்து விட்டன. ஒரு ரூபாய் நோட்டுகளும் ஒவ்வொன்றாகச் சிறகு முளைத்துப் பறந்து கொண்டிருந்தன. இன்னும் ஒரு வாரமோ பத்து நாட்களோ கழிந்தால் அப்புறம் ரூபாய் நோட்டைப் பார்க்க மேற்கொண்டு பத்து நாட்கள் ஆகும். மளிகைக் கடைக்காரன் நூற்றறுபது ரூபாய் பாக்கியோடு காத்திருக்கும்போது, விசுக்கென்று ஐம்பத்தைந்து ரூபாயைக் கொண்டு போய்க் கொடுத்தார் சந்திரசேகரன். கடைக்காரன் கடுகடுப்போடு 'இந்த மாதம் பாக்கியையெல்லாம் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு இந்தச் சுண்டைக்காய்க் காசைக் கொண்டு வந்து நீட்டுகிறீர்களே, உங்களுக்கு நன்றாக இருக்கிறதா?' என்று சொல்லிவிட்டு அந்த ஐம்பத்தைந்தையும் வாங்கி வரவு வைத்தான். "இனி மீதிப் பாக்கியைக் கொடுத்துவிட்டுச் சரக்கு வாங்குங்கள்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். சந்திரசேகரனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. கொஞ்ச நேரம் நின்று பார்த்தார். "நின்று பிரயோசனமில்லை. அவ்வளவுதான்" என்று கடைக்காரன் விரட்டினான். சரக்குகள் வாங்கிப் போட்டுக் கொண்டு வர அமர்த்திய ரிக்ஷாவைக் காசு கொடுத்து அனுப்பிவிட்டு, கொண்டுபோன காலிப் பைகளோடு வீடு திரும்பினார். அது நடந்து ஒரு வாரமாகி விட்டது. நடுவில் இரண்டு முறைகள் போய்க் கடைக்காரனைக் கெஞ்சிப் பார்த்தார். அவன் அடித்து விரட்

டாமல் இருந்ததே பெரிய புண்ணியமாக இருந்தது. அப்புறம் வேறு கடைகளில் ரொக்கத்துக்கு அன்றாடம் மளிகைச் சாமான் களை வாங்கி நாட்களை ஓட்டினார்.

கையாற்றுக் கடன்காரர்கள் தினம் தவறு மல் படையெடுக்க ஆரம்பித்து விட்டார்கள். மனைவி அக்கம் பக்கத்துப் பெண்களிடம் கடன் வாங்கிய வகையில் கொஞ்சம் பாக்கி யிருந்தது. அவர்கள் கூட்டமும் சேர்ந்து கொண்டது. 'சம்பளம் வாங்கியதும் இந்த இரண்டு ரூபாய்க் காசைக் கொடுக்காவிட் டால் இனி எப்போது கொடுக்கப் போகி றீர்கள்? நோட்டா, பத்திரமா, ஏப்பம் விட்டுவிடலாம் என்ற துணிச்சல்தானே?' என்று ஓர் அம்மாள் வறுத்துக் கொட்டினாள். அதை அறைக்குள் குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார் சந்திரசேகரன்.

குடும்பத் தேர் இப்படியே ஒரு பத்து நாட்கள் ஓடியது. அப்புறம் அச்சு இல்லாமல் தேர் ஓட்டவேண்டிய கட்டம் வந்துவிட்டது. இந்தக் கட்டத்தில் கையில் சில்லறைக் காசு களைத் தவிர நோட்டு என்ற பேச்சே கிடை யாது. சரக்குக் கொடுக்க மறுத்த மளிகைக் கடைக்காரன் சந்திரசேகரன் வேறு கடை களில் ரொக்கம் கொடுத்து வாங்குவதைக் கண்டுபிடித்து, ஒரே தேதியில் பாக்கிப் பணத்தை கொடுத்துவிட வேண்டும் என்று கிட்டி போட்டான். கொடுக்கத் தவறினால் ஆபீசுக்குத் தெரிவித்துச் சம்பளத்திலிருந்து வசூல் பண்ணப் போவதாக எச்சரித்தான்.

காய்கறி வண்டிக்காரன் அவர் தினமும் வீட்டிலேயே காலையிலும் மாலையிலும் உட் கார்ந்திருப்பதைப் பார்த்து அவருக்கு வேலை போய்விட்டது என்றே நினைத்து விட்டான். லீவ் என்று சொல்லியும் அவன் நம்பவில்லை. பணம் கொடுத்து விட்டுச் சொல்லியிருந்தால் நம்பியிருப்பான். இப்போழுது அவனால் எப்படி நம்ப முடியும்? தனக்கு இனி பணம் வருமா? தனக்குத் தெரியாமலே வீட்டைக் காலி பண்ணிக்கொண்டு எங்காவது போய்விடுவார் களா என்று பலவிதமாக யோசித்துப் பார்த் தான். இந்தப் பயத்தினால் அவன் பெருங் கூப்பாடு போட்டுப் பாக்கியைக் கேட்டதும், வாசலில் ஊர்க் கூட்டம் கூடியதும், சிந்தா திரிப்பேட்டையின் வரலாற்றிலேயே என்றும் காணாத ஒரு காட்சியாக இருந்தது.

அவமானத்தால் குன்றிப் போய் முழங் காலைக் கட்டிக் கொண்டு சந்திரசேகரன் மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது மனைவி கற்பகம் வந்து, "இன்று பக்கத்து வீட்டுப் பெண்கள் ஒரு புதுப் படம் பார்க்கப் போகிறார்கள். நானும் போகட்டுமா?" என்று கேட்டாளோ இல்லையோ, சந்திர சேகரனுக்கு ருத்திராவேசம் வந்து விட்டது. துள்ளி எழுந்தார்.

"உனக்கு மானம், வெட்கம் இருக்கிறதா? கடன்காரர்கள் பேசாத பேச்செல்லாம் பேசிவிட்டுப் போகிறார்கள். நீ சினிமாவுக்கு வேறே போகணுமா? மானம் கெட்டவளே!" என்று பாய்ந்தார்.

"மானம் இன்றைக்கா கெட்டிருக்கிறது அது கெட்டு எவ்வளவோ காலமாயிடுச்சு' என்று சொல்லிவிட்டுக் கற்பகம் சிரித்தாள்.

"இதில் இளிப்பு வேறு? சீ! நீ ஒரு பெண்ணு?"

"என்ன ஓரேயடியாய் மேலே மேலே போகி றீர்கள்?" என்று சொல்லிக் கொண்டு களத் தில் குதித்தாள் கற்பகம்.

"ஏண்டி, அதட்டிப் பார்க்கிறாயா?"

"அப்புறம் என்ன? கடன்காரன், கடன் காரன் என்று புலம்பியவண்ணமாக இருக் கிறீர்களே, கடன்காரன் இப்போதுதான் நம் வீட்டுக்குப் புதிதாக வருகிறானா? வரு டம் முந்நூற்றறுபத்தைந்து நாட்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் துரை மாதிரி சாப்பிட்டு விட்டு ஆபீசுக்குப் போய்விடு கிறீர்கள். நான்தான் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு பதிலைச் சொல்லி அனுப்ப வேண்டி யிருக்கிறது. என்னவோ, இப்பொழுதுதான் கடன்காரர்கள் வருகிற மாதிரி முழங்கு கிறீர்களே?"

சந்திரசேகரனுக்கு அப்பொழுதுதான் நெஞ்சில் உண்மை தைத்தது. கடன்காரர் களைப் பார்த்து அவள் அவமானம் அடையா மல் இருக்கும் காரணமும் அப்பொழுதுதான் புலப்பட்டது. வருஷம் முழுவதும் கடன் காரர்களுக்குப் பதில் சொல்லிப் பதில் சொல்லி அவளுக்கு உள்ளம் மரத்துவிட்டது. அவருக்கோ அது புது அனுபவம். அவ மானம் பொறுக்க முடியவில்லை.

'இது நரக வேதனை' என்று நினைத்துக் கொண்டார். இருந்தாலும் மனைவியின் பேச்சுக்குத் தாழ்ந்து போக மனமில்லை. ஒன்றும் சொல்லாமல் நின்றார்.

"என்ன, போகட்டுமா?" என்று பழைய பல்லவியைக் கற்பகம் ஆரம்பித்தாள்.

"தொலை. எவன் எக்கேடு கெட்டால் உனக்கு என்ன?" என்று சீறி விழுந்து தம் மைத் தாமே சமாதானப்படுத்திக் கொள்ள முனைந்தார்.

'அனுமதி கிடைத்து விட்டது' என்ற மகிழ்ச்சியில் பக்கத்து வீட்டு அம்மாளிடம் சில்லறைக் கடன்பட்டுப் பகல் காட்சி சினிமா வுக்குப் புறப்பட்டாள், கற்பகம்—இரண்டு வயது ராஜியை இடுக்கிக்கொண்டு.

மாலையில் பள்ளிக்கூடத்திலிருந்து பிள்ளை களும் வீடு திரும்பினார்கள். நான்கு பிள்ளை களில் ஒன்றுகூட அப்பாவிடம் நெருங்க வில்லை. லீவு தொடங்கிய ஒரு வாரத்தில் அப்பாவோடு குலாவியதுதான். அப்புறம் அவர் எடுத்ததற்கெல்லாம் சீறி விழுவதும், கைக்கு எட்டிய பிள்ளையை அடிப்பதுமாக இருக்கவே, பிள்ளைகள் ஒதுங்கி விட்டன. அவருக்கும் அது பிடித்திருந்தது.

பிள்ளைகள் அம்மாவைத் தேடினார்கள். காணவில்லை. ஒன்றும் சொல்லாமல் வெளியே விளையாடப் போய்விட்டார்கள். விளையாட்டு முடிந்தும்கூட வீடு திரும்ப அவர்களுக்கு விருப்பமில்லை. அப்பா இருக்கும் வீட்டுக்குள் அடியெடுத்து வைக்கவே மனமில்லாமல், வாசற்படியிலேயே வரிசையாக உட்கார்ந்து அம்மாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''அப்பா எப்போ ஆபீசுக்குப் போவார்?'' என்று கேட்டாள் சாவித்திரி.

''இன்னும் பத்து நாட்கள் இருக்கின்றன'' என்றான் மூத்த பையன்.

''பத்து நாட்களா?'' என்று மற்ற மூன்று பிள்ளைகளும் பயப் பிராந்தியோடு சொன்னார்கள். 'கடவுளே! இனி பத்து நாட்களை எப்படிக் கழிப்பது?' என்று சந்திரசேகரன் கவலைப்பட்டதைவிடப் பத்து மடங்கு அதிகமாக அவர்கள் கவலைப்பட்டார்கள். மத்தியானம் பள்ளிக்கூடத்திலிருந்து சாப்பிட வரும்போதும், மாலையில் வீடு திரும்பும் போதும் எப்போதுமே அப்பா வீட்டுக்குள் உட்கார்ந்திருப்பது அவர்களுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. வீட்டை விட்டு எப்போது தொலைவார் என்று கடவுளைக் கும்பிடத் தொடங்கி விட்டார்கள்.

மறுநாள், ''இன்னும் ஒன்பது நாட்கள் தான். அப்புறம் ஆபீசுக்குப் போய்விடுவார்'' என்று சாவித்திரி கும்மாளமாகத் தன் தங்கையிடம் சொல்லிக் கொண்டிருந்தது சந்திரசேகரன் காதில் விழுந்தது.

''ஆபீசுக்குப் போகாமல் ஏன் வீட்டிலேயே இருக்கிறார்? சீ!'' என்று வெறுப்போடு மூத்த மகன் சொன்னதும் அவருக்கு உள்ளே கேட்டது.

'இனியும் நான் ஏன் உயிர் வாழ வேண்டும்? பெற்ற பிள்ளைகளே நான் லீவ் எடுத்துக் கொண்டு வீட்டில் இருப்பதை விரும்பவில்லை. இதற்காகவா லீவ் எடுத்தேன்?' என்று நொந்து, விரக்தி கொண்டு, நடைப் பிணமாகிவிட்டார் சந்திரசேகரன்.

'நான் வீட்டில் இருப்பது எனக்கும் பிடிக்கவில்லை, என் மனைவிக்கும் பிடிக்கவில்லை; பிள்ளைகளுக்கும் பிடிக்கவில்லை.'

என்ன செய்வது? மனைவி மக்களை விட்டுத் தனியே இருக்க அந்த வீட்டில் வேறு இடம் கிடையாது. தெருவிலே எவ்வளவு நேரம் சுற்ற முடியும்? கடற்கரைக்கோ வேறு எங்குமோ போக பஸ் செலவுக்குக் காசு வேண்டும். ஒரு மணி நேரமாவது ஓரிடத்தில் உட்கார்ந்திருக்க அவர் தனியாகத் தவித்தார். கடைசியில் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. 'லீவை இதோடு முடித்துக் கொண்டு ஆபீசுக்குப் போனால் என்ன? வேண்டாம் என்று சொல்வார்கள்? அதிகாரிக்குச் சந்தோஷமாகத்தான் இருக்கும். நாளையே போய் விடுகிறேன். ஏழெட்டு மணி நேரமாவது நிம்மதியாக இருக்கலாம். இதுதான் சரியான யோசனை' என்று முடிவு செய்தார். அடுத்த நாள் விடிந்ததும், ''இன்று ஆபீசுக்குப் போக வேண்டும். மீதி நாள் லீவை ரத்துச் செய்து ஆர்டர் வந்திருக்கிறது'' என்று மனைவியிடம் ஒரு பொய்யைச் சொன்னார். அதைக் கேட்ட சாவித்திரி ஓடோடி வந்து, கூடாயடியில் நின்ற அண்ணனையும், தங்கைகளையும் பார்த்து, ''அப்பா இன்று ஆபீசுக்குப் போகிறார். இப்போது அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்தார்'' என்று ஆனந்தக் கூத்தாடினாள். மற்றக் குழந்தைகளுக்கும் அளவிட முடியாத மகிழ்ச்சி. ஜன்மச் சனி நீங்கியது போன்ற ஆசுவாசம். எல்லோரும் சாவித்திரி சொல்வது நிஜம்தானா என்று அறிய அப்பாவிடம் ஓடி வந்தார்கள்.

''ஆபீசுக்கா போறே?'' என்று ஆவலோடு கேட்டான் மகன்.

''சுடுகாட்டுக்குப் போக முடியவில்லை. அதனாலே ஆபீசுக்குப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் குளிக்கச் சென்றார் சந்திரசேகரன்.

குழந்தைகள் மார்கழி மாதத்தில் என்ன செய்ய வேண்டும்?

அருமைக் குழந்தைகளே!

1. மார்கழி மாதம் பிறக்குமுன் திருப்பாவை, திருவெம்பாவை பாசுரங்களை மனப்பாடம் செய்யுங்கள். மார்கழி முப்பது நாட்களும் காலையில் நீராடி ஆண்டவனை நினைத்துப் பாடல்களைச் சொல்லிக் கொண்டு ஊர்வலம் வாருங்கள்.

2. திருவெம்பாவை இருபது பாடல்களையோ திருப்பாவை முப்பது பாடல்களையோ தெளிவாகவும் அழகாகவும் பாடப் பழகிக் கொள்ளுங்கள்.

3. குழந்தைகளே! இப்பொழுதே மனப்பாடம் செய்ய ஆரம்பித்தால்தான் மார்கழி மாதம் ஆரம்பத்துக்குள் 'நெட்டுரு' ஆகும்.

4. மார்கழிக்குள் மனப்பாடம் செய்யுங்கள்; மார்கழி நீராடுங்கள்; ஊர்வலம் வாருங்கள்; தூங்கும் குழந்தைகளையும், பெரியவர்களையும் பாட்டுப் பாடி எழுப்புங்கள்; ஆயுள் பூர்ணமாக ஆனந்தமாக வாழுங்கள்.

— ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

★



★

குழந்தைகள் அம்மாவிடம் கேட்டு, சாவித்திரியின் கூற்றை ஊர்ஜிதம் செய்து கொண்டார்கள். ''நல்ல வேலை'' என்றாள் மகள்.

''உங்களுக்கும் உங்கள் அப்பாவுக்கும் நல்ல வேலைதான். எனக்கு நல்ல வேலை எப்போது வருமோ? மண்டையைப் போட்டால் தான் எனக்கு நல்ல வேலை'' என்று கற்பகம் முணுமுணுத்தாள்.

சந்திரசேகரன் குளித்துவிட்டு வந்து சாப்பிட்டார். 'முட்டாள்தனம். எனக்கு எதற்கு லீவ்? குற்றாலம், கொடைக்கானல் என்று போகிறவனுக்கு லீவ் வேண்டும். கடன்காரர்களுக்குப் பதில் சொல்லவும், பெண்டாட்டியோடு சண்டை போடவும், பிள்ளைகளை அடித்து உதைக்கவுமா ஒருவன் லீவ் எடுக்க வேண்டும்? அந்த முட்டாள்தனத்தைத்தானே நான் செய்திருக்கிறேன். ஆபீஸில் மின்சார விசிறியின் காற்று; கட்டடத்தைச் சுற்றியும் பச்சை மரங்கள்; கூட வேலை செய்பவர்களுடன் தமாஷ் பேச்சு.... அது சுவர்க்கம். அதை விட்டு விட்டு இந்தக் குகைக்குள் வந்து புழுங்கிக் கொண்டும் கடன்காரர்களுக்கு முன்னால் முக்காடு போட்டுக் கொண்டும் இருக்கிறேனே, என் முட்டாள்தனத்தை யாரிடம் போய்ச் சொல்வது?'

சாப்பிட்டுவிட்டு, தயிர் சாத டப்பாவையும் தூக்கிப் பையில் போட்டுக் கொண்டு ஆபீசுக்குக் கிளம்பினார் சந்திரசேகரன். சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளிவரும் ஜன்மக் கைதி மாதிரி ஆபீசைப் பார்த்து நடக்கலானார். பெரிய பாரத்தை இறக்கி வைத்த மாதிரி இருந்தது. பஸ் ஏறி, ஆபீஸ் அருகே போய் இறங்கினார். ஆபீஸ் கட்டடத்தை ஏறிட்டுப் பார்த்தார். கொஞ்சம் திகைத்து நின்றார். 'உள்ளே போய் என்ன செய்வது? லீவ் இதோடு போதும் என்று சொன்னால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்?' என்று யோசிக்கத் தொடங்கியதும் கால்கள் நகரவில்லை. யோசனை நீண்டு கொண்டே போனது.

லீவ் வேண்டும் என்று ஏழு மாத காலம் தவம் கிடந்து விட்டு, இப்போது லீவ் வேண்டாம் என்று வலியச் சொல்லப் போவதை நினைக்கும்போது தமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்றுகூட அவருக்கு ஒரு கணம் சந்தேகமாக இருந்தது. இனி திரும்பவும் லீவ் எடுக்க எத்தனை மாதங்கள் அல்லது வருஷங்கள் காத்திருக்க வேண்டுமோ? என்று யோசித்தார். சென்ற வருஷம் வைகுண்ட ஏகாதசிக்கு லீவ் கிடையாது என்று தெரிந்ததும், ஆபீஸிலுள்ள அத்தனை பேரையும் திரட்டிக் கொண்டு லீவ் விட்டே ஆக வேண்டும் என்று தாம் போராடியதை நினைத்துப் பார்த்தார். 'ஒரு நாள் லீவுக்குக் கடைசி எல்லைவரையில் போய்ப் போராடிய அதே சந்திரசேகரனா இப்போது லீவ் வேண்டாம் என்று சொல்லப் போவது? மானக்கேடு! லீவு எடுக்காமல் இந்த ஆபீசுக்கு உழைத்தால் நாளைக்கு நமக்கு என்ன வைரத் தோடாவா பண்ணிப் போடப் போகிறான்? உழைத்து ஓடானது தான் மிச்சம். என் இளிச்சவாய்த் தனத்தைப் பார்த்து இரட்டிப்பு வேலையை என் தலையில் கட்டத்தான் பார்ப்பார்கள்... ஆம், உயிரே போனாலும் சரி, லீவை மட்டும் இழக்கக் கூடாது. இது நிச்சயம்' என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு அங்கிருந்து திரும்பி விட்டார்.

சிந்தாதிரிப்பேட்டை வழியாகப் போகும் பஸ் வந்து நின்றது. ஏறலாமா கூடாதா என்று முடிவு செய்வதற்கு முன், பஸ் போய் விட்டது. 'போகட்டும், என்ன அவசரம்?' என்று அங்கேயே நின்று கொண்டிருந்தார். அந்த ஆபீசில் வேலைக்கு வருகிறவர்கள் சற்றுத் தூரத்தில் பஸ்ஸில் இறங்கி நடப்பதைப் பார்த்தார். 'நான் வேலைக்குப் போனால், இந்தப் பயல்களுக்கெல்லாம் கொண்டாட்டமாகத்தான் இருக்கும். நாளையே ஒரு பயல் ஒரு மாத லீவுக்கு எழுதிப் போடுவான். அவனுடைய வேலையையும் நான் தான் சேர்த்துச் செய்ய வேண்டும். நான் என்ன பொதி சுமக்கும் கழுதையா?'

எங்கெங்கோ போகும் பஸ்கள் வந்து நின்றன. புறப்பட்டன; சிந்தாதிரிப்பேட்டைக்குப் போகும் மற்றொரு பஸ் வந்து நின்றது. அதில் ஏற நினைத்தவர், கடைசியில் ஏறாமலே இருந்து விட்டார். அதுவும் போய்விட்டது.

அப்புறம் திருவல்லிக்கேணி பஸ் வந்தது. 'எங்காவது போவோம். உடனே வீடு திரும்புவது நாகரிகமாக இராது' என்று நினைத்துக் கொண்டு அந்த பஸ்ஸில் ஏறினார். நேரே திருவல்லிக்கேணிக் கடற்கரையோரம் போய் இறங்கினார். அப்புறம்?

பகல் பதினொன்றே கால் மணி. அந்த நேரத்தில் கடற்கரையை நோக்கி நடையைக் கட்டினார் சந்திரசேகரன். அப்பொழுது அவர் மனம் படாத பாடு பட்டது. 'ஆபீசுக்கும் போக மனமில்லை; வீடு திரும்பவும் மனமில்லை. ஒரு குடும்பஸ்தனுக்கு இப்படி ஒரு நிலையா?.....'

சந்திரசேகரன் கடற்கரையில் கிடந்த ஒரு பெஞ்சில் ஒரு வேப்ப மரத்தின் நிழல் விழும் பகுதியில் போய் உட்கார்ந்தார். பக்கத்தில் யாருமே இல்லை. கடற்கரைச் சாலையில் அதிவேகமாக ஓடும் பஸ்களையும் கார்களையும் பார்த்துக் கொண்டேயிருந்தார். மறுபக்கம் திரும்பிக் கடலைப் பார்த்தார். தூரத்தில் ஒரு கப்பல் தெரிந்தது. சுற்று முற்றும் பார்க்க மேற்கொண்டு எதுவும் இல்லை. அதனால் புற உலகைப் பார்ப்பதை நிறுத்தித் தம்மைத் தாமே பார்க்கத் தொடங்கினார்.

ஒரு நிமிஷம்... இரண்டு நிமிஷம்...மூன்று நிமிஷம்.

சந்திரசேகரன் திடீரென்று நிமிர்ந்து சுற்றிலும் பார்த்தார். யாரும் பக்கத்தில் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டார். தலையைக் குனிந்தார். இரண்டு கைகளாலும் கண்களை மூடிக் கொண்டு ஒரு பெருமூச்சு விட்டார்.

'எனக்கு எதற்கு லீவ்? எனக்கு ஏன் அந்த ஆசை?' — கண்ணீரைத் தாரை தாரையாக வடித்துக் கொண்டு விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டார் சந்திரசேகரன்.



காலச் சக்கரம்

கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 44

தங்கப்பனின் தடுமாற்றம்

உஷா தங்கப்பனுடைய அறையில் தன்னைத் தவிர இன்னுமொரு பெண் இருப்பதையும் பொருட்படுத்தாமல் அவனைத் தாறுமாறாக ஏச ஆரம்பித்த போதும் அவன் கோபமடைந்து சீறவில்லை. அமைதியாகவே பதிலளித்தான். மிருணாளினி அருகில் இருப்பதை லட்சியம் செய்யாமலே அவள் தங்கப்பனைத் தந்திரக்காரன் என்றாள், நாடகமாடுகிறான் என்று இரைந்தாள், கண்ணியம் நேர்மை என்று சொல்லிக் கொண்டு அவன் ஊரை ஏமாற்றுவதாக எள்ளி நகையாடினாள்.

அவளுடைய அந்தனை கோபத்துக்கும் காரணம் மாருதியைத் தங்கப்பன் தான் சென்றவிடங்களிலெல்லாம் மேடையில் ஏற்றியதுதான்! "சீச்சீ! நீ இவ்வளவு கேவலமா நடந்துக்கிடுவேன்னு நான் எதிர் பார்க்கவேயில்லே. நானோ என் அப்பாவோ தான் குண்டர்களை அனுப்பி மாருதியைத் தாக்கியதாக உன்னால் நிரூபித்துக் காட்ட முடியுமா? அது முடியாதென்றால் அப்படி ஒரு வதந்தியைப் பரப்பியதற்காக மன்னிப்புக் கேள் உடனே! நீ மானமுள்ளவனாயிருந்தால் இப்போதே இதில் கையெழுத்துப் போட்டுக் கொடு!" இவ்விதம் கூறியபடியே அவனெதிரில் ஒரு காகிதத்தை நீட்டினாள் உஷா. மிருணாளினி திகைத்துப் போய் உட்கார்ந்திருக்கத் தங்கப்பன் அதனை நிதானமாக வாங்கிப் படித்தான். மாருதி அடிபட்டதற்கும் இந்தத் தேர்தலுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்றும், தான் அவரைத் தேர்தல் மேடைகளில் அமரச் செய்ததால் அப்படி ஓர் அபிப்பிராயம் பரவியிருக்குமானால் அதற்காகத் தான் வருந்துவதாகவும் அதில் எழுதப்பட்டிருந்தது.

தங்கப்பன் என்னளவும் பதற்றமின்றி அதனைச் சுக்குச் சுக்காகக் கிழித்தான். காலடியில் கிடந்த குப்பைத் தொட்டியில் அதனைப் போட்டுவிட்டு நிமிர்ந்தான். 'ஆஹா! உஷாவினுடைய வசீகர முகம் எப்போது இத்தனை விகாரமாக மாறியது? எழிலார்ந்த வதனத்தைப் பெற்றிருந்தால் தான் என்ன? அசூயை, ஆக்கிரம், குரோதம், வன்மம் போன்ற பயங்கர உணர்ச்சிகள் மனத்தில் கோர தாண்டவமாடும் போது அதைத்தானே முகமும் பிரதிபலிக்கும்? உயர்ந்த பெல்ஜியம் நிலைக் கண்ணாடியானாலும் எதிரே இருப்பதைத்தானே அதுவும் காட்டும்?'

"மாருதி அடிபடுவதற்கு நீயோ உன் அப்பாவோதான் காரணம் என்று நான் எங்குமே எப்போதுமே கூறியதில்லே, உஷா! நான் ஊரை ஏமாற்றுகிறேனா அல்லது உன்மையை மக்களுக்கு உணர்த்துகிறேனா என்பதே எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லே. இப்படி ஒரு 'ஸ்டண்ட்' வேலையை மேற்கொள்ள நேர்ந்ததற்காக நானே ரொம்பவும் வருத்தப்படத்தான் செய்தேன். ஆனால் அதே நேரத்தில், பல வருஷங்களுக்கு முன்னால் பன்னிரண்டு வயதுச் சிறுவனாயிருந்த என்னைக் குறித்து உன் அப்பா ஒரு பொதுக் கூட்டத்தில் பேசி ஊரைச் சிரிக்க வைத்தாரே, அதையும் நான் மறக்கவில்லே. 'யானைப் பெட்டிக்கு வோட்டுப் போட்டால் நேருஜி வருவார்' என்று நான் சிறுபிள்ளைத்தனமாக அறியாமல் கூறியதை அவர் பெரிது படுத்திக் கிண்டலுக்கும் கேலிக்கும் என்னை உள்ளாக்கவில்லேயா? அதைவிடக் கேவலமான தந்திரத்தையா நான் இன்று கையாண்டு விட்டேன்? இந்தத் தொழிலகத்தை நான் ஆரம்பித்த பிறகு எனக்கு நீங்க கொடுத்த தொல்லைகளையும் நான் மறக்கவில்லே. பிறகு தேர்தலுக்கு நான் நிற்கப் போகிறேன் என்பதால் ஏற்பட்ட புதிய கஷ்ட நஷ்டங்களையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டுதான் இருக்கிறேன். பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்கிற நோக்கம் எனக்கில்லே, உஷா! ஆனாலும் உங்களாலோ அல்லது வேறு யாராலோ உருவாக்கப்பட்ட ஓர் அருவருக்கத்தக்க சூழ்நிலையில் நானும் என் லட்சிய வழிகளிலிருந்து திசை திரும்பி, தரக் குறைவான மார்க்கங்களைப் பின்பற்றுவது தவிர்க்க முடியாததாகி விட்டது."

"நான் உன்னுடைய சால்ஜாப்புகளைக் கேட்க வரவில்லே. கையெழுத்துப் போட்டுத் தருவாயா, மாட்டாயா?"

தங்கப்பன் குப்பைத் தொட்டியைத் தூக்கிக் காண்பித்தான். "இதுஉனக்குப் பதில்சொல்லும்!"

உஷா அவனைச் சுட்டெரித்து விடுவது போல் பார்த்தாள். அடுத்தாற் போல் மிருணாளினி இருந்த பக்கமாகத் திரும்பி நெஞ்சிலிருந்த வெறுப்பையெல்லாம் கொட்டித் தீர்ப்பவள் போல் 'ஹூம்' என்று ஒலி எழுப்பினாள். அறையைவிட்டு வெளியேறிக் கதவை இழுத்துப் படீரென்று சாத்திய போது மரத்தாலும் கண்ணாடியாலுமான சுவர்கள் எல்லாப் பக்கங்களிலும் அதிர்ந்தன. கதவில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடிகளுள் ஒன்று விரிசல் கண்டே விட்டது!

தங்கப்பன் உஷாவின் நடத்தைக்காக வெட்கப்படுபவன் போல் தலை குனிந்திருந்தான். மிருணாளினியும் பேசவில்லை. அந்த மௌனத்துக்கு இடையில் உஷா ஹெரால்ட் காரைக் கிளப்பிக்கொண்டு வேகமாக ஓட்டிச் செல்வது மட்டும் கேட்டது.

"இவளைப் போன்ற பெண்கள் இருக்கும் வரையில் என் போன்றவர்களின் வேலை சுலபமாகி விடும். கம்யூனிஸம் வெகு விரைவாகப் பரவும்" என்றாள் மிருணாளினி.

"அவளுக்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன்" என்றான் தங்கப்பன். "பாவம், அவள் ரொம்பவும் குழம்பிப் போயிருக்கிறாள்."

"என்ன சொன்னீர்கள்?" என்று அதிசயத்துடன் வினவினாள் மிருணாளினி. "இந்த ராங்கிக்காரிக்காக நீங்கள் மன்னிப்புக் கேட்பதா? இவளுக்கு இரக்கம் காட்டுவதா? அழகுதான்!"

"இல்லை, அப்படி ஒரேயடியாக விட்டெறிந்து பேசி விடாதீங்க" என்ற தங்கப்பன் உஷாவிடம் தனக்குள்ள சிரத்தையை விவரித்தான். "என்றைக்காவது ஒரு நாள் அவளுடைய இந்தக் கடின சித்தத்தை உடைத்தெறிந்துவிட்டு உள்ளுக்குள்ளே அடங்கிக் கிடக்கும் அவளுடைய இயல்பான குணங்களை வெளிக் கொணரத்தான் போகிறேன். அப்போ இவள் நம்ம உஷாவா? தீனதயாளுவின் மகளா? அவளேதானா? என்று மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப் படுவீங்க."

இதைக் கூறி வரும்போது அவன் கண்களில் பிரகாசமானதோர் ஒளி குடிகொள்வதைக் கண்டாள் மிருணாளினி. ஆனால் அது பற்றி அவள் ஏதும் பேசவில்லை. விடை பெற எழுந்தாள்.



"எங்கே கிளம்பிட்டீங்க? இன்னும் சற்று நேரம் பொறுத்து நம் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டுப் புறப்படலாம்."

"வேண்டாம்! வேண்டாம்!" என்றாள் மிருணாளினி. "உங்கள் அம்மா தாமரை அப்படியே தலை சுற்றிக் கீழே விழுந்துவிடுவாள். மகன் முதலில் கல்யாணம் வேண்டாம் என்று செல்லத்தைப் பட்டணத்துக்குத் துரத்தியடித்து விட்டான்; பிறகு நிலத்தையெல்லாம் விற்பேனென்றான்; உருப்படாமல் போவதற்கென்று ஒரு தொழிலகத்தை ஆரம்பிப்பேனென்றான். அப்புறம் தேர்தலில் குதிப்பேன் என்று பிடிவாதம் பிடித்தான்; கடைசியில் இதெல்லாம் போதாக்குறைக்கு இப்போது முன்பின் தெரியாத எவளையோ இழுத்துக் கொண்டு வந்து நின்று சோறு போடு என்கிறானே இதெல்லாம் என்ன விபரீதத்துக்கோ? என்று பயந்து நடுங்கி மயக்கமே போட்டு விழுந்து விடுவாள்!"

தங்கப்பனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. மிருணாளினியை வீட்டுக்கு அழைத்துப் போனால் தாமரை இவ்விதம் மிருணாளினியின் எதிரேயே வாய் விட்டுக் கதறிவிட மாட்டாள்தான்.



அவ்வளவு தூரத்துக்கு இங்கிதம் தெரியாதவளல்ல அவள். ஆனாலும் அவள் சிந்தனை இந்த விதமாகத்தான் செயல்படும். மிருணாளினியின் தலை மறைந்த பிறகு தன்னிடம் இதையெல்லாம் கூறி, 'சீக்கிரமே செல்லத்தைக் கல்யாணம் செய்து கொள்' என்றும் கண்களில் நீர் மல்கக் கெஞ்சாத குறையாகக் கேட்பாள் என்பதும் நிச்சயம். ஆனால் இதனையெல்லாம் இவ்வளவு கச்சிதமாக மிருணாளினி எப்படி அறிந்தாள்? தாமரை, செல்லம் என்ற பெயர்களையே மிருணாளினியிடம் இந்த வினாடி வரையில் தான் சொன்னதில்லையே?

கதவைத் திறக்கப் போனவளை, "சற்றுப் பொறுங்க, இப்படி உட்காருங்க" என்று கூறித் தடுத்து நிறுத்தினான் தங்கப்பன். "என்னைப் பற்றிய இத்தனை தகவல்களையும் நீங்க எப்படி, எங்கே சேகரிச்சீங்க?"

"உங்களைப் பற்றி முழு விவரங்களையும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டியது என் வேலை. அதைத்தான் நான் செய்திருக்கிறேன்" என்ற மிருணாளினி புன்சிரிப்புடன் மறுபடியும் உட்கார்ந்து கொண்டாள். கால் மேல் கால் போட்டு உடம்பை ஒரு தடவை நெளித்து ஒடித்துப் பின்னுக்குச் சாய்ந்தாள். "மிஸ்டர், பெர்ரிமேஸன்! 'க்ராஸ் எக்ஸாமினேஷ'னுக்கு நான் தயார்! எங்கே முதல் கேள்வியைப் பிரயோகியுங்கள் பார்க்கலாம்!"

"நான் வக்கீலும் இல்லே; எனக்குக் குறுக்கு விசாரணை செய்யவும் தெரியாது" என்றான் தங்கப்பன் சிரிப்பை அடக்கிக் கொண்டு. "நீங்களே சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்து விடுங்கள்." ஒரு நெடு மூச்சு புறப்பட்டது அவன் நெஞ்சிலிருந்து. அவனறியாமலே அவனைச் சுற்றிலும் எத்தனை பேர் எத்தனை விதமாக வலை பின்னுகிறார்கள்!

"ஒரு பக்கத்தில் உஷா என்னை எவ்விதத்திலேனும் பேரும் புகழும் இழக்கச் செய்வதுடன் பல இடையூறுகளையும் இன்னல்களையும் விளைவித்து ஓட்டாண்டியாக்கி ஒழித்துக் கட்டிவிடவும் முயலுகிறாள். மறுபக்கம் என் தாயாரும் செல்லமும் அவள் பெற்றோரும் கனிவான வார்த்தைகளாலும் கண்ணீராலும் என்னைக் கவர்ந்து கல்யாண பந்தத்தில் சிக்க வைக்கப் பிரயத்தனப்படுகிறாங்க. இன்னொரு பக்கம் நீங்க.... நீங்க நட்புக்காகவே என்னிடம் நட்புக் கொள்ளணும் என்றும் அதில் வேறு ஒரு நோக்கமும் இருக்கக் கூடாது என்றும் நான் ஆசைப்பட்டேன். அதற்காக ஏங்கவும் செய்தேன். ஆனால் அது நடக்காது போலிருக்கிறது" என்று ஓரளவு ஏமாற்றத்துடன் கூறினான் தங்கப்பன். "நீங்களும் ஏதோ காரியார்த்தமாகத்தான் என்னுடன் பழகுவதாகத் தெரியுது. உங்களுடைய திட்டம் என்ன ?"

"ஒரு பக்கம் உஷா, மறுபுறம் செல்லம் இன்னொரு பக்கம் நான்" என்று தன்னைத் தானே சுட்டிக் காண்பித்துக் கொண்டாள் மிருணாளினி. "நான் உங்களை ஒரு தீவிர கம்யூனிஸ்டாக மாற்றி விடச் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறேன்." அவள் குரலில் அது வரையில் இல்லாத ஓர் அழுத்தம் குடிகொண்டிருந்தது.

தங்கப்பன் விழித்தான் சில கணங்களுக்கு. "இதுவும் உங்கள் வேடிக்கைப் பேச்சுக்களில் சேர்ந்ததுதானே? நான் சிரிக்கலாம் அல்லவா?"

"இல்லே, நான் ரொம்பவும் பொறுப்புணர்ச்சியுடன் 'ஸீரிய'ஸாகப் பேசிக்கொண்டிருக்கிறேன் !"

"பாவம் உள்ளத்தில் உள்ள எதையுமே மறைக்கத் தெரியாத நீங்கள் உங்களுடைய இந்தச் சூழ்ச்சியையும் அம்பலப்படுத்திட்டீங்களே!"

"பரிதாபப்பட வேண்டாம்! அதுவும் சூழ்ச்சியின் ஓர் அம்சம்தான்! உள்ளத்தில் இருப்பதை ஒளிக்காமல் சொல்வோரைத்தான் உங்களுக்குப் பிடிக்குமே. அது எனக்குத் தெரியும்."

தங்கப்பன் மாறாத புன்னகையுடன் விளங்கும் அவள் வதனத்தை உற்று நோக்கினான். அவள் வேடிக்கை செய்யவில்லை என்று உணர்ந்தான். அவள் தடுமாறவில்லை, சிரத்தைத் தாழ்த்தவில்லை, விழிகளை வேறு திக்கில் திருப்பவில்லை. உறுதியாகத் தன்னம்பிக்கையுடன் அவனை நேருக்கு நேராகப் பார்த்தபடி இருந்தாள்.

"நான்..... நான்......" தடுமாறியவன் தங்கப்பன்தான். "நான் உங்கள் இஷ்டத்துக்குக் கட்டுப்படுவேன் என்று எதனால் எதிர்பார்க்கிறீர்கள்?"

"உங்கள் மனம் விரக்தியடைந்திருக்கிறது; சலிப்புற்று இருக்கிறது; வேதனையில் பிணைந்து விட்டிருக்கிறது; ஏமாற்றம் அங்கு குடி கொண்டிருக்கிறது. கம்யூனிஸத்தைப் பயிர் செய்ய ஏற்ற இடமாக உங்கள் மனம் இப்போது திகழ்கிறது. சமமான கட்டாந்தரையில் பயிர் விளையுமா? உழுது கொத்திக் கிளறி விடப்பட்ட நிலத்தில்தானே செழிக்கும்?"

"உங்களுடைய இந்தக் கூற்று சிந்தித்துப் பார்க்கத் தெரியாத பாமர மக்களிடம் செல்லுபடியாகும்." என்றான் தங்கப்பன்.

"தவறு! அங்கே வறுமை எங்களது பொதுவுடைமை சித்தாந்தப் பயிருக்கு உரமாக அமையும். அறிவாளிகளிடத்தில் சிந்தனைக் குழப்பத்தை எங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வோம். இன்று உங்களுடைய அரசியல் முறையில் உங்களுக்கே நம்பிக்கை குறைந்து வருகிறது. உங்களுக்குத் தானே 'ஜனநாயகக் காவலன்' என்று பட்டப் பெயர் சூட்டி வர்ணித்தார்கள் ஒரு தேர்தல் பொதுக் கூட்டத்தில்? வேலிக் கம்பு இருக்கிறதே, அது உறுதியாக நிற்பதுபோல் தோன்றும் வெளிப் பார்வைக்கு. உள்ளுக்குள்ளே செல் அரித்திருப்பது தெரியாது! தொட்டால் போதும், பொல பொலவென்று உதிர்ந்து விடும். இன்று நீங்கள் அத்தகைய ஒரு வேலிக் கம்புக் காவலன்தான். உங்களை வீழ்த்தத் தேவைப்படுவது ஓர் அதிர்ச்சி!"

அந்த அதிர்ச்சியும் வெகு சீக்கிரமே தங்கப்பனுக்கு ஏற்பட்டது. தேர்தலில் தீனதயாளு போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற செய்திதான் பேரிடியாக வீழ்ந்தது அவன் தலையில்.

போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று கூறுவதைவிட அவரை எதிர்த்து நின்றவர் விலைக்கு வாங்கப்பட்டார் என்றே, பணத்துக்கு அடிமையானார் என்றே கூறுவது தான் பொருந்தும்.

ஆனால் அதைச் சொல்ல வாயில்லை யாருக்கும். எப்படி, எதை ஆதாரமாகக் கொண்டு கூறமுடியும் அந்த உண்மையை? இந்தத் தேர்தலில் அபேட்சகராய் நின்ற வேறு சிலர் ஏற்கனவே போட்டியிலிருந்து விலகிக் கொண்டுவிட்டிருந்தார்கள். தங்கப்பன் தன் சகா ராமபத்திரனை முழுமையாக நம்பியிருந்தான். தினதயாளுவுக்கு ராமபத்திரனை வெல்வது ரொம்பப் பெரிய காரியமில்லை என்பதும் தங்கப்பனுக்குத் தெரியும். ஆனால் ஜனநாயக முறைப்படி ஓர் எதிர்ப்பின்றி அவர் தேர்ந்தெடுக்கப்பட அனுமதிப்பானேன்? நட்புக்கும் நம்பிக்கைக்கும் கூட ஒரு விலை உண்டு என்று இன்று கண்டுகொண்டான் தங்கப்பன். அதிலும் கடைசி விநாடியில், அவருக்குப் பதில் வேறு ஒருவரை அந்த ஸ்தானத்துக்கு நியமிக்க நேரமில்லாத வகையில் 'வாபஸ்' பெற்றுக் கொண்டிருந்தார் ராமபத்திரன்.

யாருமே பகிரங்கமாக வெளியிட முடியாத இன்னொரு உண்மையையும் அறிந்தான் தங்கப்பன். தேர்தலில் போட்டியிடுவது என்று தான் தீர்மானித்த அந்த ஆரம்ப நாட்களில் ஒருமுறை தன் வீடு தேடி வந்து, தனக்குத் தேர்தல் செலவுகளுக்காகப் பண உதவி செய்வதாகக் கூறி ஆனால் 'எங்கள் பெயர்களை மட்டும் வெளியிட்டு விடாதீங்க' என்று கேட்டுக் கொண்டார்களே அதே செல்வந்தர்கள், வர்த்தகத் தொழிலதிபர்கள் தான் இன்று ஒன்று சேர்ந்து இந்தக் கீழ்த்தரமான காரியத்திலும் இறங்கியிருந்தார்கள். தினதயாளுவிடம் நல்ல பெயரெடுக்க வேண்டும், நாளை அவர் மத்திய சர்க்காரில் மந்திரியான பிறகு ஏதேனும் சலுகைகள் பெற வேண்டும் என்கிற உள் நோக்கம் அவர்களுக்கு இல்லாமலா போகும்?

எதிர்ப்பிலே, அதிலும் தீவிர எதிர்ப்பிலே காணும் வெற்றியில்தான் நிலையான இன்பம் இருக்கிறது என்பதை உணராத உஷா போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவதிலேதான் பெருமை என்று தவறாகக் கருதி இந்த வர்த்தகத் தொழில் அதிபர்களிடம் பேசியிருக்கலாம் என்று சந்தேகித்தான் தங்கப்பன். வீடு வீடாகப் போய் ஓட்டுக் கேட்பதென்பது தங்கள் கௌரவத்துக்கு இழுக்கு என்று அவள் நினைத்திருப்பாள். ஓட்டுக்களை வாங்குவதென்றாலும் ஏராளமான மக்கள் தொகையைக் கொண்டதும், பல மைல்கள் நீள அகலங்களையுடையதுமான பெரிய தொகுதியில் சிரமம்தான். அதைவிட ஒரேயடியாக இருக்கிற ஒரே எதிர்ப்பை விலை பேசிவிடுவது ரொம்பவும் சுலபம். இன்னும் கேட்டால் இது லாபகரமாகக் கூட இருக்கலாம்!

இன்னும் பல விளைவுகளை எதிர்பார்த்துத் தான் இப்படிச் செய்திருப்பார்கள் என்று வேதனையுடன் வீட்டில் தனது மாடி அறையில் தனித்து உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தான் தங்கப்பன். வெளியே தலைகாட்டவே அவனுக்குப் பிடிக்கவில்லை. அன்று பன்னிரண்டு வயதுச் சிறுவனைப் பார்த்து ஊர் சிரிக்க வைத்தவர் இன்று இருபத்தி நாலு வயது இளைஞனைப் பார்த்து ஊர் சிரிக்க வைத்துவிட்டார் என்று தோன்றியது அவனுக்கு. தெருவில் நடந்தால், போவோர் வருவோரெல்லாம் தன்னைச் சுட்டிக் காட்டிச் சிரிப்பது போல் ஒரு பிரமை உண்டாயிற்று.

நாடக பாணியில் திடுமெனத் தினதயாளுவின் வெற்றி பற்றிய செய்தி, அதிலும் அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி வெளியானதும் மக்களுக்குத் திகைப்பும், அவரிடம் மதிப்பும் உருவானது இயல்புதானே? கடந்த சில வாரங்களாக வெகு துரிதமாகப் பரவி வந்த தங்கப்பனின் புகழ் மாறி, மங்கவும் அதுவே வழிசெய்துவிடுமல்லவா? தங்கப்பனை எதிர்த்த ஆராவமுதனும் தினதயாளுவை நேற்றுவரை எதிர்த்து நின்ற ராமபத்திரனும் இருந்தபோதிலும் உண்மையில் இந்தப் போட்டி நடப்பது தங்கப்பனுக்கும் தினதயாளுவுக்கும் இடையில்தான் என்று மக்கள் உணர்ந்திருந்தார்கள். அவ்விதமிருக்க இப்போது தன்னுடைய சகா பணம் பெற்றுக் கொண்டு பின்வாங்கினார் என்பது ஊர் அறிந்த ரகசியமான பிறகு ஜனங்கள் தன்னைக் காண நேர்ந்தபோதெல்லாம் எள்ளி நகையாடுவதில் வியப்பென்ன?

நாட்கள் சென்றன. தேர்தலும் நடந்து முடிந்துவிட்டது. ஓட்டுக்களை எண்ணிக் கொண்டிருந்தார்கள். முடிவைத் தெரிந்து வரச் சென்றிருந்தார் மாருதி. அவர் இன்னமும் நம்பிக்கை இழக்கவில்லை. ''மக்களிடம் எனக்கு என்றுமே மதிப்பு உண்டு'' என்று அவர், தன்னைத் தானே தண்டித்துக்கொண்டு சிறைவாசம் அனுபவிப்பது போல் தன் அறையில் அடைந்து கிடந்த தங்கப்பனைப் பார்த்துச் சொல்லியிருந்தார். ''அவர்களுடைய அறிவை, திறமையைக் குறைவாக எண்ணிவிடாதே; தைரியமாக இருக்க வேண்டும் நீ'' என்று கூறிச் சென்றிருந்தார்.


தங்கப்பனுக்கும் இருள் கப்பியிருந்த மனத்தின் ஒரு மூலையில் நம்பிக்கை ஒளி மின்னவாரம்பித்தது. மாருதி திரும்பி வரும் நேரமாகிவிட்டது. தங்கப்பனிடம் ஆர்வம் உருவாயிற்று. நிமிஷத்துக்கு நிமிஷம் வளர்ந்தது. மாருதி மாடிப் படிகளில் நிதானமாக ஏறிவரும் சப்தமும் அவனுக்குக் கேட்டது. காயங்கள் முழுமையாக ஆறாததால் அவரால் வேகமாக ஏறிவர முடியாதுதான். தன் ஆவலை வெளிப்படையாகக் காண்பித்துக் கொள்வது போல் எழுந்து போய் அவரை ''என்ன ஆயிற்று'' என்று கேட்கவும் ஏனோ தங்கப்பனுக்குத் தயக்கம். முடிவு வேறு விதமாக இருந்துவிட்டால்? இதயம் படபடவென்று அடித்துக்கொள்ள அவன் காத்திருந்தான்.

அறைக்கு வெளியே மாருதியின் காலடியோசை கேட்டது. இன்னும் ஓரடி அவர் எடுத்து வைத்தால் போதும், — வாழ்வா தாழ்வா என்பது தங்கப்பனுக்குப் புரிந்து போகும்.

(இரண்டாம் பாகம் முற்றிற்று)


what you can't see in
செஞ்சுரியின்
ஃபேஷன் துணிரகங்களை
தொட்டுப் பார்த்தால் தெரியலாம் அவைகள் அணிய எவ்வளவு சுகமளிப்பவை என்று.
தி செஞ்சுரி ஸ்பின்னிங் & மானு. கோ. லிட்., பம்பாய்-1

ரகசியம் பரம ரகசியம்!



ராஜேந்திர குமார்

ஹஹ் ஹா....

கல கல கல....

விழுந்து எழுந்து சிரித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

''போங்க!'' கண்ணில் ததும்பிவிட்ட கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டாள் சாந்தா. ''வயிறே வலித்துவிட்டது. சிரிப்பு மூட்டாதீங்க.''

''அது சரி, ஏன் கண்ணைத் துடைக்கறே? மானேஜர் பார்த்தால் நான்தான் உன்னை அழவிட்டேனுக்கும் என்று நினைப்பார்.'' ஜானி கேட்டான்: ''நிஜமாச் சொல்லு. அழறியா?''

அப்பாவி போல் கண்ணை நிமிர்த்திப் பார்க்கும் அவனைக் கண்டதும் சாந்தாவுக்கு மீண்டும் சிரிப்பு வந்துவிட்டது. கொல்லென்று சிரித்து விட்டாள். மானேஜர் சுகவனத்தின் தலை கதவுக்கு அப்பாலிருந்து எட்டிப் பார்த்ததும் கப்பென்று அடங்கிப் போனார்கள். சாந்தா சட்டென்று திரும்பி அவசரம் அவசரமாக உருளையில் பேப்பரைத் திணித்து டைப் அடிக்க ஆரம்பித்தாள். அவள் ஆபீஸில் சேர்ந்து இரண்டு மாதங்கள் தான் ஆகின்றன. ஆனாலும் ஜானியின் கோமாளித்தனம் அவளுக்கு என்னவோ பிடித்துப் போயிருந்தது. அவளுக்குச் சிரிப்பு அதிகம். ஜானிக்கு ஹாஸ்யம் அதிகம். ஆனால் அவர்களுக்கு வந்து வாய்த்திருக்கும் மானேஜருக்கோ சிரிக்கவே தெரியாது.

அவர் முறைப்புடன் அறையை விட்டு வெளியே வந்ததும் சாந்தாவின் விரல்கள் மட்டுமின்றி, ஜானியின் விரல்களும் டைப்ரைட்டர் இல்லாமலே டைப் அடிக்க ஆரம்பித்தன. படுக்கை மாதிரியிருந்த ஒரு பெரிய லெட்ஜரை எடுத்துப் பரபரப்புடன் துழாவ ஆரம்பித்தான் அவன்.

இடுப்பில் கைவைத்து அவர்கள் சரியாக வேலை செய்கிறார்களா என்பதைக் கொஞ்ச நேரம் பார்த்து முறைத்துவிட்டுத் தம் அறைக்குத் திரும்பினார் மானேஜர்.

''மிஸ்டர் ஜானி! ஏன் முகம் என்னவோ போல் இருக்கிறது?'' என்று கேட்டாள் சாந்தா.

''என் முகத்தை நீ ஏன் பார்க்கிறாயாம்?'' இடுப்பிலே கையை வைத்து முறைத்தான் ஜானி. சிவந்த அவன் மார்பில் பனியனுக்குள் புதைந்துகொண்ட கறுப்புக் கயிறு தெரிந்தது. 'சிலுவை' போலிருக்கிறது. ''மைண்ட் யுவர் ஓன் பிஸினெஸ்!''

"அடேயப்பா! ரொம்பக் கோவம் போலிருக்கு!"

"இல்லே! சிரிக்கிறேன்" என்றவன், "யாரடா அவன்! இங்க் புட்டி கொண்டுவா" என்று தனது பேனாவின் கழுத்தைத் திருகிய வாறு அவளைப் பார்த்தான் கடுகடுப்புடன்.

"எங்கப்பா!" என்பதுபோல, தன் கழுத்தைப் போலியாகத் தடவிக்கொண்டாள் சாந்தா. அடுத்த நிமிஷம்....

சிரிப்பு வந்துவிடும் போலிருந்தது அந்த ஜானிக்கு. பேசாமல் எழுந்து போய்விட்டான். அவனது கோபத்துக்குக் காரணம் நேற்று நடந்த நிகழ்ச்சி. ஒவ்வொரு நாளும் ஆபீஸ் விட்டதும் சமர்த்தாக நடந்துபோய் பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருப்பாள் அந்தச் சாந்தா. அவள் பின்னாலே, அந்தக் கம்பளிப் பூச்சி மீசை நரசிம்மன் ஒரு ஸ்கூட்டருடன் வருவான். இவளும் பின்னால் தொத்திக்கொண்டு போவாள். ஆபீஸிலிருக்கும் போதுமட்டும் அந்தக் கம்பளிப் பூச்சியிடம் பேசமாட்டாள். ஆனால் ஸ்கூட்டரில் போகும் போது ஆஹா! என்ன சிரிப்பு! என்ன இளிப்பு!

"ஜானி!"

பைல் மலைக்கு மத்தியிலிருந்து எட்டிப் பார்த்தான் ஜானி.

'கம்பளிப் பூச்சி மீசை' நரசிம்மன் நின்று கொண்டிருந்தான். வில்லனைப் பார்த்த சினிமா ஹீரோவைப் போல அலட்சியமாகத் திரும்பி மீண்டும் 'பைல்' மலைக்குள் அமிழ்ந்தான்.

"ஜானி!" கம்பளிப் பூச்சி மறுபடியும் அழைத்தது. "ஒரு சின்ன 'பேவர்!'"

"சொல்லித் தொலை. எனக்கு ரொம்ப வேலை இருக்கிறது."

"என்னையும், சாந்தாவையும் ஒன்றாகப் பார்த்ததை மறந்தும்கூட ஆபீஸில் சொல்லி விடாதே."

"எனக்கு ஆபீஸ் வேலையே தலைக்கு மேல் இருக்கிறது.. இந்தக் கன்னராவியையெல்லாம் 'பிராபகண்டா' பண்ணுவதுதான் என்னுடைய வேலையா? போ...போ..!" என்று சிடுசிடுத்தான் ஜானி.

"கோபமா யிருக்கிறாப்போலிருக்கு. நான் அப்பறமா வரேன்." கம்பளிப்பூச்சி மீசை நகர்ந்தது.

தும்பனுக்குப் பெயர் போன அண்ணாப் பிள்ளைத் தெருவிலே நெளிந்து வளைந்து போய்க் கொண்டிருந்தது அந்த ஸ்கூட்டர்.

"முதுகைப் பிடித்துக்கொள். விழுந்து வைக்கப் போகிறாய்" என்ற கம்பளிப்பூச்சி மீசை நரசிம்மன் கேட்டான்: "ஆமாம்! இந்த ஜானி ஏன் ஒரு மாதிரியாக இருக்கான்?"

"என்னைக் கேட்டால்?" — வெடுக்கென்று கேட்டாள் சாந்தா.

"உன்னோடு சிரிக்கச் சிரிக்கப் பேசிப் பழகுவானே என்பதனால் கேட்டேன்."

"சிரிச்சால்... அவனது உள் மனசுவரைக்கும் தெரிந்து வைத்திருப்பேனென்று அர்த்தமா என்ன?"

"தெரிந்து வைத்துக் கொண்டால் என்னவாம்? அதிலென்ன தப்பு? ஏய்! உண்மையைச் சொல்லு! காதல் ஏதாவது உண்டா? இருந்தால் என்னிடம் சொல்லிவிடு" என்றான் நரசிம்மன்.

"காதலாவது கத்தரிக்காயாவது! அதெல்லாம் ஒன்றும் கிடையாது. வழியைப் பார்த்து ஓட்டுங்க. எருமை மாட்டில் மோதி விழப் போறீங்க" என்றவள் நீண்ட பெருமூச்சு ஒன்றை வெளியேற்றினாள்.

"பெருமூச்சு விடுகிறாயா? அம்மாவிடம் சொல்லுகிறேன்."

"சேச்சே! எனக்கும் அந்தக் கிறிஸ்துவருக்கும் என்னத்தை முடிச்சுப் போட்டுப் பேசுறீங்க?" என்று அவள் அதட்டல் போட்டாளே ஒழிய அவள் மனம் மட்டும், "பாழும் மனிதரே, ஜானி! நீயிர் ஏன் ஒரு ஹிந்துவாக அவதரித்து இருக்கலாகாது? உங்கள் வாளிப்பான உடலும், கவர்ச்சி முகமும் என்னைப் பெருமூச்சாக விட்டு ஏங்க வைக்கின்றனவே!" என்று புலம்பியது.

"என்னப்பா?"

அக்கௌண்டெண்ட் சொன்னார்: "பங்க வாளிடியே கிடையாதப்பா நம்ம பசங்களுக்கு. சொன்னால் சொன்ன நேரத்துக்கு வந்து தொலைப்பதில்லே."

அன்று சனிக்கிழமை. விடுமுறையாகவுமிருக்கவே, திருப்பதிக்கு பிக்னிக் போய் வருவது என்று கிளம்பினார்கள்.

ஹைதர் காலத்துத் தகர டப்பா கரி பஸ் ஒன்று விழித்தவாறு நின்றிருந்தது.

காலை ஆறு மணிக்குப் புறப்படுவதாக ஏற்பாடு. மணி ஆறரை. வரவேண்டியவர்களில் சிலர் இன்னும் வந்து சேர்ந்தபாடில்லே.

"டேய் ஜானி, நீதான் ஸ்கூட்டர் வைத்திருக்கிறாயே! ஒரு ரவுண்ட் போய் வாயேன்" என்று அக்கௌண்டண்ட் கூறியபோது, உற்சாகமாகக் கைக்கு மசாஜ் ஏற்றிக்கொண்டு புறப்பட்டு ஸ்கூட்டரில் அமர்ந்து லிஸ்டில் வரவேண்டியவர்கள் பெயர்களைப் பார்த்தவன், "ஓ! நோ, நோ!" என்று இறங்கிப் போய் பஸ்ஸில் ஏறிக் கல்போல் அமர்ந்து கொண்டுவிட்டான். காரணம், பட்டியலில் சாந்தா, கம்பளிப் பூச்சியின் பெயரும் ஒட்டிக் கொண்டிருந்ததுதான். "அவர்கள் வாசலை மிதிப்பதாவது? ஹூம்!"

"அப்பா... ஸ்வாமி!... அய்யா சாமி" என்று அவனது தாவாங்கட்டையைப் பிடித்துக் கெஞ்சி ஸ்கூட்டரில் அமர்த்திவிட்டதோடு, தள்ளிக் கிளம்பவும் உதவினார்கள்.

"மிஸ் சாந்தாதேவி அவர்கள் இருக்கிறார்களா?"

பல்லைக் கடித்து அழுத்தம் திருத்தமாக ஜானி கேட்பதைக் கண்டு, கைக்கொன்றாக பேப்பரும் காப்பி டபராவுமாக நின்றுகொண்டிருந்த அந்தப் பருத்த மனிதர் கொஞ்ச நேரம் 'வெ' என்று விழித்தார். பிறகு, "பக்கத்துத் தெருவில், அதாவது ஞானசிவம் கிராமணித் தெரு ஏழாம் நம்பர் வீட்டில் இருக்கிறான்" என்று அவசர அவசரமாகத் தகவல் கொடுத்துவிட்டு அவனை அனுப்பி வைத்ததோடு, அவன் ஸ்கூட்டரையும் தள்ளிவிட்டு உதவினார்.

''ஞான சிவம் இராமணி தெருவா?'' ஸ்கூட்டரில் போகும்போது யோசித்தான் ஜானி. ''அங்கே இன்னொரு கடன்காரனும் எவனோ இருக்கிறானே!'' என்று நினைத்தவன், ஓடும் ஸ்கூட்டரிலேயே லிஸ்டைப் பிரித்துப் பார்த்தான். பார்த்தவன், ''ஹை....ய்...'' என்று குழற, ஸ்கூட்டர் முப்பத்தி ஏழேகால் வளைவு வளைந்து பின் நின்றுவிட்டது.

நரஸிம்மன், பி.ஏ., 7, ஞானசிவம் இராமணி தெரு.

''ஆ... ஓ ...'' என்று பல்லைக் கடித்தான். ''தனிக் குடித்தனமே நடத்தும் அளவுக்கு ஆகிவிட்டதா?'' அவனுக்கு அழுகையே வரும் போலாகி விட்டது.

ஸ்கூட்டர் தள்ள யாராவது கிடைப்பார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தான். தெருவில் நடமாட்டமே கிடையாது. சற்றுத் தொலைவில் ஒரே ஒரு மாமி வந்து கொண்டிருந்தாள். சே! சே! அவளையா போய் ஸ்கூட்டரைத் தள்ளிவிடச் சொல்வதென்று அவன் தயங்கினான்.

''தள்ளிவிடணுமா? பேஷா!'' என்ற இனிய குரலைக் கேட்டு கண்ணைக் கொட்டிக் கொட்டி வியந்தான். மாமிதான்...

உரிமையுடன் கைப் பைகளை எடுத்து ஸ்கூட்டரின் காரியர் ஹூக்கில் கூடையில் வைத்து விட்டு, ''என் பிள்ளையாண்டான் வண்டியைத் தள்ளித் தள்ளி நல்ல அனுபவம் உண்டு'' என்று வரிந்து கட்டிக்கொண்டு தள்ள, ஒரே 'தம்'மில் ஸ்கூட்டர் புறப்பட்டு விட்டது!

''ரொம்ப நன்றி மாமி!'' என்று கூறி வண்டியைக் கிளப்பப் போக...

''அடே கடன்காரா! அட கட்டால போறவனே!'' மூச்சு இரைக்கத் துரத்தி வந்தாள் மாமி. ''என் பைகளை அபேஸ் பண்ணறியா? நீ நாசமாப் போக!''

ஜானி பைகளை எடுத்து நீட்டினான்.

''ஏண்டா... இந்தண்டைப் பக்கமாத் தானே போறே! என்னையும் எங்க விட்டி லேயே கொண்டு போய் விட்டுட்டுப் போகப் படாதா? மூச்சு இரைக்கிறதே எனக்கு?''

சுற்று முற்றும் பார்த்தான். பிறகு பின் டயர் காற்றைக் கவலையுடன் அமுக்கிப் பார்த்தான். பிறகு ''ஏறுங்கள்'' என்றான் முனகலுடன். ''வீடு எங்கே?''

''பக்கத்துத் தெருவுக்குப் போ'' என்றாள். மாமிக்கு டாக்ஸி டிரைவரிடம் பேசி வழக்கம். ''ரைட்டிலே திரும்பு.''

திரும்பும்போது கவனித்தான். ''ஞான சிவம் இராமணி தெரு! அட, நானும் இதே தெருவுக்குத்தான் வந்தேன்.''

''அப்படியா?'' என்று மாமி வியந்தாள். ''யாரைப் பார்க்க?''

''ஒரு கடன்காரப் பாவியைப் பார்க்க...'' என்றான் ஜானி காட்டமாக.

''அதோ! அந்தப் பச்சைக் கம்பி போட்ட வீடு'' என்று மாமி அடையாளம் காட்டிய வீட்டை அடைந்ததும் வியந்து போனான். ''ஏழாம் நம்பரா!''

''ஆமாம்! எங்க வீட்டு நம்பர் ஏழுதான்! எதுக்கு? என்மகன்தான் உன் கடன்காரனா?''

''உங்க மகன்தான் நரசிம்மனா?''

''ஆமாம். ஏன்?''

''அப்போ... சாந்தா?''

''என் மகள்தான். ஏண்டாப்பா! அவர்களை உனக்குத் தெரியுமா?''

''எங்க ஆபீஸிலேதான் ரெண்டு பேரும் வேலையிலே இருக்காங்க.''

''அப்படியா!'' என்று அசட்டையாகக் கூறி நடந்த மாமி விசுக்கென்று திரும்பி ஓடி வந்தாள். 'அடிப் பாவி புரோகுளும்! என்ன காரியம் பண்ணிட்டாயடி!' என்று தன்னைத் தானே நொந்துகொண்டாள். ''அடேய், கண்ணா! நீ என் வாயிலேருந்து உண்மையைப் பிடுங்கிட்டே! உங்க ஆபீஸிலே உறவு முறைக்காரா ஒண்ணுக வேலை பார்க்கக்கூடா துன்னு சட்டமாமே! அதனாலே அவா யாரோ யாரோங்கற மாதிரி வேறே விலாசத்தைக் கொடுத்து வேலையிலே சேர்ந்திருக்கா... அண்ணன் தங்கைன்னு தெரிஞ்சா பட்டுன்னு வேலை போயிடும். வேலை கிடைக்கணுமேங்கற கஷ்டத்திலே பொய்யைச் சொல்லிட்டா. நீ ஏதும் ஏறுமாறாச் செஞ்சிடாதேடா ராஜா!'' என்று கெஞ்சு கெஞ்சு என்று அந்த அம்மாள் அவனிடம் கெஞ்சினாள்.

ஆகாசத்திலே பறப்பது போலிருந்தது ஜானிக்கு. அதனால்தானா ஆபீஸில் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் வெளியே வந்த பிறகு அவர்கள் சந்திக்கிறார்கள்!

மாமிக்கு ஆறுதல் கூறிவிட்டுப் புறப்பட்டான் ஜானி. கம்பனிப் பூச்சி அண்ணாவும்,

ஜில் ஜில் தங்கையும் வழக்கம் போல் ஏற்கனவே புறப்பட்டுப் போயிருந்தார்கள்.

சளசளவென்று சாந்தாவிடம் அரட்டையடித்துக் கொண்டிருந்தான் ஜானி. வழக்கத்துக்கு மாறாக அவன் கலகலப்பாக இருப்பதை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள் சாந்தா. 'என்ன திடீர் குஷி பிறந்துவிட்டது இவருக்கு!' என்று எண்ணி வியந்து கொண்டிருந்தாள். திருப்பதியாம் புண்ணிய ஸ்தலத்தில் தனி காட்டேஜ் ஒன்றின் வெளிப் பலகணி கவரில் அமர்ந்தவாறு பெருமூச்சு விட்டாள் சாந்தா.

''மிஸ்டர் ஜானி!'' திரும்பி, சாய்வு நாற்காலியில் அமர்ந்து, தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் ஜானியைக் கேட்டாள். ''நேற்று மாதா கோயிலுக்குப் போகப் போறேன் என்றீர்களே! போனீர்களா?''

''போய் வந்துவிட்டேனே! சர்ச்சுக்குத் தானே! ஓ, எஸ்! போய் வந்துவிட்டேன்'' என்றான் பூரிப்புடன். அவன் பயணம் தொடங்கிய பின் பேசும் முதல் பேச்சல்லவா இது! தேனாக இனித்தது. ''ஏன்?''

''ம்...ம்ஹூம்!'' மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டாள் சாந்தா. ''சமூகம் முன்னேறிவிட்டது என்கிறீர்களே, நான் நம்ப மாட்டேன். ஓர் ஐயங்கார் வீட்டுப் பெண் ஒரு கிறிஸ்துவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள என்று அனுமதிக்கிறதோ அன்றைக்குத்தான் நான் ஒப்புக்கொள்வேன்.''

''சே...சே...சே. என்ன கன்றாவி இது?'' என்று அவன் அதட்டியதும், அவள் மார்பில் இரட்டைப் பின்னலைப் பின்னுக்குத் தள்ளி விட்டு நிமிர்ந்தே விட்டாள். ''மதம் மாறி ஏன் கல்யாணம் பண்ணிக்கணும்! அந்தந்த மதத்தில் பெண்களுக்கு ஆண்கள் கிடைக்க மாட்டார்களா? ஆண்களுக்குப் பெண்தான் கிடைக்க மாட்டாளா? எதற்கு இந்த மதத்துக்கு மதம் தாவும் வீண் குழப்பம்? சரி! உதாரணத்துக்கு உன்னையே எடுத்துக்கொள்! நீ எதற்காகக் கிறிஸ்துவனைத் தேடணும்? இந்துக்களிலே ஆண்கள் இல்லையா? அழகர்கள் இல்லையா? வாலிபர்களுக்குத்தான் பஞ்சமா?'' மடமடவென்று சொற்பெருக்காற்றி விட்டுக் கோபமாக உள்ளே போய்விட்டான் ஜானி.

'ப்பூ!' என்றால் கீழே விழுமளவுக்கு வியப்பு சாந்தாவுக்கு. ''என்ன மனிதர் இவர்! என் உள்ளத்தைப் புரிந்து கொள்ளத் தெரியாமல்!'' என்று நினைத்தவள் பழைய பல்லவியை, 'ஓ, பாழும் மனிதரே! ஜானி'' என்று ஆரம்பித்து, ''நீவிர் ஏன் கிறிஸ்துவராக அவதரித்தீர்! ஓர் இந்துவாகப் பிறந்திருக்கலாகாதா?'' என்று வருந்தினாள்.

நாலரை மணிக்கு சுப்ரபாத பாராயணம். மூன்றரை மணிக்கே எழுந்து குளத்தில் குளிக்க வந்து விட்டார்கள். கரையிற் படிக்கட்டில் அமர்ந்து ஜில்லிட்ட மேனியைத் துடைத்துக் கொண்டிருந்த சாந்தாவின் கண்கள் வியப்பால் விரிந்தன. 'அடப் பாவி மனுஷா! என்ன தைரியமாய்க் குளத்தில் நீந்துகிறார். வைதீகர்கள் யாராவது பார்த்து விட்டால்...?' பயத்துடன் அவள் விழிக்க... விழிக்க...குளத்தில் நீச்சலடித்துக் கொண்டிருந்தான் ஜானி!

''நீ ஜானி குழுவோடு போ!'' என்று அக்கௌன்டென்ட் கூறியபோது விழித்தாள் சாந்தா. 'ஜானி கோவிலுக்குள்ளேயுமா வருகிறார்?' பரபரப்புடன் சரவேட்டியும், டவல் மூடிய மார்புமாக வந்த ஜானியை நிறுத்திக் கேட்டாள் ரகசியமாக. ''பிற மதத்தாரை இந்தக் கோவிலில் அனுமதிப்பார்களா ?''

''நோ....நோ.... ஸ்ட்ரிக்ட் ஆர்டர். அப்படி யாரும் வரக் கூடாது'' என்றவன், ''ஏன்! யார் போகிறார்கள் ?'' என்று வேடிக்கை பார்க்கும் ஆவலுடன் சுற்று முற்றும் பார்த்தான். ''யாருமில்லையே !''

''நீங்களும் வருகிறீர்களா உள்ளே !''

''வராமல்...!'' தனது நெற்றி நாமத்தைச் சுட்டிக்காட்டினான். ''வரக் கூடாது என்பதற்காகவா, நாலணா கொடுத்து இதைப் போட்டுக் கொண்டேன். வா...சுப்ர தீபம் ஆரம்பமாகி விடும்'' என்று நடந்தான்.

''ஐயோ!'' தலையில் அடித்துக் கொண்டு பின்தொடர்ந்தாள் சாந்தா. ''சுப்ர தீபமில்லை. சுப்ரபாதம்! பெயரையாவது ஒழுங்காகச் சொல்லுங்கள்.''

அர்ச்சகர்கள் சேர்ந்து கட்டைக் குரல் முதல், இனிமைக் குரல் உள்பட, கீச்சுக் குரல் வரை அனைவரும் சுப்ரபாதம் பாடிக் கொண்டிருந்தனர். அர்ச்சகர்கள் ஒவ்வொரு தடவை 'சுப்ர பாதம்' என்று முடிக்கும் போதும், ஜானி கண்ணை மூடியபடி 'சுப்ர பாதத்'தை வாய்க்குள் முணுமுணுப்பதைக் கவனித்த சாந்தா வியந்து போனாள். அனுபிசகாமல் சொல்லுகிறாரே! வரி தவறாமல் பாடம் பண்ணுவது என்பது ஒரு கிறிஸ்தவருக்குக் கைவரக் கூடிய காரியமா?

''நீங்கள் கிறிஸ்துவரில்லையா ?''

மண்டபத்தில் அமர்ந்து, தேவஸ்தானத்துப் பெரிய சைஸ் லட்டு உருண்டையை உடைக்க முயன்ற ஜானியை உலுக்கிற்று சாந்தா கேட்ட கேள்வி. ''நான்சென்ஸ்! யார் சொன்னது நான் கிறிஸ்தவனென்று?''

''பின்னே அடிக்கடி சர்ச்சுக்குப் போகிறீர்களே!'' வியப்பினால் அவள் செப்பு வாய் இலேசாகப் பிரிந்தே நின்றது.

''சர்ச்சுக்குப் போகிறவர்கள் எல்லாரும் கிறிஸ்துவர்களா? என் நண்பன் ராட்ரிகோவைச் சந்திக்கப் போவேன்.''

''பின்னே கழுத்திலே கிராஸ் கட்டிக் கொண்டிருக்கிறீர்களே ?''

''அது சரி!'' கழுத்துக் கயிற்றை இழுத்துக் காட்டினான் ஜானி. ''சிலுவையா இது?''

''அடே! சாயிபாபா டாலர்!'' என்ற சாந்தா கேட்டாள். ''அப்ப நீங்க....''

''எந்த கிறிஸ்தவனாவது ஜானகிராமன்னு பெயர் வைத்துக் கொள்வதுண்டா! அசடு! இந்தா !'' என்று லட்டுத் துகளைத் திரட்டி எடுத்துத் தந்தான். ''பிரசாதம்!''

''ஜானி என்றால் அதுவா அர்த்தம்?'' என்று நினைத்துக் கொண்ட சாந்தாவுக்கு, அவன் தந்த லட்டுத் துகள் இனிப்பாய் இனித்தது.


மக்ளீன்ஸ் பற்பசையின் புதிய புல்லரிக்கும்
ருசியே சொல்லும் உங்களுக்கு,
அது செயலாற்றுகிறதென்று!
சுத்தமாக்க
-உங்கள் பற்களிலிருந்து அந்த மங்கிய மஞ்சள் திரையைப் போக்குகிறது
வெண்மையாக்க
-அவைகளுக்கு அந்த அதிகமான வெண்மையைத் தருகிறது
காக்க
-சொத்தைக்குக் காரணமான கிருமிகளை நீக்கி உங்கள் வாயைப் புத்துணர்ச்சியுடன் சுத்தமாக வைக்கிறது.
Macleans
tooth paste
மக்ளீன்ஸ்–அதிவெண்மையான பற்களுக்கு

ஏழைகள் பாக்கியசாலிகள்



ஜடாதரன்

மாடிப் படிகளில் காலடியோசை கேட்டது. யாரென்று திரும்பிப்பார்க்கு முன்னரே குரல் கணீரென்று வெண்கலமாய் ஒலித்தது. ''விருந்தாளி வந்திருக்கேன் !''

திரும்பினேன். மாமாவின் கம்பீரமான உருவம் என்னைப் பெரிய சிரிப்புடன் எதிர்கொண்டது. கையில் படுக்கையுடன் மாமா காட்சியளித்தார்.

மாமாவின் அக்காள் பேரன் என் வீட்டுக்கு எதிரே புதிதாகக் குடியேறியிருந்தான். மாமாவும் மாமியும் அங்கேதான் வந்து இறங்கியிருக்கிறார்கள். எதிர் வீட்டில் நான் இருப்பதையறிந்ததும் என்னைத் தேடி வந்துவிட்டார் அவர்.

மாமாவை வரவேற்றேன். ''உங்களுக்கு இல்லாத இடமா?'' என்று பரந்த விண்வெளியுடன் இரவின் இருட்டில் ரகசியம் பேசிக் குலவும் மொட்டை மாடி வராந்தாவின் மூலையையும் அவருக்குத் தாற்காலிகமாக அளித்துக் கௌரவித்தேன்.

மங்களமும் மாமாவுக்கு முகமன் கூறினள். காற்றுக்காக வராந்தாவில் படுத்துறங்கும் என் குழந்தைகள் தூக்கத்தில் புரண்டு முனகின. ''எல்லாரும் உன் குழந்தைகள் தானேப்பா? எத்தனை குழந்தைகள்?''

சொன்னேன்.

''பெரிய சம்சாரி ஆயிட்டே.....!'' என்று கூறி நெடுமூச்செறிந்தார்.

சற்று நேர மௌனத்துக்குப் பின் மாமா, நான் அவரைக் கடைசியாகப் பார்த்ததற்குப் பின் நிகழ்ந்தவற்றை யெல்லாம் அவருக்கே உரிய பாணியில் விவரித்துவிட்டு மாமா கண்ணயர்ந்து விட்டார். ரயிலில் வந்த அலுப்பு !

வானம் நட்சத்திரங்களின் ஜ்வலிப்பில் தன் வயமிழந்து கிடந்தது. காற்று பலமாக வீசியது. ஊரடங்கி விட்டது. மாமாவின் இலேசான குறட்டையொலி, அருகேயுள்ள ரயில் பாதைகளில் இரவென்றும் பாராமல் ஓடும் கூட்ஸ் வண்டிகளின் கடகடப்பு, நாய்களின் குரைப்புச் சத்தம்—இவையெல்லாம் அவ்வப்போது இரவின் மோனத்துக்குச் சுருதி கூட்டின! தூரத்தே தெரியும் 'வியாசநகர்' காலனியின் குடியிருப்புகளின் மெர்க்குரி விளக்குகளின் ஒளி கண்களைக் கவ்வியது. ஆயினும் தூக்கம் கருணை காட்டவில்லை. மாமாவைப் பற்றிய பலத்த சிந்தனைகளில் ஈடுபட்டேன்.

மாமாவின் பிள்ளை ரகுவும் நானும் மாயூரத்தில் ஒன்றாகப் படித்தவர்கள்.



அந்தக் காலத்தில் அவன் புத்திசாலி. வகுப்புகளில் எல்லாம் அவன்தான் முதல் பையன். எல்லாப் பரிசுகளும் வாங்குவான். நான் அவனுடன் இணக்கமாக இருந்தாலும் எனக்குப் படிப்பில் அக்கறை இல்லை. வேடிக்கை வேடிக்கையாக எப்பொழுதும் ஏதாவது பேசிக்கொண்டே பொழுதைப் போக்குவேன். அவன் அப்பாவையும், அம்மாவையும், மாமா மாமி ஆக்கிக்கொண்டு அந்த நட்பில் பெருமிதம் கொண்டேன். மாமா மிகவும் கண்டிப்புக்காரர். யாரையும் அவ்வளவு இலகுவில் தம் பிள்ளையுடன் சேர விடமாட்டார். ஆயினும் நான் இதற்கு விதிவிலக்கு. மாமியும் அப்படியே. அவர்கள் வீடு கப்பலைப் போலப் பெரியது. லக்ஷ்மிகரம் தாண்டவமாடும். கூடத்து ஊஞ்சலும், பின்கட்டுத் தோட்டமும் விஷமத்துக்கு என்னை 'வா, வா' என்று அழைக்கும். அங்கேயே பழியாய்க் கிடப்பேன்.

மாமி பெரிய ஈயக் கற்சட்டியில் தயிர் சாதத்தைப் பிசைந்து எங்களுக்குப் போடுவாள். மாமிக்கு வஞ்சனை தெரியாது. தயிரின் வெண்ணெய் மணம் என்னை மயக்கும். தயிர்சாதத்தை ஆவலுடன் உறிஞ்சிச் சாப்பிடும் என் தோற்றத்தைக் கண்களில் மிளிரும் ஒரு தாயின் பெருமித நோக்குடன் பார்த்து ரசிப்பாள்.

பாகவதக் கதைகளில் வருணிக்கப்படும் யசோதையின் தோற்றத்துக்குக் கொஞ்சமும் ஈடு குறைந்தவளில்லை மாமி. நல்ல பணக்காரக் குடும்பம். மேனி முழுதும் தங்க நகைகள் மிளிரும். காதுகளிலும், மூக்கிலும் வைரம் சுடர்விடும். எலுமிச்சைச் சிவப்பு மாமி. வர்ணப் படங்களில் அம்பிகையைப் பார்ப்பதுபோல் இருக்கும்.


ரகு மாத்திரமென்ன? அம்மாவுக்குப் பிள்ளையே அவன். திருச்சி கல்லூரியில் சேரும் வரை கட்டுக் குடுமி. எண்ணெய்க் குளியலின் போது மாமி அவனிடம் மல்லுக்கு நிற்பாள். நான் மத்தியஸ்தம். யசோதையின் கிருஷ்ணன் தான் ரகு. எல்லோரும் கிருஷ்ணாவதாரம் எடுத்துவிட முடியுமா? கண்ணனைப் போன்ற ஒரு பையனுக்குத் தோழனாகப் பரிணமிக்கும் பாக்கியம் எவ்விதத்தில் குறைவு?

ஹைஸ்கூல் படிப்பை முடித்துக் கொண்டு குமாஸ்தா உத்தியோகத்துக்குப் பட்டணம் சேர்ந்து விட்டேன். எத்தனையோ ஏழைகளைப் போல் நானும் கல்யாணம் செய்து கொண்டேன். எல்லா ஏழைகளையும் போலக் குழந்தைகளையும் அடைந்து சம்சாரி ஆகிவிட்டேன். ஆயினும் எண்ணங்களில் அல்லவா வாழ்வு மலருகிறது! மனசு கலங்கவில்லை. மனத்தை இழக்காத வரையில் நாம் எதையுமே இழப்பதில்லை என்ற சிறந்த வாக்கியத்தை நான் மறந்தவனல்ல.

ரகுவோடும் அவன் பெற்றோரோடும் உள்ள தொடர்பு துண்டித்தே போயிற்று. ரகு எல்லோரும் எதிர்பார்த்தபடியே நன்கு படித்துப் பெரிய உத்தியோகஸ்தன் ஆனான். முதலில் பி. எஸ்ஸி. தேறினான். பின்னர் பி. ஈ. படிப்பு. இப்பொழுது அவன் சாதாரண ரகு இல்லை. மிஸ்டர் ரகுநாதன் பி. எஸ்ஸி., பி. ஈ. ரயில்வே இலாகாவில் என்ஜினீயராகப் பதவி ஏற்றான்.

அவன் கல்யாணத்தின்போது மாத்திரம் எப்படியோ என் விலாசத்தைக் கண்டு பிடித்து நேரில் அன்புடன் அழைத்தார்கள். அவர்கள் அந்தஸ்துக்கேற்ற பெரிய இடத்துப் பெண். சென்னையில் நடந்த கல்யாணத்துக்கு உறவினர்கள் பல பேர்கள் பம்பாயிலிருந்தும், டெல்லியிலிருந்தும் விமானம் மூலமாகவே வந்து விமரிசை செய்தனர்.

வாண வேடிக்கைகளும், பாண்டு முழக்கங்களும், நாதசுர இசைக் கோலங்களும் ஒரு கந்தர்வ உலகத்தையே கண் முன் சித்திரித்துக் களிப்பூட்டின. கல்யாணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பது எவ்வளவு நிஜமோ எனக்குத் தெரி



யாது. ஆனால் சில கல்யாணங்கள் சொர்க்கத்தில்தான் நடைபெறுகின்றன என்று சத்தியமாகச் சொல்லுவேன். என் மனைவி மங்களத்தை மாத்திரம் கல்யாணத்துக்கு அழைத்துப் போக இயலவில்லை!

மாமாவும் மாமியும் ஓடி வந்து இந்தச் ''சுதாமா''வை வரவேற்றனர். ரகு நட்புரிமையுடன் என் எலும்புத் தோள்களைப் பற்றி உற்சாகமாக வரவேற்று மகிழ்ந்தான். ''எங்கேயடா அகமுடையாளை அழைத்து வராமல் நீ மாத்திரம், ஜோராக வந்து விட்டாய்?'' என்று கேலி செய்து அதட்டினார்கள். நான் விழித்தேன். நல்ல வேளையாக மேற்கொண்டு அவர்கள் துளைத்தெடுக்க வில்லை. இரண்டு நாட்களும் ராஜோபசாரம்தான். ஒரே சிரிப்பும் கும்மாளமுமாய் இதுவல்லவோ கல்யாணம் என்று நிமிடத்துக்கு நிமிடம் எண்ணங்களைச் சிலிர்க்க வைத்தது. விடைபெற்றுக் கொள்ளும் போது மாமி என் மனைவியையும் ஒரு குழந்தையாக்கி, ''இந்தா, குழந்தைகளுக்கு மறக்காமல் எடுத்துக் கொண்டு போ'' என்று வாத்ஸல்யத்துடன் ஒரு பெரிய பட்சணப் பொட்டலத்தை என் கைகளில் திணித்தாள்.

ரகுநாதன் இப்போது இரண்டாயிரம் சம்பளம் வாங்கும் பெரிய அதிகாரி. வடக்கே பெரிய நகரமொன்றில் உயர்ந்த பொறுப்பு. மாமாவும் மாமியும் பாரதத்தில் ஒரு க்ஷேத்திரம் பாக்கியில்லாமல் 'ஸ்வாமி தரிசனம்' செய்து விட்டார்கள்.

மாமாவுக்கு இயல்பாகவே தெய்வநம்பிக்கை அதிகம். அவர் நல்ல ரஸிகர். தமிழில் கவிகள் பாடுவார். ஸம்ஸ்கிருத ஞானத்துக்கும் குறைவில்லை. பற்பல க்ஷேத்திரங்களைத் தரிசனம் செய்ததினால் உண்டான மனப் பக்குவத்தில் மலர்ந்த கவிதை மலர்களை அவர் கேவலம் பிரசுர ஆசை கொண்டு எந்தப் பத்திரிகைக்கும் அனுப்பியதில்லை. அருணகிரிநாதர் இயற்றியுள்ள திருப்புகழ் மீது அவர் கொண்டுள்ள பக்தி பரவசத்தால், அவை மாதிரியே தாமும் பல பாடல்களைக் குமரன் மீது இயற்றிய 'ஸ்வாநுபூதி'யில் அவர் திளைப்பதுண்டு.

ரகுவுக்கு விவாகமாகிப் பத்து ஆண்டுகள் கடந்து விட்டன. அவன் மனைவிக்கு நான்கு முறை கருச் சிதைவு ஏற்பட்டுவிட்டது. மாமி கோவிலுக்கு நெய் விளக்குப் போட்டு நாட்டுப்பெண்ணின் சுகப் பிரசவத்துக்காகப் பிரார்த்தனை செய்யாத நாட்கள் இல்லை. அம்பிகை, மாமி ஏற்றி வைத்த நெய் விளக்கின் முத்துச் சுடரொளியில் முறுவலித்துக் கொண்டிருந்தாள்.

ஐந்தாம் முறையாக ரகுவின் மனைவி கர்ப்பமாகியிருந்தாளாம். 'இம்முறையாவது நல்லபடியாக ஆகவேண்டுமே பகவானே!' என்று மாமாவும் மாமியும் வேண்டிக் கொண்டு பொழுதைத் தள்ளுகையில் திடீரென்று ரகுவிடமிருந்து தந்தி வந்தது. 'மனோகரிக்கு உடல் நலம் சரியில்லை—உடனே புறப்படவும்.' அப்புறம் என்ன? புறப்பட்டு விட்டார்கள். பிரயாணத்தின் முதற் கட்டமாகச் சென்னை வந்து சேர்ந்து விட்டார்கள். பெரு மழை காரணமாக வடக்கே போக ரயில் இல்லை. பிரயாணம் தடைப்பட்டு அவர்கள் சென்னையில் தங்கும்படி ஆகிவிட்டது.

காலைப் பொழுது கண் மலர்ந்தது. காலைக் காற்று சுகமாக வீசியது. நீலவானம் ஆதவனின் வருகையை முன்னிட்டு 'மௌன அஞ்சலி' செய்து கொண்டிருந்தது. வடக்கே நெல்லூர்ப் பெரிய சாலையில் வண்டிப் போக்குவரத்துக்களின் சத்தம் கலகலப்பை உண்டு பண்ணியது.

இரவு வெகுநேரம் பேசிக் கொண்டிருந்ததால் மாமாவின் தூக்கம் இன்னமும் கலைய வில்லை. நாங்கள் எல்லோருமே அதிகாலையில் எழுந்துவிட்டோம். குழந்தைகள் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, 'காலைப் பிரார்த்தனை' சொல்ல முன் அறையில் தயாராக இருந்தனர்.

மாமா கண் விழித்து எழுந்ததும் 'பலே, பலே' என்று பாராட்டுக்கள் தெரிவித்தார். உடல் ஊட்டம் இல்லாத குழந்தைகள் மாமாவின் பாராட்டுதலில் ஊக்கம் பெற்றவர்களாய், அப்பா சொல்லிக் கொடுக்கிற இறைவன் பாட்டு என்றாவது ஒரு நாள் ஒரு புத்தம் புதிய வாழ்வை அவர்களுக்கு அளிக்கும் என்ற நம்பிக்கையில் கோரஸ் பாடிக்கொண்டிருந்தார்கள்.

சாவதானமாகக் குழந்தைகளை ஒரு முறை பார்த்துவிட்டுப் பல் துலக்கிவிட்டு வந்தார். மங்களம் மௌனமாக ஒரு தம்ளர் பாலை மாமாவின் அருகில் வைத்தாள். மாமா காப்பி அருந்துவதில்லை. பாலைப் பருகிவிட்டு முருகனின் கருணை வேண்டித் தாம் இயற்றிய பாடல்களைப் பாடிக் காண்பித்தார் மாமா. ரகுவின் பெருமைகளைச் சாங்கோபாங்கமாகவும் எடுத்துரைக்க ஆரம்பித்தார். கேட்கக் கேட்க ஆனந்தமாக இருந்தது. என்னுடைய உயிர்த் தோழன், மாமாவின் அருமைப் பிள்ளை, மாமியின் வாத்ஸல்யக் குமாரன் இவ்வளவு உயர்ந்த நிலையில் செல்வாக்குடன் இருப்பதை எண்ணி, எனக்கே அத்தனை பாக்கியங்களும் வந்து விட்டதாக நினைத்து உள்ளம் மகிழ்ச்சி எய்தியது. சர்க்காரில் ரகுவுக்கு அளித்திருக்கும் பங்களா, தோட்டம் முதலிய வசதிகளை மாமா விவரித்தபோது என் வீட்டுப் பழைய சுவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்தன. அங்கே குளிப்பதற்குக் குழாயைத் திருகினால் வெந்நீரும், குளிர்ந்த நீரும் 'ஷவரா'கக் கொட்டுமாம். பங்களாவின் ஹாலில் மாட்டியுள்ள உயர்ந்த பிரஞ்சு நாட்டு வண்ணப் படங்களின் மகிமையைக் கேட்கவே தனிக் காதுகள் தேவை! என்றாவது ஒரு நாள் 'பிரெஞ்சு பெயின்டிங்' படம் இங்கேயும் ஒன்று மாட்ட வேண்டியதுதான். எத்தனை நாட்களுக்கு மௌனமாகக் கண்மூடி உலகையே மறந்திருக்கும் ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் படத்தையும், தலைக்குமேலே வேலையும் தாங்கிக் கொண்டு 'எதற்குமினி அஞ்சேல்' என்று அபயஹஸ்த முத்திரையுடன் இலங்கும் குமர குருபரனின் படத்தையும் அலுக்காமல் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

ரகுவுக்குக் குழந்தைகள் இல்லையே என்ற ஆதங்கம் மாமாவின் பேச்சில் வெளிப்படாமல் இல்லை. ஆயினும் அதை வெளிக்காட்டிக்


பரம்பரை சௌந்தர்யத்தைக்
குறிக்கும் தூண்கள்...
அரவிந்த்
SANFORIZED
Arvind Quality
அரவிந்த் மில்ஸ் லிமிடெட்

கொள்ளாத சாமர்த்தியம் அவருடைய தனி மகத்துவம்!

கிளம்பும்போது மாமா கேட்டார்: "குழந்தைகள் எல்லாம் ஏன் 'தேநு' என்று இருக்கின்றனர்?..."

எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை!

எட்டு மணி சுமாருக்கு வெளியே குழந்தைகளின் கூச்சல் கேட்டது. உள்ளே 'கனக தாராஸ்தவம்' சொல்லிக் கொண்டிருந்தேன். அன்று வெள்ளிக்கிழமை. மங்களம் எண்ணெய் ஸ்நானம் செய்துவிட்டு நாகரிகமில்லாத விறகு அடுப்பில் அம்பிகையின் நிவேதனத்துக்கு வெல்லப் பாயசம் வைத்துக் கொண்டிருந்தாள்.

மூடியிருந்த கண்கள் திறந்ததும், மகாலக்ஷ்மி சொரூபமாய் மாமி வைரக் கோலத்தில் காட்சியளித்தாள். குழந்தைகள் வைத்த கண் வாங்காமல் மாமியையே பார்த்துக்கொண்டிருந்தன. பணக்கார ஸ்திரீ யாரையுமே இவ்வளவு நெருக்கத்தில் அவர்கள் பார்த்தது இடையாது! எல்லோருமே எண்ணெய்க் குளியல் முடிந்த பரட்டைத் தலைகளுடன் அலங்கோலமாக நின்று கொண்டிருந்தார்கள்.

மங்களம் பணிவுடன் வந்து நமஸ்கரித்தாள். பலகை ஒன்றை எடுத்துப் போட்டு மாமியை அமரச் செய்து பாடலைத் தொடர்ந்தேன்.

"கமலே கமலாக்ஷ வல்லபே..."

பிரார்த்தனை முடிந்ததும் சாவகாசமாகப் பேச ஆரம்பித்தோம். மாமி ஏதோ ஞாபகம் வந்தவள் போல் கேட்டாள்.

"ஏண்டா...உனக்கு எத்தனை பெண்கள்? எவ்வளவு பிள்ளைகள்...?"

மூன்று பெண்களையும், இரண்டு பையன்களையும் எண்ணிக்கை பிரித்துச் சொன்னேன். ஒவ்வொரு பிரசவத்தில்போதும் வீட்டுக்கு வந்து குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தும் பிரசாரகியின் வாய்வீச்சுக்கு முன் தலை காட்டாத கூச்சம், இப்போது மாமியின் கேள்விக் கணை முன் எங்கிருந்தோ ஓடிவந்து தலை வணங்கி என்னுள் ஒரு புதிய அவஸ்தையை உண்டுபண்ணியது!

நான் வாங்கும் சம்பளத்தில் சாப்பிட்டுக் குடித்தனமும் பண்ண முடியுமா என்ற சந்தேகம் நீங்காமலேயேதான் மாமி எங்களிடம் விடைபெற்றுக் கொண்டாள்.

ரயில் போக்குவரத்து நிலைமை சீரடைந்து விடவே மாமாவும் மாமியும் வடக்கே ரகுவின் இருப்பிடத்துக்குப் பயணம் கிளம்பினார்கள். எதிர் வீட்டுக்கே நானும் மங்களமும் போய் வழியனுப்பினோம். அவர்கள் ஆசியைப் பரிபூரணமாக வேண்டி நமஸ்கரித்தோம். மாமியின் பாசக் குரல் பரிவுடன் ஒலித்தது!

"ரொம்ப சம்சாரியாகி விட்டாய்! சமர்த்தாகக் குடித்தனம் பண்ணு! நிஜமாகவே பெரிய சம்சாரியாகி விட்டாய்! கஷ்டமில்லாமல் அமோகமாக இருக்க வேண்டும்."

மாமா வெண்கலக் குரலில் சொன்னார்:

"டேய்! இருக்கிற இந்தக் குழந்தைகளுடனேயே ரொம்பவும் சமர்த்தாக நோய் நொடி இல்லாமல் இருக்க வேண்டும்."



"ஆ:.. ஆ... என்ன ஷாமி! இந்தப் பக்கிரியை இப்படிக் கேவலம் பண்ணக்கூடாது. கிழிஞ்ச பெரிவின் சட்டையைத் தவிர இந்தப் பக்கிரி இந்த மாதிரி பாப்லின் சட்டையைக் கையாலே கூடத் தொடமாட்டான், ஷாமி!"

பூவாணமாக மாமாவிடமிருந்து சிரிப்பு உதிர்ந்தது!

மனம் கூசியது! இந்தக் காலத்தில் மாமாவிடமும் மாமியிடமும் சமர்த்துப் பட்டம் வாங்குவது அவ்வளவு சுலபமானதா? மாமா எவ்வளவு நல்லவர்! மாமியின் அன்புதான் நிறைவில் குறைந்ததா? ரகுவோடு சிறு வயதில் கூடப் படித்தவன் என்பதற்காக என்னிடம் அவர்கள் காட்டிய பாசத்துக்கு எதையேனும் ஈடு சொல்ல முடியுமா? இவ்வளவு உயர்ந்தவர்களின் எண்ணத்தில் ஒரு நைப்பு ஏற்பட்டு விட்டதாக நான் நினைப்பது தவறாக இருக்கக் கூடாதா?

வீட்டில் தனியாக விட்டு வந்திருந்த குழந்தைகளின் ஞாபகம் உந்தவே, சீக்கிரம் கிளம்பினோம். உள்ளே நுழைந்து அம்பிகையின் படத்துக்கு முன்னால் வந்து நின்ற போது எண்ணங்கள் அலைந்தன.

எவ்வளவு சௌபாக்கியங்கள் பெற்று என்ன? குழந்தைச் செல்வம் இல்லாவிடில்?..

கருத்தடைப் பிரசாரமும், குடும்பக் கட்டுப்பாடு கோஷங்களும் மலிந்து கிடக்கும் இந்த நாட்களில் கூட, சந்ததி இல்லையே என்ற ஏக்கம் மனிதனை விட்டு அகலுவதாக இல்லை தான்.

மாமாவும் மாமியும் எவ்வளவு உயர்ந்தவர்கள். பேரனோ, பேத்தியோ இல்லையே என்ற வேதனையை அவர்களாலேயே மறைத்துக்கொள்ள முடியவில்லையே!

இருவரும் ஊர் கிளம்பிச் சென்றுவிட்டனர். அந்தராத்ம சுத்தியுடன் இறைவனை வேண்டிக் கொண்டேன்.

"ரகுவுக்கு நிறைய சந்தான பாக்கியத்தைக் கொடு! ஏழைகளை மாத்திரம் பாக்கிய சாலிகளாக வைக்காதே!"

வட்ட மேஜை

* நெல் மணிகள்
* வேண்டாம்!
* அதிகாரிகளுக்குத் தராசு
* சர்ச்சை பற்றிய சர்ச்சை

சில வாரங்களுக்கு முன்னால் கல்கி பல்சுவைப் பகுதியில் 'ஒரு படி நெல்லில் 14,400 நெல்கள் உள்ளன' என்பதாகக் குறிப்பிட்டுவிட்டு, 'வேணுமானால் எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்களேன்' என்றும் கவடமாகக் கூறப்பட்டிருக்கிறது. உண்மையில் பட்டணம் படி ஒரு படி நெல்லில் 45,000 முதல் 67,500 வரை மணிகள் உண்டு.

சென்னை அரசினர் வெளியிட்டுள்ள விவசாயப் புள்ளி விவரங்கள் என்ற புத்தகத்தில் ஒரு பவுண்டு விதையில் 18,000 முதல் 27,000 மணிகள் வரையில் இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு பட்டணம் படி நெல் 2.5 பவுண்டு எடையுள்ளதாகும். வேணுமானால் கணக்குப் போட்டுச் சரி பார்த்துக் கொள்ளுங்களேன்!

திருச்சி-3
20–9–65 டாக்டர் வி. ராமமூர்த்தி

அக்டோபர் 10ம் இதழில் பாகிஸ்தானையும், இந்தோனேசியாவையும், பயில்வான்களாகக் காட்டி இந்தியாவை நோஞ்சானாகத் தெரிவித்து ஒரு கேலிச் சித்திரம் கல்கியில் போட்டிருக்க வேண்டாம்.

மேட்டூர் அணை
14–10–65 ஆர். ஜெயராமன்

நெல் கொள்முதலுக்கு ஒரு தராசு கொடுத்து அதை உபயோகித்துத்தான் நெல் எடுக்க வேண்டுமென்று சட்டம் போட்டதாகத் தெரியவில்லை. அந்த மாதிரி தராசைக் கொண்டு நெல் தூக்கித்தான் லெவி அளக்க வேண்டுமென்று கட்டளை இடாத காரணத்தால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராம அதிகாரியும் அவரவருக்கு இஷ்டமான மரக்கால், வட்டி, பறை முதலிய கருவிகளை உபயோகித்து நெல் அளக்கிறார்கள். இந்த அளவுப் பிரகாரம் 57 கிலோவுக்குப் பதிலாக 70 முதல் 75வரை கொண்டு போகிறார்கள். அவர்களிடம் கேட்டால் நீங்கள் தராசைக் கொண்டு வாருங்கள் என்று சொல்லுகிறார்கள். இது நியாயமா? லெவி கொடுக்கும் விவசாயி ஒவ்வொருவரும் தராசு வைத்திருப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு கிராமத்துக்கும் கிராம அதிகாரிகள் மட்டும் வைத்திருந்தால் போதுமே. எல்லாக் கிராம அதிகாரிகளுக்கும் தராசு இல்லாமல் நெல் அளக்கக் கூடாது என்று உத்தரவு இட வேண்டும்.

தலக்குளம்
10-10-65 கடலையாண்டி பிள்ளை

சுவையான சர்ச்சைகள் பகுதியில் திரைப் படங்களும், மாணவர்களும் பற்றிய கருத்துக்களைக் கண்டேன். நான் ஒரு கல்லூரி மாணவன். சென்னை அரசினர் கலைக் கல்லூரியில் படிக்கிறேன். திரைப் படங்கள் மாணவர்களுடைய அறிவை மட்டுமின்றி மற்றும் பண்பு, நன்னடத்தை முதலியவற்றையும் நாசம் செய்கின்றன என்றே நான் அடித்துக் கூறுவேன்.

சினிமா பார்க்கும் போது இருக்கும் இன்பம் கால்குலஸிலோ அல்லது எகனாமிக்ஸிலோ வருமா என்பவர்கள், இன்பம் எது என்பதை உணரவில்லை என்று அர்த்தம். முதலில் எது இன்பமாயும் பின் துன்பமாயும் மாறுகிறதோ அது உண்மை இன்பமில்லை — இது பாரதம் கூறும் உண்மை.

கால்குலஸிலும் பொருளாதாரத்திலும் இன்பம் இல்லை என்று யார் கூற முடியும்? ஊணும் உறக்கமும் மறந்து கணிதத்தையே காதலித்து, கணிதத்திலேயே இன்பம் கண்டவர் ஒருவர் நமது ஸ்ரீநிவாஸ ராமானுஜம். ஒரு கால்குலஸ் கணக்கை, அதுவும் சிக்கலான கணக்கை அரை மணி நேரம் போட முடியாமல் திண்டாடி, தடுமாறி, ஒரு மாணவன் மண்டையை உடைத்துக் கொண்டு சிந்தித்துக் கடைசியில் அதைப் போட்டு முடிக்கும் போது ஏற்படும் கர்வம், பெருமிதம், மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. கடுமையான உழைப்புக்குப் பின் எதிர்ப்புக்களைக் கடந்த பின் ஏற்படும் மகிழ்வே உண்மையான மகிழ்வு. எளிதில் கிடைக்கும் பொருளில் இன்பம் இல்லை.


மூளை களைத்துப் போன மாணவனுக்கு ஒரு சிறந்த சாதனம் சினிமா என்று பல மாணவர்களால் கருதப்படுகிறது. தாமஸ் ஆல்வா எடிசனைப் பலரும் அறிவார்கள். ஆராய்ச்சிகள் பல செய்து களைத்து வீடு திரும்பிய அவரை நோக்கி அவரது துணைவியார் களைப்பைப் போக்க எங்காவது வெளியில் செல்லுங்களேன் என்றாளாம். எடிசன் தமது களைப்பைப் போக்கிக் கொள்ள எங்கு சென்றாராம் தெரியுமா? மறுபடியும் சோதனைச் சாலைக்கே சென்றாராம். வேலை செய்யும்போது வேலையில் வேலையின்மையைக் காண்பவனே அறிஞன்.

மாணவர்கள் சினிமாப் பாட்டுக்களைப் பாடுகிறார்கள். சினிமாப் பாட்டில் அப்படி என்ன கருத்து இருக்கிறது? ''பொழுது விடிந்து விடும், விடிந்தால் இரவு முடிந்துவிடும்'' என்ற பாட்டில் எத்தகைய தத்துவம்-பாருங்கள்! பாஷ்யம் எழுத வேண்டிய வரிகள்!

சினிமாவுக்கும் கிரிக்கெட் மாட்சுக்கும் மாணவன் செலவு செய்யும் பணத்தை மீத்துப் புத்தகங்கள் வாங்கலாம், அல்லது உபயோகமாக ஏதாவது செய்யலாம். பொழுதைப் போக்க உலாவலாம். பூங்காவுக்குச் செல்லலாம். பணமும் மிச்சம், உடலுக்கும் உள்ளத்துக்கும் நல்லது.

சென்னை–2
6–10–65 கே. சீனிவாசன்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10



No. M. 4392
stered as a Newspaper in Ceylon

